கோவை நகரச் சிறப்பிதழ்

கல்கி

KALKI 27.9.92

ரூ. 3.00



போதை அரக்கனுடன் போராடும் கீதா

- கோல்ஃப் ஆட்டச் சாதனையாளர்
- நேற்றுவரை நூல் வியாபாரிகள்; இன்று மில் முதலாளிகள்!
- "கோமதி மாமி, உங்களைத்தான் நம்பியிருக்கோம்!"
- கலெக்டர் பேட்டி

மற்றும் பல கலகலச் செய்திகள் •


பாலியெஸ்டர் சேலைகள்
மற்றும்
டிரஸ் துணிகள்
பாம்பே
டை.யிங்
BD/450-TAM

''மாமி, உங்களைத்தான் நம்பியிருக்கோம்!''



* கோமதி மாமி...

''ராத்திரி இரண்டு மணி. இன்ஸ்பெக்டர் ஒருவர் இறந்து போய்ட்டார். மனைவி, பையன், வெளியூரில்... அவர்கள் வந்துதான் எல்லாம் செய்ய வேண்டும். அவர்கள் வரும் வரை சடலத்துக்குக் காவல் போல் கூடவே இருந்தேன். பிறகு பையன் வந்ததும் சடங்குகள் செய்ய மயானத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்தேன்.... இதெல்லாம் எனக்கு இப்போது சகஜமாகப் போய் விட்டது'' என்று சொல்லும் கோமதி மாமிக்கு வயது 57.

சாதாரணமாக ஆண்கள் கூட வரத் தயங்கும் மயான பூமிக்கு. சகல ஏற்பாடுகளுடனும் வந்து சடங்குகளை நடத்தி வைக்கிற ஒரே பெண்மணி கோயமுத்தூர் கோமதி மாமியாகத்தான் இருக்க முடியும்.



* கற்பகம்

''எப்படி இந்தத் தொழிலுக்கு வந்து சேர்ந்தீர்கள்?''

''கணவர் என்னை நிராதரவாக விட்டு விட்டுப் போய் 32 வருஷமாகிறது... ஆரம்பத்தில் புரோகிதம் செய்கிற குப்பு வாத்தியார்தான் என் கஷ்டத்தைப் பார்த்து விட்டு, கல்யாண வீடுகளில் சமையல் வேலைக்குச் சிபாரிசு செய்தார். கல்யாணங்களுக்குச் சமைக்க ஏற்றுக் கொண்டு, பிறகு சிரார்த்தம் முதலியவற்றுக்கும் வீடுகளில் சமைக்கப் போனேன்... அப்புறம் ஒரு சாவு வந்த போது, துணைக்கு யாரும் இல்லாமல் ஒரு குடும்பம் கஷ்டப்பட, இத்தகையவர்களுக்குக் கூட உதவி செய்யலாம் போலிருக்கே என்று தொடங்கினேன்....

''ஆனால் காட்டில், சிப்பந்திகள் 'தண்ணி'யில்தான் அதிக நேரமும் இருப்பார்கள். அதிலும் ஒரு பொம்மனாட்டி இந்தத் தொழிலுக்கு வந்து விட்டால் கேட்கணுமா? ஆரம்பத்தில் எரிக்க விடாமல் அவஸ்தைப்படுத்தினார்கள். 'மந்திரம் சொல்லணுமா வேண்டாமா? காரியங்கள் நடக்கணுமா வேண்டாமா? ஏன் இப்படி ரகளை பண்ணுகிறீர்கள்?' என்று புரோகிதர்கள் சண்டைக்கு வந்து விடும் நிலைமை இருந்தது. நான் அவர்களிடம், 'இப்படி தாங்க முடியாத ரகளை பண்ணினால் நான் என்ன செய்வேன்? போலீஸில்தான் நான்

[redacted]

முறையிட வேணும்' என்று சொன்னேன், வேறு வழியில்லாமல்.''

''போலீஸ் உதவி கிடைத்ததா உங்களுக்கு?''

''ஓ! எஸ்.ஐ. வந்தார். முடிக்கிற வரை கூடவே இருந்தார். இப்பவும் ஏதாவது தகராறு என்றால் போன் பண்ணின உடனே உதவிக்கு வந்து விடுகிறார்கள்.''

இப்போது கோமதி மாமிக்கு உதவி செய்ய பரமாத்மா (நல்ல பெயர்!) இருக்கிறான். ஆட்டோ ஓட்டுனர் செல்வம், இரவு பகல் என்று பாராமல் மாமிக்கு நிழல் மாதிரி இருந்து உதவுகிறார். துரை வாத்தியார், ''நான் இருக்கிறேன். என்ன பயம்?'' என்று கேட்கிறார், ''அப்புறம் நான் எதற்குப் பயப்பட வேணும்?'' என்று கேட்கிறார் கோமதி மாமி. இப்போது இவரை நம்பிப் பத்து குடும்பங்கள் பிழைப்பு நடத்துகின்றன.

டெல்லி கணேஷின் சித்தி காலமான போது, இவர் செய்கிறதைக் கவனித்து விட்டு அசந்து போய் விட்டாராம் அவர். அப்புறம் ரொம்பவும் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

சம்பூர்ணா அறக்கட்டளை வழங்கியிருக்கும் வேனைத்தான் கோமதி மாமி பயன்படுத்துகிறார். கயிறு, சொம்பு சகிதம்

டிரைவர் சீட்டுக்கு அருகே முன்பக்கத்தில் அமர்ந்து கொண்டு தைரியமாக மயானம் செல்கிறார். சாஸ்திரிகள் விட்டு விடும் மந்திரங்களைக் கூட நினைவிலிருந்து சட்டென்று எடுத்துச் சொல்லுகிறார்.

''அரிசி, சட்டி, காடாத் துணி, கயிறு என்று வீட்டில் பத்தாயிரம் ரூபாய்க்கு எப்போதும் எல்லாச் சாமானங்களும் இருக்கும்... போன வாரம் கூட ஒரு குடும்பத்திலிருந்து செய்தி வந்தது. 'ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. ராத்திரி 12 மணிக்கு மேல் பிள்ளை வந்துதான் எல்லாம் ஆரம்பிக்கணும். மாமி, உங்களைத்தான் நம்பியிருக்கோம்!' என்றார்கள். பிள்ளை வந்த பிறகு எல்லாம் செய்து கொடுத்தேன்.''

பன்னிரண்டு நாள் காரியங்களும் முடிகிற வரை கூடவே இருக்கிறார் கோமதி மாமி. அடுத்தது, அடுத்தது என்று பறந்து கொண்டே இருக்கிறார். ''ஒரு நாளைக்கு ஆறு கிரியைகள் வரை கூட சமாளித்து விடுவேன். அங்கே நின்று கொண்டே வேனை அனுப்பி விடுவேன். வேன் டிரைவர் புஷ்பராஜ் எனக்கு ரொம்ப ரொம்ப ஒத்தாசை செய்கிறான். எப்படி பேசி சமாளிக்கணுமோ அப்படிச் செய்வான். நேத்து ராத்திரி கூட 11 மணிக்கு ஒரு 'பாடி.'....''

''நீங்கள் உ ட ம் பு சரியில்லாமல் போனாலோ, வெளியூர் போனாலோ என்ன செய்வீர்கள்?''

''இதோ என் பெண் கற்பகம் இருக்கிறாள்!'' என்று மாமி ஓர் இளம்பெண்ணைக் காண்பித்த போது தூக்கிவாரிப் போட்டது. கல்யாணமாகி, குழந்தையும் இருக்கிற கற்பகத்தை, கணவர் கைவிட்டு விட்ட சோகம் முகத்தில் இழையோட, ''அம்மா 15 நாள் வெளியூர் போயிருந்த போது நான்தான் கவனித்துக் கொண்டேன்... பயமே போய் விட்டது!'' என்றார் கற்பகம், சகஜமாக.

''எனக்கு வாரிசு!'' என்றார் கோமதி மாமி. அந்தக் குரலில் வெ று ப் போ, துயரமோ தென்படவில்லை.

முப்பது வருஷத்துச் சோகத்தையும் சுமையையும் இன்னொரு தோள் மேல் இறக்கி விடக் கிடைத்த ஆசுவாசம் கோமதி மாமியிடம் தெரிந்தது.



* சுத்தம் செய்யப்பட்ட வட்டாரத்தின் ஒரு சிறு பகுதி



* சாயர், மகள், மருமகன்.

நெஞ்சு கனக்கச் செய்யும் இந்தியா!

- கோவைவாழ் ஜெர்மானியரின் ஆதங்கம்

திருமதி கௌசல்யா ஸ்ரீவத்ஸலாவிட மிருந்து கடிதம் வந்திருந்தது : ''கோவை, பீளமேட்டில் ஜெயவர்த்தனவேலு நகர்ப் பகுதியில் குடியிருக்கிறது ஒரு ஜெர்மானியக் குடும்பம். அவர்களை, குறிப்பாக முதியவர் திரு. சாயரை நீங்கள் வந்து சந்திக்க வேண் டும். அவர் பணி பற்றி எழுத வேண்டும்!''

கோவையில் விசாரித்ததில், அடை யாளம் காட்டப்பட்ட பங்களாவில்....

''நான்தான் சாயர்... பீட்டர் சாயர். இது என் மகள் ஈபி. பெர்ன்ட் ப்ருய்லி என் அன்பு மருமகன். RIETER நிறுவனத்தில் இஞ்ஜினியர். அந்த நிறுவனத்தின் சார்பாக இங்கே லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸிற்கு அனுப் பப்பட்டிருக்கிறவர். உதவிக்கு, ஒரு மாறு தலுக்கு என நானும் வந்தேன். இந்தி யாவை எனக்குப் பிடித்திருக்கிறது.''

''அது சரி, வந்தவர் சும்மா இராமல், சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்குப் பாடுபடு கிறீர்களாம்?''

சில விநாடிகள் கண்களை மூடி யோசனை. பிறகு :

''அப்படியொன்றும் பிரமாத சாதனை புரிந்து விட்டதாக நான் கருதவில்லை. என் றாலும் நடந்தது நாலு பேருக்குத் தெரிய வருவது நல்லது என்பதால் சொல்லி றேன்.'' அடக்கமான முன்னுரைக்குப் பிறகு தொடர்கிறார் :

''இங்கே வீடுகளெல்லாம் துடைத்த பதக்கங்கள் போல வைத்துக் கொள்கிறார் கள். ஆனால் சுற்றுப்புறங்களோ மகா மோசம். சாக்கடை மூடிகளின்றி. தெரு வெங்கும் சாணம், குப்பை மேடுகள், முட் புதர்கள், பார்த்தீனியக் காடுகள்... இந்த மாசு நம்மை மட்டுமா பாதிக்கும்? நம் தவறு வருங்காலச் சந்ததியையெல்லாமல் லவா பாதிக்கும்? அதற்கு நமக்கு யார் உரிமை கொடுத்தார்கள்?''

நியாயமான கோபத்துடன் கேட் கிறார்.

''தவிரவும், சுற்றுப்புற சிறுவர்கள் விளையாட நிலமில்லாமல் அந்தக் குப்பை



* "நமது தவறுகள் வருங்காலச் சந்ததிகளையல்லவா பாதிக்கும்?"

மேடுகளில் வளைய வந்ததும் என்னைக் கவலைப்பட வைத்தது. வீட்டின் பக்கவாட்டில் சாக்கடைக் கால்வாய் ஒன்று ஓடுகிறது. அகலம் சிறியதுதான். எனினும் வயதானவர்களும், கர்ப்பிணிப் பெண்களும் அதைத் தாண்டுவதற்குப் படும் சிரமம் என் பார்வையில் பட்டது. வெறுமனே யோசித்துக் கொண்டிருப்பதை விட, நிஜத்தில் முயலலாமே என முடிவு வந்தது.

"சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் சொன்னேன். அவர்கள் உடனே வந்து சாக்கடை மண்ணை வாரி ஓர் ஓரமாகச் சிறு குன்று போல குவித்து விட்டு மறைந்தனர்! இந்த இந்திய முறை விநோதமாய் இருந்தது. களத்தில் நானே இறங்கினேன்.

"முதலில் செய்த காரியம் சாக்கடைகளைக் கடக்க மரப் பாலங்களை அமைத்ததுதான். வெகு சின்னக் காரியம். சிலர் அது திருட்டுப் போய் விடும் என்றார்கள். ஆனால் மரப் பலகைகள் காணாமல் போகவில்லை. நிம்மதி. அடுத்து அந்தப் பலகைகளை எடுத்து விட்டு சிமெண்ட் பலகைகளாக மாற்றி வலுவாக்கினேன். கடக்கும் யார் யாரோ சந்தோஷப்பட்டார்கள்."

சாயர் நம்மை அழைத்துப் போய்க் காட்டுகிறார்.

"அடுத்ததாய் சுற்றுப்புற கிரவுண்டுகள். உள்ளூர்க் கருவிகள் பழக்கமில்லாததால் ஜெர்மானிய உபகரணங்கள் பெற்று வேலை துவக்கினேன். முட்புதர்களை வெட்டினேன். விஷம் என்ற எச்சரிக்கையை ஒதுக்கி, பார்த்தீனியக் காடுகளைத் தீ வைத்து அழித்தேன். என் உழைப்பின் பலனாய் ஏற்படும் மாற்றங்கள் தினசரி காலை எழுந்ததும் கண்ணில் படும். உடனே உத்வேகம் வர அடுத்த கட்ட பணியைத் தொடங்குவேன்.

"ஊட்டியில் படிக்கும் என் பதின்மூன்று வயது பேத்தியும், பத்து வயது பேரனும் விடுமுறைகளின் போது வந்து உதவுவார்கள். ஒரு வருஷத்துக்கு மேல் உழைத்ததில் பலன் கிடைத்தது. சூழ்நிலையே மாறிப் போயிற்று. ஒரு கட்டம் வந்ததும் லக்ஷ்மி மிஷின் ஒர்க்ஸ் நிறுவனத்தை என் மருமகன் வழியாக அணுகினேன். லாரி, மணல் என உதவி உற்சாகப்படுத்தினார்கள். என் முயற்சியை ஒரு செம்மண் பாதையாக முக்கிய சாலை வரை நீடித்தேன்.

"பக்கத்தில் தயாரான மைதானத்தில் பையன்கள் கிரிக்கெட் விளையாடும் ஓசை கேட்க ஆரம்பித்தது. என் உள்ளம் நிறைந்தது. அந்தக் குழந்தைகளும் தங்கள் அன்பை வெளிப்படுத்த தபால் நிலையம், கடைகள் என்று சென்று வந்து எனக்கு உதவுவார்கள். அந்த அன்பு என் உள்ளம் தொடும்."

கண்மூடித் திறக்கிறார்.

"அவர்களுக்காகக் கால்பந்து வாங்கி, விளையாடச் சொல்லி பரிசளித்தேன். வீட்டுக்கு RIETER நிறுவன ஊழியர்கள் சிலர் வந்த போது நடந்தது அறிந்து, ஸ்விட்சர்லாந்திலிருந்து உலகத் தரம்வாய்ந்த கால்பந்துகளை வரவழைத்து, சிறுவர்களுக்கு வழங்கி, என்னைக் கௌரவித்தனர்."

பெருமூச்சு வருகிறது சாயருக்கு.

"இத்தனையிலும் எனக்குச் சிறு சிறு வருத்தங்கள் உண்டு. அவரவரும் அவரவர் பகுதியைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொண்டால் என்ன தவறு? அதுவே ஒட்டுமொத்த அழகாக மலராதா? உணராமல் என்னை வேதனைப்படுத்துகிற விதமாக மறுபடி வீடுகளிலிருந்து குப்பைகளை வெளியில் வீசுகிறார்கள். கார்ப்பரேஷனில் பேசித் தருவித்த சிமெண்ட் தொட்டியை முழுமையாகப் பயன்படுத்தாமல் அதன் சுற்றுப்புறமெல்லாம் குப்பைக் குவியல்."

வேதனைப்படுகிறார்.

"உங்கள் தேசத்தில் மனிதசக்தி ஏராளம். புரிந்து, முயன்றால் எதையும் சாதிக்கலாம். ஆனால் ஏன் இல்லை? என் உழைப்பில் பங்கு பெறாதது பற்றிக் கூட வருத்தமில்லை. அதைத் தொடர மாட்டார்களா என்பதுதான் என் ஆதங்கம்!"

நெஞ்சக் கனம் அழுத்தப் பேசும் சாயருக்கு ஏற்கெனவே ஒருமுறை ஓபன் ஹார்ட் சர்ஜரி நடந்திருக்கிறது.



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.


அரிசி சேர்த்த நெஸ்டம், போஷாக்கு நிறைந்த சீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப் பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.



* வி. ரோசரி



* ராஜகோபால்



* டி.வி. ரத்னம்

கோவையின் நெற்றித் திலகம் போல் திகழும் லக்ஷ்மி மில்லின் அதிபர் கே. ராஜகோபால் அவர்களைச் சந்தித்தோம். இவர் தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் கூட. அன்றைய - இன்றைய நிலைகள் பற்றி அவர் அழகாக எடுத்துச் சொன்ன போது தமிழ்நாட்டிற்கே திலகம் கோவைதானோ என்று வியப்பு ஏற்பட்டது.

* அன்னாசியிலிருந்து துணி



நேற்று வரை நூல் வியாபாரிகள்; இன்று ஆலை முதலாளிகள்!

● ஆரம்பத்தில் கோவையில் நூற்பு ஆலைகள்தாம் அதிகம். நெசவு ஆலைகள் மிகக் குறைவு. கோவையும், அதைச் சுற்றியுள்ள 120 கிலோ மீட்டர் வட்டாரமும் தான் உலகிலேயே, மிகப் பெரிய ஜவுளித் துறை கேந்திரம். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, சேலம், கோவை, மதுரை, திருச்சி நகரங்களிலுள்ள கைத்தறித் தேவைகளுக்கு இங்கிருந்துதான் நூல் விற்பனையாகிக் கொண்டிருந்தது. அதுதான் கோவை இப்படி கேந்திர முக்கியத்துவம் பெறக் காரணம்.

● வடக்கே உள்ள ஆலைகளின் 60 சதவிகித நூல் தேவையை நாம்தான் கொடுத்து வருகிறோம். தொழில் நுட்பத் திறனில் மட்டுமல்லாது, திட்டமிடுதலிலும், பராமரிப்பிலும், தயாரிப்புத் துறையிலும் வடக்கைக் காட்டிலும் வெகுவாக முன்னேறி விட்டோம்.

● கோவை மில்களிலிருந்துதான் அதிகபட்சம் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

● இந்த வருடம் பருத்தி விலை உயர்வு காரணமாக ஆலைகளின் உற்பத்தி குறைந்து விட்டது. புதிய பருவம் அக்டோபர் நவம்பரில் துவங்கும். விளைச்சலைப் பொருத்தே உற்பத்தி அமையும்.

● கோவை மில்கள் மட்டும் வெற்றிக் கதைகள் சில சொல்ல முடிகிறது என்றால், அதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது

வெற்றி கூறும் கோவையும் வெண்சங்கு ஊதும் ஆலையும்!

தொழிலின் எதிர்காலம் எப்படியிருந்தாலும், தெளிவான கொள்கைகள் சிலவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதுதான். நவீனமயமாக்கலும் தரக்கட்டுப்பாடும் பிற காரணங்கள். தப்பித் தவறி பருத்தி, நூல், துணி வணிகர்களில் யாரேனும் நஷ்டமடைய நேரிட்டால் அவர்களுக்குப் பரிவு காண்பிக்க நாங்கள் தயங்குவதில்லை. அதனால்தான் அவர்கள் ஆலை நிர்வாகத்துடன் நேசமும் பாசமும் கொண்டு பழகுகிறார்கள். இந்த ஓர் ஒட்டுறவு காரணமாகவே, நேற்று வரை நூல் வியாபாரிகளாக மட்டுமே இருந்து வந்தவர்கள், பலர், இன்று ஆலை முதலாளிகளாக உயர்ந்து விட்டனர்!

● ஜவுளி ஆலைத் தொழிலின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். வாழ்க்கைத் தரம் கூடுவதால் வாங்கும் சக்தி பெருகுகிறது. நமது நூல்களைச் சர்வதேசச் சந்தையிலும் விரும்பி ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

● செயற்கை இழைத் துணிகள் சாமானிய மக்களுக்கு மிகவும் உகந்தவை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக விலை அதிகம். காரணம், அதில் பாதிக்கு எக்ஸைஸ் ட்யூடி, விற்பனை வரி! கடந்த ஆண்டு பட்ஜெட்டில் கூட இதற்குக் காண்பிக்கப்பட்ட சலுகை மிகக் குறைவு.

வட இந்தியத் தொழிலதிபர் சிங்கானியா போலவே, ராஜகோபாலும் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்று லைசன்ஸும் வாங்கி வைத்திருக்கிறார். சொந்தமாக ஆறு இருக்கைகள் கொண்ட விமானமும் வைத்திருக்கிறார். பேட்டி முடிந்ததும் கோயில்பட்டிக்குக் கிளம்ப அதன் பைலட்டுடன் தயாராக இருந்தார்.

அன்னாசிப்பழ இலையிலும் சன்னத்துணி நெய்யலாம்!

"வாரத்தில் ஏழு நாட்களும், ஒரு நாளில் இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் மில்கள் உலகில் இரு இடங்களில்தான் உள்ளன. ஒன்று ஹாங்காங் மற்றொன்று கோவை!

"இன்று இந்தியாவில் உள்ள முதல்தர மில்கள் ஐம்பதைப் பட்டியலிட்டால், அதில் 90 சதவிகிதம் தென்னிந்தியாவில்தான் இருக்கும்; அதிலும் அதிகபட்சம் கோவையில்தான்!"

சொல்கிறவர், தென்னிந்திய ஜவுளித் துறை ஆராய்ச்சி நிலைய (South India Textile Research Association. சுருக்கமாக SITRA) இயக்குனர் டி.வி. ரத்தினம்.

ஜவுளி ஆலைகளின் புதிய கண்டுபிடிப்புகளுக்கும், கூடுதல் உற்பத்தித் திறனுக்கும் தகுந்த ஆலோசனைகள் வழங்க ஸைட்ரா 1956ல் தொடங்கப்பட்ட போது 45 உறுப்பினர்கள்தாம் இருந்தார்கள். இன்று உறுப்பினர் எண்ணிக்கை 450!

நொடித்துப் போகும் மில்கள் விஷயத்தில், அதற்கான அறிகுறிகளைக் கண்டவுடனேயே, சீராக்குவதற்கான யோசனைகளை 'ஸிட்ரா' வழங்குகிறது. "நவீனப்படுத்துதல் இருக்குமானால் நொடித்துப் போகும் பிரச்னையே எழாது!" என்கிறார் ரத்தினம்.

"முன்பெல்லாம், அதாவது சுமார் முப்பது வருடங்களுக்கு முன், நாம் இங்கிருந்து இங்கிலாந்து சென்று பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தோம். இப்போது நிலைமை மாறி விட்டது பாருங்கள். இங்கே உள்ள இன்ஸ்டிட்யூட்டுகள் பல, அயல்நாட்டிலிருந்து வரும் மக்களின் பயிற்சிக்கு வகை செய்கின்றன! இவர்கள் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் முதலிய நாடுகளிலிருந்தும் நிறையப் பேர் வந்து பயிற்சி பெறுகிறார்கள்!" என்கிறார் ரத்தினம்.

"சென்ற வருட ஜவுளித் துறை ஏற்றுமதி 12,500 கோடி ரூபாயாக இருந்தது. இந்த வருடம் 15000 கோடி ரூபாயை எட்டி விடுவோம்!" என்கிறார் ரத்தினம். ISO 9000 என்ற அகில உலகத் தர நிர்ணயத்துக்கு ஏற்ப உற்பத்தியானவை மட்டுமே ஏற்றுமதிக்கு ஏற்கப்படும் நிலையில், இது பெருமை தரும் புள்ளி விவரம் அல்லவா?

அன்னாசிப்பழ இலையிலிருந்து துணி நெய்ய முடியுமா? ஸிட்ராவின் அதிநவீன ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சி முடிந்து, துணியே நெய்து கண்காட்சியில் வைத்திருக்கிறார்கள்!

'ஸிட்ரா'வை ஒட்டியமைந்துள்ள கலைக் கூடத்தை, கோவைக்கு வருகிற யாரும் பாராமல் விட்டு விடக் கூடாது. நிறுவனத் தலைவர் காலம் சென்ற கே. சீனிவாசனின் கனவு மாளிகை இது. எத்தனை சிற்பங்கள், வண்ண ஓவியங்கள்! சித்துநுண்...

● இந்திரா துரைசாமி

பள்ளத்தாக்கு உடை வகைகள், ஜப்பானிய திருமண உடை, ஆதிவாசிகள் உடை என்று அந்த நாள் முதல் இந்த நாள் வரையிலான ஜவுளித் தொழில் சம்பந்தப்பட்ட அத்தனை படங்கள், கருவிகளின் அணிவகுப்பு பிரமிக்க வைக்கிறது!

கோவை மில் ஊழியருக்குத்தான் அதிகச் சம்பளம்

விரல் நுனியிலிருந்து புள்ளி விவரங்கள் என்றால் ஆர். எம். எஸ்ஸுக்குப் பொருந்தும். அலட்டிக் கொள்ளாமல் தெளித்து விடுகிறார் :

''தமிழ்நாட்டில் மொத்தம் இருக்கும் நூற்பு ஆலைகளும், நெசவு ஆலைகளும் 437 என்றால், அதில் கிட்டத்தட்ட பாதி - 195, கோவை மாவட்டத்தில் மட்டும் இருக்கிறது. அகில இந்தியாவில் எத்தனை தெரியுமோ? 1051. சரி அகில இந்தியாவிலும் 266 லட்சம் ஸ்பின்டில்கள் இருக்கின்றன என்றால், இதில் 76.68 லட்சம் தமிழ்நாட்டிலும், இதிலேயே 33.31 லட்சம் கோவை மாவட்டத்தில் மட்டும் இருக்கிறது. ஊழியர்கள் எண்ணிக்கை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1,79,450 என்றால், கோவை மாவட்டத்தின் பங்கு மாத்திரம் 74,236.

''இன்னொரு புள்ளி விவரத்தின்படி, இந்தியாவிலேயே அதிகப்படியாகச் சம்பளம் பெறும் ஜவுளி ஆலை ஊழியர்கள் கோவையில்தான் இருக்கிறார்கள்.

''கிட்டத்தட்ட 2000 ரூபாய். ஏனென்றால் விலைவாசிக் கு றி யீ ட் டெ ண் கோவைக்கு எத்தனையோ, அதைவிட அதிகமாக இருக்கும் சென்னைக் குறியீட்டு எண் அடிப்படையில்தான் அகவிலைப்படி கோவையில் கொடுக்கப்படுகிறது!''

இப்படி அடுக்கிக் கொண்டே போகிறார் கோவை வர்த்தக சபைத் தலைவரும், சிறு நூற்பாலைகள் சங்கத் தலைவருமான ஆர். எம். சுப்பிரமணியம். போதாக் குறைக்கு இவர் தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கத்துக்குச் செயலராகவும் இருந்து வருபவர்.

''நூல் ஏற்றுமதியைப் பொறுத்தவரை, ஏற்றுமதி அபிவிருத்தி கௌன்சில் சாதகமாக இல்லை. கோட்டா அடிப்படையில் கொடுக்கப்படுவதால், நமக்கு முழுப் பலனும் கிடைப்பதில்லை - குறிப்பாக ஐரோப்பிய பொருளாதாரச் சந்தையிலும், அமெரிக்க மார்க்கெட்டிலும். நம் குரல் சரியாக ஒலிக்கவில்லை என்பது என் குறை. நமக்குத் தனியே ஏற்றுமதி கோட்டா கொடுக்கப்பட்டால், நம்மால் இன்னும்

பட்டம் பெற்ற பின்னும் பயிர் வளர்க்கலாம்!

ஏரிசாராய ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்றவற்றிலிருந்து வெளிவரும் கழிவு நீரினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தின் மண் வளமும் பயிர் வளர்ச்சித் திறனும் பாதிக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம்.

கோவை ஜி. டி. நாயுடு விவசாயப் பல்கலைக் கழகத்தில் இத்தகைய பாதிப்பைக் குறைக்க என்ன செய்யலாம் என்று தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.


மேலும், அரசாங்கத்துடன் கைகோர்த்து விவசாயிகளுக்கு உதவுகிறது இந்தப் பல்கலைக் கழகம். எப்படி? ''எந்தெந்த இடங்களில் எந்தெந்த பயிர்களைப் பயிரிடலாம் என விவசாயத் துறை பரிந்துரை செய்ய, அதன்படி விளைவிக்க அறிவுரை வழங்குகிறோம்'' என்கிறார் விரிவாக்க விவசாயத் துறை பேராசிரியர் ஆலிவர்.

எண்ணூறு ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படும் இந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஜெயராஜ் Integrated Pest Management என்ற ஒருங்கிணைந்த பயிர்க்கொல்லி நிர்வாக ஆராய்ச்சிக்கு நிறைய ஊக்கம் அளித்து வருகிறார் - அதாவது ரசாயன பூச்சிக் கொல்லிகளை அடிக்கடி உபயோகித்து எல்லா வகைப் பூச்சிகளையும் அழித்து விடாமல், இயற்கைச் சமநிலையைக் காக்கும் கண்ணோட்டத்துடன் செயல்படுவது.

விவசாயக் கல்லூரியாக 1903 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1971 இல் பல்கலைக் கழக அந்தஸ்து பெற்ற இந்த முதிர்ந்த ஆலமரத்தின் விழுதுகள் ஐந்து இடங்களில் வேரூன்றியுள்ளன. திருச்சி (குமளூர்), திருநெல்வேலி (கிள்ளிகுளம்), மதுரை, மேட்டுப்பாளையம் (வனக் கல்லூரி) பெரியகுளம் (தோட்டக்கலைப் பயிற்சிக் கல்லூரி).

சிறு விவசாயிகளை மறந்து விடாமல் அவர்களுக்கு உபரி வருமானம் பெற்றுத் தரக்கூடிய கால்நடை வளர்ப்பு, பழ மரங்கள் வளர்ப்பு போன்றவை தொடர்பாகவும் அறிவுரை வழங்கி வருகிறது.


– ஈஸ்வர் குமார்



* கோவை, விவசாயப் பல்கலைக் கழகம்



மணமகன் : ஸ்ரீ எஸ். நாராயணஸ்வாமி B.Com.., ACA (ராதாமங்கலம் ஸ்ரீ என். ஸ்ரீனிவாசன் அவர்களின் குமாரர்) மணமகள் : சௌபாக்யவதி என். விஜயலட்சுமி M.Sc. (Maths), B.Ed. (Maths) (பம்பாய் வால்டாஸ் நிறுவன மூத்த விற்பனை அதிகாரி ஸ்ரீ ஜெ. சுந்தரேசன் அவர்களின் சகோதரி) இவர்களது திருமணம் 6.9.92 அன்று, சென்னையில் வெகு விமரிசையாக நடை பெற்றது. திருமணத்துக்கு, முன்னாள் ஜனாதிபதி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன், அவர் துணைவியார் உட்பட, ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், இசைக் கலைஞர்களும் வந்திருந்து தம்பதியை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்.



அதிக அளவு ஏற்றுமதி செய்ய முடியும். ஏனென்றால் அதிகபட்ச 'ஸ்பின்னிங்' தெற்கேதான் இருக்கிறது.''

அரசியல் காரணங்களும் ஒரு தடையாக இருந்து. இந்த கோட்டா விஷயத்தில் கோவையைப் பாடாய்ப்படுத்துகிறது போலிருக்கிறது!

என். டி. சி. (தெற்கு) மட்டும் எப்படி லாபம் சம்பாதிக்கிறது?

பதினெட்டு வருடங்களுக்கு முன்னால் நாடு முழுவதுமுள்ள நொடித்துப் போன ஜவுளி ஆலைகளை, அதில் பணி புரிந்து வந்த தொழிலாளர் நலன் கருதி, மத்திய அரசு ஏற்று நடத்த முடிவு எடுத்த போது உருவானதுதான் நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் எனப்படும் என்.டி.சி.

நாடு முழுக்க இயங்கும் இதன் ஆலைகளைப் பொறுத்தவரை நஷ்டமோ நஷ்டம்! சுமார் 2000 கோடி ரூபாய்! ஆனால் -

என். டி. சி. யின் தமிழ்நாடு - பாண்டிச்சேரி அமைப்பு மட்டும், இதுவரை இருந்து வந்த நஷ்டங்களைத் துடைத்து விட்டதோடு, இரண்டு வருடங்களாக வருடத்துக்குச் சுமார் 15 கோடி ரூபாய் வரை லாபம் ஈட்ட முடிந்திருக்கிறது! இவ்வமைப்பின் விற்பனைப் பிரிவு, இந்தியாவின் இதர மாநிலங்களுக்கு மட்டுமின்றி அயல்நாடுகளுக்கும் நூலை விற்பனை செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது.

இது எப்படி சாத்தியமாயிற்று?

இயக்குனர்களில் ஒருவரான வி. முரளி விளக்கினார் :

''முதலாவது, நமது ஊழியர்களின் செயல்படும் முறை. இரண்டாவது, நவீன இயந்திரங்கள் சிலவற்றைப் படிப்படியாக அறிமுகப்படுத்தியது. மூன்றாவது, தொழில்நுட்பப் பிரிவில் புதிய வழிமுறைகளைக் கையாண்டது. கூடுமானவரை எல்லா ஆலைகளிலுமே இயந்திரங்களை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக நூறு கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கினோம். அதிநுட்பத் தொழில் திறன் கொண்ட, ஆட்டோமாடிக் கருவிகளை அவ்வப்போது சேர்த்துக் கொண்டே வந்தோம். உற்பத்தித் திறன் மளமளவென்று உயர்ந்தது.

தவிர, தாமாக முன்வந்து ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் சுமார் 2000 பேர் கணிசமான தொகை பெற்றுக் கொண்டு விலகினர். செலவு குறைந்தது.

''இவை எல்லாம் இருந்தாலும் கூட, தயாரிக்கப்படும் பொருளின் வகைகளும், தரமும் கூடினால்தான் புதிய வாடிக்கையாளர்களைப் பெற முடியும். ஆகவே பருத்தி தவிர, செயற்கை இழை நூல் துணிகளைப் புதிது புதிதாக அறிமுகப்படுத்தினோம். ஆராய்ச்சி - அபிவிருத்திக் கூடம் அமைத்து, உற்பத்தியாகும் நூல் மற்றும் துணியின் தரம் சீராக இருக்கிறதா என்று கண்காணித்து வருகிறோம். விற்பனை நிலையங்களை நாடு முழுக்க இயங்கவைத்தோம்...'' எனத் தெற்கு வளர்ந்த கதையைக் கூறினார் முரளி.

பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. ☎ : 582676

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

தனயோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்

5-ம் ஆண்டு முடிவில் ரூ.6000/-ஐத் திரும்பப் பெறுவீர்

10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்

15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்

பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்

சேமிப்பு ரூ.13,000/- வட்டி வீதம் - 19% கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே

முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ.25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ.7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்

ரூ.9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ.2400/- வட்டி விகிதம் ரூ.1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Friday Weekly Holiday.)

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை-3

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகாநந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

—— சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி ——


SURESH



காட்ல இருந்தா பரவாயில்லே... வீட்டுக்குள்ளேயே வந்திருச்சே... விடலாமா?
ராமதாஸ்
விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு
பிரிவினை வாதம்
கருணாநிதி
அய்யய்யோ... அக்கிரமம், அநியாயம்! அந்தப் பாம்புக்கு விஷப்பல் வச்சிருக்க உரிமை யில்லையா? அதைப் போய் பிடுங்கலாமா?
அந்தாளு தலைமேல தொங்கற கத்தி பத்தி கவலைப்படு... விழுந்தா அவ்வளவுதான்! இது சும்மா, வெறும் டம்மி கத்தி...!
வாழப்பாடி
அத்தை, பெட்ரோல் விலை ஏகத்துக்கும் ஏறிடுச்சி... உங்க பிள்ளை ஸ்கூட்டரை எடுக்கவே பயப்படறாரு... எப்படித்தான் ஆபீஸ்க்குப் போகப் போறாரோ...?
ஆமா, இங்க மட்டும் என்ன வாழுதாம்? அடுப்பு எப்படி எரியும்?
வெங்கலப் பானையைத் தூக்கி வயத்துல வையி... அதான் பத்தி எரியுதே... சோறு வெந்திடும்!



கல்கி



1992
செப்டம்பர் 27
மலர் : 51
இதழ் : 9
ஆங்கீரச
புரட்டாசி 11

பேரணிகளும் பெருநஷ்டங்களும்

விநாயக சதுர்த்தியா? ஊர்வலம். அடுத்து மிலாதுநபியா? அதற்கும் ஊர்வலம்! இரு மதத்தினரிடையே மூட்டி விட இருக்கவே இருக்கிறது வெறியர் கூட்டம்! பிறகென்ன? கண்ணாடி உடைப்பு, கடைகள் சூறையாடல், வாகனங்கள் எரிப்பு. நஷ்டம் தனிநபர்களுக்கு மட்டுமல்ல; தமிழகத்துக்கு என்பதை யார் சிந்திக்கிறார்கள்? அந்த நஷ்டத்தைக் கொளுத்தியவனும் உடைத்தவனும் கூடத் தாங்குகிறான் என்பதை எந்தத் தலைவர் எடுத்துச் சொல்கிறார்? இதுதான் சோகம். மக்களின் அறியாமையைக் கூடப் புரிந்து கொள்ளலாம்; தலைவர்களின் அறியாமை மன்னிக்க முடியாதது.

பாட்டாளி மக்கள் கட்சி தன் பலத்தைக் காட்ட வேண்டுமாம். அதற்காகப் பேரணியாம். காரியாலயத்திலிருந்து வீடு திரும்ப அன்று மக்கள் பட்ட அவதி! அது வார்த்தைகளில் அடங்காதது. பஸ்களும் இதர வாகனங்களும் சகட்டு மேனிக்குப் போலீஸாரால் திக்கு திசை பாராது திருப்பி விடப்பட, ஊரைச் சுற்றிச் செக்கிழுத்து, வியர்வை சிந்தி, பெட்ரோலை வீணாக்கி, அலுத்துச் சலித்து அரசியல்வாதிகளை ஒட்டுமொத்தமாய்ச் சபித்து....

அப்படி ஏதாவது நல்ல கொள்கைகளை எடுத்துச் சொல்லி விட்டார்களா என்றால் அதுவும் கிடையாது. தமிழர் உரிமையாம், விடுதலைப் புலிகளின் பெருமையாம், பிரபாகரனின் பிரதாபமாம். 'தனித் தமிழ்நாடு கோஷம் அர்த்தமற்றது' என்று புத்திசாலித்தனமாகக் கைவிட்டார் அண்ணா. அதையே அசட்டுத்தனமாக இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! தனித் தமிழ்நாடு நாளை உருவானால் மத்திய அரசும் ராணுவமும் பார்த்துக் கொண்டு சும்மா திற்குமா என்பது வேறு விஷயம். இன்று இவர்கள் எத்தகைய விஷ வித்தை மக்கள் மனத்தில் விதைக்கிறார்கள் என்பது அதைவிட முக்கியம். முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டிய எண்ணம். பாரதத்தின் ஒருமைப்பாடு சிதைவுறக் கூடாது என்பது மட்டுமல்ல; தமிழகம் தனித்திருந்து என்ன சாதிக்க முடியும் என்பதையும் சிந்திக்க வேண்டும். விவசாயத்துக்குத் தண்ணீர், மின் உற்பத்திக்கு நிலக்கரி என்று எதை எடுத்தாலும் அண்டை மாநிலங்களை நம்பி இருக்க வேண்டிய தமிழனிடம் தனித்தமிழ் நாடு ஆசை காட்டுவது, 'தற்கொலை செய்து கொள்' என்பதற்கு ஒப்பாகும்.

இந்த அபத்தத்தில் வி.பி. சிங் எப்படி அகப்பட்டுக் கொண்டார் என்பது பெரிய மர்மம்! ஒருவேளை 'மண்டல்' என்று சொல்லி மூளைச்சலவை செய்யப்பட்டாரோ என்னவோ! தி.மு.க. கூட அழைக்கப்படாத போது, தேசிய முன்னணித் தலைவர் ஒருவர் எப்படி சிக்கினார்? வி. பி. சிங்கிடமிருந்து விவேகம் விடைபெற்று விட்டதாகத்தான் கருத வேண்டியிருக்கிறது. முதலில் 'வருகிறேன்' என்று கூறி, பிறகு உஷாராகி, வராமலிருந்து விட்ட ஜெயில் சிங் புத்திசாலியாகிறார். ஒருவேளை 'ஜெ'க்கு எதிராக நாளை பா.ம.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர இது ஓர் ஆரம்பமாயிருக்கலாம். ஆனால் சாணக்கியம் அல்ல.

பாட்டாளி மக்கள் கட்சியைத் தொடர்ந்து தி.மு.க. பேரணி. என்ன தான் திருச்சிக்கு 'ஜெ' விஜயம் செய்து ஒரு கலக்குக் கலக்கினாலும் கூட, சென்னையிலும் கூடிய சீக்கிரம் பா.ம.க., தி.மு.க. பேரணிகளைத் தூக்கிச் சாப்பிடுவதாக அ. தி. மு. க. பேரணி ஒன்று நடந்தேயாக வேண்டும்.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி விலாவாரியாகப் பேசும் அமைச்சர்கள், ஒவ்வொரு பேரணியின் போதும் சுற்றுச்சூழல் எந்த அளவுக்கு அசிங்கப்பட்டுப் போகிறது என்பதை யோசிக்கிறார்களா? இல்லாததும் பொல்லாததுமாக ஏதேதோ காரணங்களைக் கூறி பெட்ரோலியப் பொருள்களின் விலைகளை ஏற்றும் நிதி அமைச்சர், பேரணிகள் காரணமாக எவ்வளவு லசல் பெட்ரோல் வீணாகிறது என்பதைச் சிந்திப்பாரா? எத்தனை மனித மணிகள் பாழாகிறது என்று மனிதவள மேம்பாட்டு அமைச்சர் நினைக்கிறாரா?

ஊர்வலங்கள் ஜனநாயகத்தில் நம் உரிமையாக இருக்கலாம். ஆனால் அது அடையாள ஊர்வலமாக இருக்க வேண்டுமே தவிர, மக்களுக்குத் துன்பத்தை அளிக்கும் ஆர்பாட்ட ஊர்வலமாக மாறக் கூடாது. பேரணிகள் உண்மைப் பலத்தைக் காட்டுவதும் இல்லை என்பது பலமுறை தேர்தல்களில் நிரூபணம் ஆகியுள்ளது. எனவே போலீஸ் பந்தோபஸ்து எந்த அளவுக்குத் தர முடியும் என நிர்ணயித்து, அதற்கேற்ப ஊர்வலங்களில் அதிகபட்சமாக இத்தனை பேர்தான் கலந்து கொள்ளலாம்; அதற்கு மேல் கூடாது என்று அரசு சட்டம் இயற்ற வேண்டும். எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவான இந்தச் சட்டத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் மதத் தலைவர்களும் ஏற்றால், அவர்களுக்கு அதனால் ஒரு குறையும் வராது. மக்கள் மகிழ்ந்து வாழ்த்தவே செய்வர்.

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த
தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பவும்.

★★★★★இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு★★★★

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
3. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
4. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III
1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை, முதல் தரங்கம் நீங்கலாக - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. சமிதி, D-76, மூன்றாவது
கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும். ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001.

"நல்ல யோசனைகளை வரவேற்கிறேன்"

கோவை மாநகராட்சிக் கட்டடமே சற்றுச் சுத்தமாகத்தான் இருக்கிறது, நகரின் பராமரிப்புக்கு ஒரு 'சாம்பிள்' போல.

மாநகராட்சி ஆணையர் நிரஞ்சன் மார்டியிடம் பொதுவாக வாசகர்கள் குறிப்பிட்டிருக்கும் சில சுகாதாரப் பிரச்னைகளைச் சொன்ன போது உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டார். (ஒரு வாசகர், ஆணையர் பொறுப்பேற்ற பிறகு நகரின் பல இடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதைப் பாராட்டி எழுதியிருந்ததைத் தெரிவித்த போது புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டார்.)

"ராஜா ஸ்ட்ரீட், ஆர்ட்ஸ் கல்லூரி சாலை என்று ஒவ்வோர் இடத்திலும் ஸ்கூட்டர்களுக்கும், கார்களுக்கும் பார்க்கிங் பீஸ் வாங்குவது, சற்று அதிகப்படியாக உள்ளதே. ஒரு நாளைக்கு ஓர் இடத்தில் வாகனத்தை நிறுத்தி ரசீது பெற்றுக் கொண்டால், பிற இடங்களில் வாகனத்தை மறுபடி நிறுத்தும் போது பார்க்கிங் பீஸ் வாங்குவதைத் தவிர்க்கலாமே?" என்ற யோசனையைக் கூறிய போது,

"நியாயமான கோரிக்கைதான், கவனிக்கிறேன்" என்று கூறியவர், "நான் யோசனைகளுக்கு எப்போதுமே செவி சாய்ப்பவன் தான்!" என்றார்.

அப்ரூவல் இல்லாத லே அவுட்களில் வீடு கட்டிக் கொண்டு அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் அவஸ்தைப்படும் கோவை வாசிகள் சிலரின் குறைகளைக் கமிஷனர் முன்வைத்தோம்.

"அப்ரூவல் பெறாத இடங்களில் வீடு கட்டிக் கொண்டு விட்டு வசதிகளை எதிர் பார்த்தால் எப்படி?"

"அப்படி என்றால் நகராட்சி இந்த வீட்டுக்காரர்களிடமிருந்து சொத்து வரி வசூலிப்பது மட்டும் எப்படி நியாயமாகும்?"


"சொத்து வரி கட்டிய ரசீது இருந்தால் தான் இந்த வீடுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்கும். அதனால் அவர்களது நலன் கருதித்தான் சொத்து வரியைச் செலுத்துகிறார்கள்" என்றார் ஆணையர்.

"அப்படியானால் இவர்களுக்கு என்ன தான் வழி?"



● நிரஞ்சன் மார்டி.

"ஒரேயடியாகக் கைவிட்டு விட மாட்டோம். டெவலப்மெண்ட் சார்ஜஸ் என்று இந்த பிளாட்டுகளுக்கு ஏற்ப வசூல் செய்து, லே அவுட்களை ரெகுலரைஸ் செய்த பிறகு தான் அடிப்படை வசதிகளை வழங்க முடியும். இன்னும் இரண்டு மாதங்களில் இதைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன்!"



"பஸ்ஸில் பிக்பாக்கெட் கொடுக்கிறது சகஜம்தான். இதுக்குப் போய் அவரை வேலையிலேர்ந்து நீக்கிட்டாங்களா?"

"அவர் பார்த்துக்கிட்டிருந்தது கண்டக்டர் வேலை; பிக்பாக்கெட் கொடுத்தது அவரோட கலெக்ஷன் பையை!"

– ஞா. ஞானமுத்து

ஜெயித்துக்கொண்டேயிருக்கும் லட்சுமி!

பள்ளி இறுதி வகுப்பு வரை மட்டுமே படித்து, குடும்பத் தலைவியாக விளங்குவதிலேயே திருப்தி கண்டவர் தான் ஜெயலட்சுமி தேவராஜ். ஆனால் சந்தர்ப்பவசத்தால் ஐந்தாறு நிறுவனங் களுக்குப் பொறுப்பேற்க நேர்ந்த போது தயங்கவில்லை! மிக வெற்றிகரமாக அவற்றை நடத்தியதோடு, விரிவடையச் செய்து புதிய நிறுவனமும் தோற்றுவித் தார்! தமது வெற்றிக் கதையை அவரே கூறட்டும் :

"**1983** வரை நான் ஒரு குடும்பத் தலைவிதான். ஜூன் மாதத்தில் ஒருநாள் கணவர் காலமான போது, கலக்கமாகத் தான் இருந்தது. சுமார் 300 தொழிலாளர் களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங் களைத் திடீரென்று இழுத்து மூட முடி யுமா? எங்கள் நிறுவனங்களுக்கு இருந்த 'குட்வில்'லை அன்றோடு இழந்து விட எனக்கு மனம் ஒப்பவில்லை. நிலைமையை யதார்த்தமாகச் சிந்தித்துப் பார்த்தேன். சவாலை ஏற்றுச் செயல்படுவது என்று தீர்மானித்தேன். பெற்றோரும் என்னை

• சியாமளாவுடன் ஜெயலக்ஷ்மி தேவராஜ்



உற்சாகப்படுத்தினர்.

''இத்தனைக்கும் பிஸினஸ் சம்பந்தமாகவோ, ஊழியர்கள் சம்பந்தமாகவோ எனக்கு அதுவரை எதுவும் தெரியாது. ஒவ்வொரு பிரச்னை உருவாகும் போதும் அதை எப்படிச் சமாளிப்பது என்று நானே அனுபவத்தின் பேரில்தான் தெரிந்து கொண்டேன். விக்னேசுவர் இண்டஸ்ட்ரீஸ், விக்னேசுவரா இஞ்சினீயரிங் கம்பெனி, விக்னேசுவரா ஃபவுண்டரி என்று இயங்கி வந்த மூன்றோடு, நான்காவதாக விக்னேசுவரா பிரஸிஷன் பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று ஒரு புதிய நிறுவனத்தையும் உருவாக்கினேன்!''

ஜெயலட்சுமி விவரித்த போது, பெருமையை விட அடக்கமே தெரிந்தது. இவர் 'மிகச் சிறந்த பெண் தொழிலதிபர்' விருதை, கோவை சிறு தொழில்கள் கூட்டமைப்பிடமிருந்தும், 'பாராட்டத்தக்க சேவை செய்தவர்' என்ற விருதை இன்னர் வீல் கிளப்பிடமிருந்தும் பெற்றவர்.

கணவர் நினைவாக தேவராஜ் ஆர்க்கேட் கட்டி முடித்திருக்கிறார்; ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் நிறைந்த கட்டடம் இது. பெங்களூர், மதுரை, பம்பாய் என்று தேவைப்பட்டால் தாமே போய் விற்பனையாளர்களைச் சந்திக்கிறார். ''அதற்கான மனோதிடம் இப்போது எனக்கு வந்து விட்டது!'' என்கிறார் வெகு இயல்பாக. இவர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமது சில தயாரிப்புகளுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரையும் வாங்கி விட்டார். தென்னிந்தியாவில் ''டர்பைன் பம்ப்புகளைத் தயாரிக்கும் ஒரே நிறுவனம் எங்களுடையதுதான்!'' என்கிறார் ஜெயலட்சுமி தேவராஜ்.

ஆரம்பத்தில் ஒரு கோடி ரூபாய் அளவில் இருந்த விற்பனை இப்போது இரு மடங்காகி இருக்கிறது!

மூத்த பெண் சியாமளா, பிஸினஸ் மானேஜ்மெண்ட் படித்து விட்டு, அம்மாவுக்கு உதவியாக இப்போது சேர்ந்திருக்கிறார்.

ஆன்மிகத் தொண்டுகளிலும், ஆலயங்கள் பராமரிப்பிலும் ஜெயலட்சுமி தேவராஜுக்கு ஈடுபாடு உண்டு. ரோடரி சங்க உறுப்பினரும் கூட.

இத்தனை பணிகளுக்கிடையே சிறிதளவு பொழுது கிடைத்தாலும் கர்நாடக இசையை ரசிப்பதிலும், காமிரா ஒன்றை எடுத்துக் கொண்டு படங்கள் கிளிக் செய்வதிலும் தோட்ட வேலையிலும் மும்முரமாக ஈடுபடுகிறார் லக்ஷ்மி கடாக்ஷத்துடன் ஜொலித்துக் கொண்டே இருக்கும் இந்த ஜெயலட்சுமி.

வாய் வார்த்தை

''வெண்டைக்காய் என்ன முத்தலா இருக்கு!''

''ஆமாம் இதைவிட இளசா உனக்கு எவ தர்றா?''

''நீ மட்டும்தான் விக்கறேன்னு நினைச்சுக்காதே!''

ஈவினிங் பஜார் போனா வேண்டியது வாங்கலாம்.''

''வாங்கலாம்! வாங்கலாம்! அவன் நிறுத்துப் போடறதை அப்படியே வாங்கிட்டு வரலாம். இங்கே மாதிரி முனையை உடைச்சே! கையை ஒடிச்சிடுவான்.''

''சரிதான் ரொம்ப பேசாதே. கால் கிலோ போடு.''

வாசலில் காய்கறிக்காரிக்கும் தனது மனைவிக்கும் நடக்கும் சண்டையைக் காதில் வாங்கியவாறே பேப்பர் படித்துக் கொண்டிருந்த ரங்கநாதனுக்கு மனைவி லட்சுமி மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. டீசன்டான ஏரியாவில் வசித்துக் கொண்டு, காய்கறிகாரியிடம் பேரம் பேசிச் சண்டை போடாதே என்றால் அ வ ள் கேட்பதே இல்லை.

அது டவுனை ஒட்டிப் புதியதாக ஏற்படுத்தப்பட்ட நகர். பெரும் பணக்காரர்கள் வசிக்கும் பகுதி. மற்றவர்கள் எல்லாம் சொன்ன விலைக்கு, கொடுத்ததை வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள். லட்சுமி மட்டும்தான் சப்தமாக பேரம் பேசிச் சண்டை போட்டுக் காய்கறி வாங்குவாள். இதனை மற்றவர்கள் வேடிக்கைப் பார்ப்பதைப் பார்க்கும் போது ரங்கநாதனுக்கு அவமானமாக இருக்கும்.

அன்று அவனது மனைவி அவளது அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று ஊருக்குப் போய் விட்டதால் அவனே காய்கறி வாங்க வெளியே வந்தான். அவனைக் கண்டவுடன் காய்கறிக்காரி,

''அம்மா இல்லீங்களாய்யா?'' என்றாள்.

''ஊருக்குப் போய் இருக்காங்க'' என்று சுருக்கமாக முடித்துக் கொண்ட ரங்கநாதன், தேவையானவற்றை வாங்கிக் கொண்டு உள்ளே போய் விட்டான். இரண்டு நாள் தொடர்ந்து இந்தக் கேள்வி... மூன்றாவது நாள் ஏக்கமாக வெளிப்பட்டது.


''அம்மா எப்ப வருவாங்க?''

''ஏன்? சண்டை போடாமல் தூக்கம் வரலையா?'' என்று இளக்காரமாகக் கேட்டவனைத் தீர்க்கமாகப் பார்த்தவள்,

''இந்த ஏரியாவிலே உள்ளவங்க எல்லாம் ரொம்ப பணக்காரங்க. அதனால் என் கூட பேசறதையே கௌரவக் குறைவுன்னு நினைக்க, கொடுக்கிறதை வாங்கிட்டுப் போறாங்க. ஆனால் என் கூட வாக்குவாதம் பண்ணி, பேரம் பேசி, நான் பேசறதை மதிக்க பதில் பேசறது அம்மா மட்டும்தான். அதனால அவுங்களைப் பார்க்காம, அவுங்க கூட பேசாமல் இருக்கிறது கை ஒடிஞ்சது போல் இருக்கு - பாஷை தெரியாத ஊர்ல வியாபாரம் செய்யறது மாதிரி இருக்கு....'' என்றாள்.

சண்டையிலும் ஒரு சந்தோஷமா? என்று வியந்து நின்றான் ரங்கநாதன்.

சுகன்யா



9

மதியச் சாப்பாட்டை முடித்து விட்டு, எல்லோரும் வேலைகளில் இறங்கி விட்டனர். அடிப் பெட்டி ஒட்டுகிற வேலை. மேல் பெட்டி ஒட்டுகிற வேலை, சுச்சியடுக்குகிற வேலைகள்..

சொர்ணம் அவள் இடத்தில் வந்து உட்கார்ந்தாள். மேல்பெட்டி ஒட்டுகிற வேலை. அவள் எதிரில் சின்னக் குவியல். ஒட்டி முடித்த பெட்டிகளின் குவியல்.

அவளுக்கு இடதுபுறத்தில் அட்டைக் கட்டுகள், தாள் கட்டுகள். எதிரில் சின்னப் பலகையும், பசைச் சட்டியும்.

இன்னும் சின்னஞ்சிறுமிகள் வெளியே விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கடைகளில் மிட்டாய் வாங்கிச் சப்பிக் கொண்டு, கைகழுவுகிற குழாயடியில் ஓயாமல் குழாயடிக்கிற விளையாட்டும், பூஞ்செடிகளுக்குத் தண்ணீர்ப் பிரித்துப் பாய்ச்சுகிற சந்தோஷமுமாய்... சிறுமிகள்.


தோள் சுமைகளை இறக்கிப் போட்டு விட்ட சிறகு முளைத்த பறவைகளாய்... அந்தச் சிறுமிகள்.

தொழுங்கிப் போன கிராமங்களும், சிதைந்து போன விவசாயமும் வயிற்றுப் பாட்டுக்காக இந்தச் சிறுசுகளைப் பெரிய பெண்களுக்குச் சமதையாக உழைப்புக்குத் தள்ளுகின்றன.

உழைக்க வந்தபோதிலும் வயசுக்குரிய குழந்தைத்தனம் மாறாமல், தளிர்களின் மெல்லியல்புகளும் விளையாட்டுக் குணமும் மாறாமல், வேலையை விளையாட்டாகவும், விளையாடிக் கொண்டே வேலையுமாய்... வாழ்க்கைச் சூறாவளியில் சிக்குண்ட நிலையிலும் இயல்பு மாறாமல்...

''ஏய், குட்டிப் பிசாசுகளா! உள்ளே போய் வேலைகளைப் பாருங்க!''

''வெளியே இப்படி விளையாட விட்டு வேடிக்கை பாக்கவா, ஊசல் போட்டு, சாமக் காட்டுலே பஸ்களை அனுப்புறோம்?



முற்றுகை

முண்டங்களா!''


''தின்னாக்க இல்லே? தின்னதுக்குப் போய், குச்சியடுக்குங்க. ம்.. போங்க, போங்க.''

போர்மேன்கள் ஆள் ஆளுக்கு அதட்டி, குட்டிகளைப் பற்றி, கூட்டில் அடைப்பது போல உள்ளே திணித்தனர்.

பழகிப் போன அதட்டல்கள். மரத்துப் போன வசவுகள். புழங்கிப் புழங்கி மொட்டையாகிப் போன வார்த்தை ஊசிகள்.

உள்ளே வருகிற குழந்தைகள் வருந்தவில்லை. அழவும் இல்லை. வசவுகளுக்காக விசனம் கொள்ளவும் இல்லை. குறும்பு குறையாமலேயே உள்ளே வந்தனர்.

பாவாடைகளின் சடசடப்புச் சப்தங்களை அமுக்கிக் கொண்டு, அந்தச் சிறுமிகளின் பேச்சு சப்தம்.



மேல்பெட்டி ஒட்டிக் கொண்டிருந்த சொர்ணத்தின் பக்கத்தில் ஒரு தாவணிச் சிறுமி.

சிமெண்ட் கலர் தாவணியும், சிமெண்ட் கலர் ஜாக்கட்டும் உடுத்தியிருந்தாள். தேன் நிறத் தேகத்துக்குப் பொருத்தமான வெளிர் சிமெண்ட் கலர்.

பார்த்திருக்க ஒரு மினுமினுப்பு, முகத்தில். உடம்பில் ஒரு தளதளப்பு.

நல்ல கலகலப்பாகப் பேசுவாள். ராசாத்தியைப் போல வெகுளியானவள். எந்நேரமும் கேலிதான். கிண்டல்தான். பேச்சுத்தான். வாய், ஒரு நேரம் கூட ஓய்ந்து இருக்காது. 'பொடு பொடு' வென்று ஏதாச்சும் பேசிக் கொண்டே இருப்பாள்.

இப்போதும் அப்படித்தான்.

சொர்ணம் 'உம்' கொட்டிக் கொண்டிருக்க, ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அடிப்பெட்டிக்கான நீலக் கலர்க் காகிதம் தீர்ந்து விட்டதைச் சட்டென உணர்ந்தாள்.

''அய்யய்யே... தாள் கட்டு தீர்ந்து போச்சே!''

''ம்...''

''அக்கா!''

''என்ன வெள்ளைத்தாயீ?''

''கொஞ்சம் பாத்துக்கங்க. நா போய்த் தாள்கட்டு வாங்கிட்டு வந்துர்றேன்க்கா.''

''எங்கே? ஸ்டோர் ரூமுக்குப் போறீயா?''

''ஆமாக்கா...''

முகத்தில் சிரிப்பு மாறாமல், துள்ளும் குதூகலத்துடன் ஓடினாள். உற்சாக நதி. நுரைபொங்கத் ததும்பி ஓடுகிற நதி.

சொர்ணம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வை பார்வையாக இருந்தாலும், வேலையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன, கைகள்.

வலது சுட்டுவிரல் பசையைத் தொட, அதே விரலால் நீலநிறக் காகிதத்தை எடுத்து விரிக்க, இடது சுட்டுவிரல் அட்டையை அதன் மேல் வைத்து நீட்ட, மற்ற விரல்கள் அதை மடித்துச் சுருட்டியெறிய...

அனிச்சை செயலாக வேலை இயல்பாக நடந்து கொண்டிருந்தது. அத்தனை வேகம், விறுவிறுப்பு.

வெள்ளைத்தாய் வந்தாள். போனது போல் வரவில்லை. குதூகலமாய்ப் போனவள், குத்துண்ட பறவையாக வந்தாள்.

அவள் முகம் வாடிச் செத்துக் கிடந்தது. அவளிடம் ததும்பி நின்ற குதூகலத்தைக் கொள்ளையடித்தது யார்?

அழுகையை உள்ளடக்கிக் கொண்டு அவளது கண்கள். சிரமப்பட்டு தனது உள் உணர்வுகளை மறைக்கிற யத்தனிப்பில், அவள்.

மேலாண்மை பொன்னுச்சாமி


* தாமோதரசாமி நாயுடு

சென்னைக்கு வருகிறது
'அன்னபூர்ணா'!

சினிமா தியேட்டர் ஒன்றில் சிறு ஸ்டாலில் ஆரம்பித்து, இன்று அன்னபூர்ணா - கௌரிசங்கர் ஓட்டல்களின் அதிபராக உயர்ந்திருக்கும் தாமோதரசாமி நாயுடுவுக்கு ஒரு பெரிய குறை : 'துபாயிலும், அமெரிக்காவிலும் நம் இந்தியர்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். இங்கே அப்படி இல்லையே?'

அழகழகான பெட்டிகளில், உணவு வகைகளைக் கைபடாமல் அடைத்து, சென்னையின் பல முக்கிய இடங்களில் விற்பனை செய்யும் திட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. அடுத்த மாதம், அல்லது தீபாவளி சமயத்தில் விற்பனை ஆரம்பமாகிவிடுமாம். தட்டில் 'ஜனதா சாப்பாடு' வழங்கும் திட்டமும் இருக்கிறதாம். இதற்கான இயந்திரங்கள் வருவதில் தாமதத்துக்கும் அவற்றின் விலைகள் ஏகத்துக்கு ஏறுவதற்கும் காரணம் குவைத் போர் என்கிறார் தாமோதரசாமி நாயுடு.

"சென்னையில்தான் அத்தனை ஓட்டல்கள் இருக்கின்றனவே" என்றால், "தருமமிகு சென்னை எனக்கும் இடம் தரும்" என்கிறார்.

என்ன ஆச்சு? இந்தப் பூச்செண்டை நோகடித்தது யார்?

கேட்க வாயெடுத்தாள். சொர்ணம் கேட்கவில்லை. ஒரு புண்ணைக் குத்தி விட்ட மாதிரியாகி விடுமோ...?

வேலை வேலையாக இருக்க, அவளை உற்றுப் பார்த்தாள். அவள் கீழ் உதட்டில் ஒரு வேதனையின் துடிப்பு. நாடியில் பொடிப் பொடியாய் வியர்வை.

கழுத்துக்குக் கீழே...

அவளது மேலாடையில் அழுக்கான விரல்கள் பதிந்த அடையாளம். வெளிர்ச் சிமெண்ட் கலரில் பளிச்சென்று கண்ணை உறுத்துகிற அந்த விரல்களின் அழுக்கு வரிகள். அழுக்கான மனசுகளின் வக்கிர அடையாளம்.

சொர்ணம் மனசுக்குள் வெகுண்டாள். ஸ்டோர் ரூமுக்குள் என்ன நடந்திருக்கும் என்பதை யூகிக்க முடிகிறது. காறித் துப்ப வேண்டும் என்கிற நமைச்சல், மனசுக்குள். வெறுப்பிலும் கொதிப்பிலும் வருகிற குமைச்சல்...

வாழக் கதியற்று வறுமையின் காரணமாய் அரும்பு வயதிலேயே உழைக்கப் புறப்படுகிற கிராமத்துச் சிறுமிகள். கிராமச் சூழலின் அடக்க ஒடுக்கமான பண்பு மரபில் ஊறிப் போன சிறுமிகள்.

கனவுகளோடு சேர்த்து, துணிச்சலையும் தொலைத்து விட்ட சிறுமிகள். கூச்சத்திலேயும், அச்சத்திலேயும் சகலத்தையும் முடக்கிக் கொள்கிற சிறுமிகள்.

கல்வி வெளிச்சம் எட்டிப் பார்க்காத அந்த மனசுகள் முழுவதும் பரவிக் கிடக்கிற கோழை இருட்டு.

எதிர்த்துப் பேசினால், என்ன ஆகி விடுமோ என்று பதைத்துக் கிடக்கிற அறியாமை.

இதைப் பயன்படுத்திக் கொண்டு, அற்பக் குரங்குகள் வாலைச் சுழற்றிக் கொண்டு செய்கிற சேஷ்டைகள். ஆண் என்கிற திமிரில் ஊறிப் போன உதிரிப் பயல்கள் கூட, செய்கிற ஊழிக் கூத்துகள்...

சிறுமியைப் பூவாகவும், குமரியைக் கன்னியமாகவும், பெண்களை மனுஷிகளாகவும் மதித்து நடத்த வேண்டிய நாகரிகத்தையே தொலைத்து விட்டு, மிருகங்களாய்... கடித்துக் குதறும் ஓநாய்களாய்... உறுமி உறுமி அச்சுறுத்தி, உள்ளுணர்வுகளை அதிரச் செய்து, நடுங்க வைக்கிற கொடிய நச்சு மிருகங்களாய்... ச்சீய்!

...சொர்ணம் வேலைக்கு வந்து சேர்ந்த புதிது. இப்படித்தான் ஒருநாள் பசை வாங்கப் போயிருந்தாள், ஸ்டோர்ரூமுக்கு. பார்க்கிற நேரமெல்லாம் பல்லிளித்துக் கொண்டிருந்தவன் மிதமிஞ்ச....

பத்து ஊரும் கை கட்டித் தலைவணங்கும் ராமானுஜம் மகள். இவனைப் போல தினம் முப்பது பேருக்குச் சோறு போட்ட குடும்பத்தின் குலக்கொழுந்து.

காலக் கொடுமையில் இங்கு வந்து விழுந்தவள். இந்த அற்பப் பயலுக்கு இவளைத் தொடுகிற துணிச்சலா?

பத்ரகாளியாகி விட்டாள்.

எட்டி அவனது தலைமயிரைக் கற்றையாக இடதுகையால் பற்றிய அந்தக் கணத்திலேயே ....

பசைப் பிசுபிசுப்பான வலதுகையால்

தாய்மை அடையும் பருவத்திலே உங்கள் இருவருக்காக ‘உண்ண’ வேண்டுமே!




உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்®

உங்களுக்குள் இன்னொரு புதிய உயிர், உங்கள் குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கிய நேரத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும், சிசுவின் வளர்ச்சிக்கும் போதுமான கூடுதல் ஊட்டச்சத்துக்கள் தேவை.

காம்ப்ளான்–விட்டாமில்க் உங்களுக்கும், பிறக்கப்போகும் உங்கள் குழந்தைக்கும், தேவையான ஊட்டச்சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது. இதில் ஃபாலிக் ஆஸிடு, பால் புரதம் (22.2 கிராம்), வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச் சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம், தேவையான அளவில் அடங்கியுள்ளது.



ரெகுலர் * சாக்லேட்

தினமும் 2 கப்புகள்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/P/91/R-TAM

பளார், பளார், பளார்!

எத்தனை அறைகள் அறைந்தாள், எப்போது நிறுத்தினாள் என்பதே அவளுக்குத் தெரியாது. கூட்டம் கூடி விட்டது.

முதலாளியிடம் விஷயம் வ ந் த து. ரௌத்ரமாய்க் கத்திக் கூச்சலிட்டான்.

அந்தத் தீப்பெட்டி ஆலையே அரண்டு போய் நின்றது. அந்தப் 'புதுமைப் பெண்ணி'ன் அடங்காத ஆவேசத் தீயின் ஜ்வாலையில் - ஜொலிப்பில் - மிரண்டு போய் விட்டது.

அந்த ஸ்டோர்மேன் அன்றே சீட்டுக் கிழிக்கப்பட்டான். அ த ற் கு ப் பிறகுதான் அவள் தன்னிலைக்கு வந்தாள்.

சொர்ணம் தனித்துவமானவள் என்று ஆலை முழுவதும் பிரபல்யம். அவள் வம்புக்கு எவனும் வரவே மாட்டான்.

அழுக்கு மனசின் அடையாளங்களைச் சுமந்து கொண்டு, அறுபட்ட கொடியாக வாடிப் போய் வருகிற வெள்ளைத்தாய்கள், ஏன் சொர்ணத்தைப் போல கொதிக்கவில்லை? கொந்தளிக்காமல் இருப்பது ஏன்?

ரோஷம் இல்லாமலா? மானத்தை இழக்கச் சம்மதித்தா? இல்லை, இல்லை. அறியாமை. அறியாமையால் வந்து மூண்ட அச்சம். கல்வி இல்லாத அறியாமை இருட்டில் வந்து பம்மிக் கொள்கிற பயப் பிசாசுகள்.

பயம்! - எல்லாச் சோகங்களுக்கும், அவலங்களுக்கும் அநீதிகளுக்கும், அத்துமீறல்களுக்கும், உயிர் தருகிற தளமாக இருக்கிற இடம்.

சொர்ணம் யோசனையோடு வெள்ளைத்தாயை ஏறிட்டுப் பார்த்தாள். பரிதாபமாக இருக்கிறது. அன்பாய் - ஆறுதலாய் - நாலு வார்த்தைகள் சொல்ல விருப்பமாக இருக்கிறது. எப்படிச் சொல்ல, என்னத்தைச் சொல்ல?

வெள்ளைத்தாய் பேசவில்லை. ஏறிட்டுப் பார்க்கவே பயந்தாள். சொர்ணம் ஏதாச்சும் கேட்டு விடுவாளோ என்று மிரண்டாள்.

மானத்தை உதிர்த்து விட்டு வயிற்றைக் கழுவ வேண்டியிருக்கிறதே என்ற வாழ்க்கை அவலம், மனசில் கனத்த சுமையாக ஏறிக் கொண்டதோ...? அழுத்துகிறதோ...?

மனசே மூச்சுத் திணறித் தவிக்கிற போது.. அவள் என்னத்தைப் பேசுவாள்? எப்படிச் சிரிக்க முடியும்?

சொர்ணத்திற்கு அவளைப் பார்க்கப் பார்க்க என்னவோ போலிருந்தது.

சாக்கடையில் புரண்டெழுந்த பன்றிக் கூட்டம் இவள் மீது ஏறிச் செல்வது போல... மனசுக்குள் ஒரு அருவருப்பு. உள்மனசை அச்சுறுத்துகிற வாழ்க்கை யதார்த்தங்கள். குரூர முகம் காட்டி, தாட்சண்யமின்றிப் பல்லையிளிக்கிற சமூகச் சூழல்...

சாயங்காலம் வரை அவள் மனசில் இதே உளைச்சல்கள். திசைபுரியாமல் பாய்கிற குருட்டு சக்கரமாய், நினைவுகள். கட்டு மீறி, தாறுமாறாய், கரைகளை உடைத்துக் கொண்டு அலைபுரண்டு சீறுகிற கற்பனைகள்.

சாயங்காலம் ஐந்து மணி. ராசாத்தி ஓடி வந்தாள்.

''போவமா?''

''ம்.''

''இந்தா, என் சீட்டையைச் சரிபார்த்துரு.''

சீட்டையை வா ங் கி ப் பிரித்தாள். காலையில் வாங்கிய பொருட்கள் எண்ணிக்கையையும், மாலையில் வாங்கிய எண்ணிக்கையையும் விசாரித்தாள். ஒப்பிட்டுப் பார்த்தாள். சரியாக இருந்தது.

''சரியாய்த்தானிருக்கு.''

அதே போல கெங்கம்மாவும் ராமலட்சுமியும் சீட்டைகளுடன் வந்தனர். சரிபார்த்துச் சொன்னாள்.

இவளும் வாங்கிய பொருளுக்குரிய மேல் பெட்டிகளை ஒப்படைத்து விட்டு, சீட்டையை வாங்கிக் கொண்டாள்.

தூக்குச் சட்டிகளையும், டப்பாக்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். ஆபீஸ் வாசலை விட்டு வெளியேறிய போது... முகத்தில் வந்து தொட்டது மஞ்சள் வெயில்.

(தொடரும்)

அடுத்த இதழில்....

- **நவராத்திரிக்கு ஒரு கேள்வி**
  - வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் - விஸ்வநாத சிவாச்சாரியார்.
- **அமெரிக்காவில் ஒரு 'ரத்தப் புரட்சி'**
  - அதிசயமான தகவல்கள்.

நல்லதாய் நாலு வார்த்தை...

"**வ**னஜா..."

"....."

- பார்த்ததும் அதிர்ச்சி வந்தது.

"...என்ன வனஜ்..? ஏன் அழறே?"

பதில் சொல்லவில்லை. எழுந்து சமையல் அறைக்குள் போனாள். பிளாஸ்க்கில் காப்பி தயாராக வைத்திருப்பாள். அதை டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தாள்.

"...காப்பி அப்புறம்... முதல்லே, ஏன் அழறே? அதற்குப் பதில்..." என்றான்.

"ப்ச... ஏதோ நினைச்சேன். அழறேன்."

"...அம்மா, சரோஜி, சந்திரா... எல்லாம் எங்கே?" என்றான்.

சந்திரா அவன் தங்கை. சரோஜி அண்ணி.

"வெளியே போனாங்க."

"எங்கே? கோவிலுக்கா?"

"தெரியாது."

"...அப்ப... நமக்குச் சுதந்திரம்தான். கிட்ட வா. சொல்லு - எதுக்கு அழுகை? உங்க அம்மாவை நினைக்கக்கிட்டா?"

"எதுக்கோ அழறேன். விடுங்களேன்!"

"ஹேய்... என்னது? என் மேல எதுவும் கோபமா?"

இவனின் சீண்டல் அவளுக்கு ரசிக்கவில்லை என்று புரிந்தது. தீவிரமாய் அவள் பார்வை எங்கோ வெறித்தது அவனைச் சங்கடப் படுத்தியது.

"பிளீஸ்... சொல்லும்மா.. என்கிட்டே கூட சொல்லக் கூடாதா?"

"என்னைப் பத்தி உங்க ஒபினியன் என்ன?" என்றாள் திடீரென.

"எ... எதுக்கு?"

"சொல்லுங்க. என்னைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"ரொம்ப அன்பானவ, ரொம்ப.. ரொம்ப அழகானவ..."

"...ப்ச. அதெல்லாம் வேணாம். நெஜம்மா உங்க மனகல பட்டதைச் சொல்லுங்க..." என்றாள் அழுத்தமான குரலில்.

அவளிடமிருந்து தன் கைகளை விலக்கிக் கொண்டான். விலகி எதிரில் அமர்ந்தான். மெள்ள அவள் முகம் பார்த்தான். எதுவோ நடந்திருக்க வேண்டும். அவளை வெகுவாய்ப் பாதித்திருக்க வேண் டும். இல்லாவிடில் இயல்பாய்ச் சிரித்துக் கொண்டிருப்பவள், இப் படி மனநிலை பாதிக்கப்பட்டு... 'உம்'மென்று இருக்க மாட்டாள்.

"என்ன நடந்தது?"

மறுப்பாக ஏதோ சொல்ல முயன்றாள்.

"..ப்ளீஸ்... நடந்ததைச் சொல்லு."

வனஜா புது மருமகள். அந்த வீட்டில் காலடி வைத்து மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. அண்ணி வந்து மூன்று வருடங்களாகி விட்டன. சந்திரா வயதில் சிறியவள். இன்னும் நாலைந்து வரு டங்கள் போகலாம் திருமணத்திற்கு என்று முடிவெடுத்துத்தான் வனஜாவை இவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். வீட்டில் நாலு பெண்கள். அண்ணனும் வேலைக்குப் போய் விட... காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரை அவர்கள் ராஜ்யம்.

வனஜா கொல்லைப்பக்கம் துணி துவைத்துக் கொண்டிருக் கிறாள் என்ற நினைப்பிலோ... அவள் காதில் விழாது என்ற

அலட்சியத்திலோ... மற்ற மூவரும் வாசல் அறையில் அமர்ந்து பேசிக் கொண் டிருந்திருக்கிறார்கள். வேறென்ன... புது மருமகளைப் பற்றிய விமர்சன அலசல் தான்!

''சமையல் ஒண்ணும் அவ்வளவு நல்லா இல்லை. இன்னும் உப்பு.. புளி அளவே தெரியலே...'' என்றாள் சரோஜி.

''நீ வேற... நம்ம வீட்டுக்கு.. ஆறு பேருக்கு எவ்வளவு அரிசி வைக்கணும்னு கூடத் தெரியலே.''

''அண்ணி காப்பி போட்டாங்க பாரு நேத்து... ச்சே.. காப்பி வாசனையே இல்லே..''

''செல்லமா வளர்த்துட்டாங்க போலி ருக்கு..''

''மச்சினர் எழுந்து வந்துடறார். இவ அப்புறம்தான் எழுந்து வரா...''

''இப்ப துணி தோய்க்கிறா போலி ருக்கு. நேத்துத்தான் புது சோப்பு எடுத்தேன். மதியம் போய்ப் பார்க்கிறேன் - பாதி கரைஞ்சு போச்சு!''

ரிஷபன்

''நாலுக்காகச் சொல்லிரணும். ரெண்டு பேர் சம்பளத்துல குடும்பம் ஓடுது. மாசம் பட்ஜெட் போட்டா புரியும்...''


''பேசாம ஒரு மாச நிர்வாகத்தை அவ கிட்டே கொடுத்துரலாம். அப்பத்தான் புரியும்...''

''பெரிய அண்ணி வந்தப்ப கூட சட்டுனு பழகிட்டாங்க. இவங்க சாப்பிட்டாச்சுன்னா மரியாதைக்குக் கூட நின்னு பேசறதில்லே; அவங்க ரூமுக்குப் போயிடறாங்க'' என்றாள் சந்திரா.

''கொஞ்சம் அலட்டல்தான் இல்லே?''

''அம்மா, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. இங்கே வந்தப்புறம் உங்க ளைப் பார்த்ததும் உடனே அம்மான்னு கூப்பிட்டுப் பழகிட்டேன் ஆனா...'' என்றாள் சரோஜி.

''கரெக்ட் அண்ணி! இவங்க அம்மா கிட்டே கூட ஒட்டல்லே...'' என்றாள் சந்திரா.



நற்செயலாக ஹேங்கர் எடுக்க உள்ளே வந்த வனஜா, இவற்றைக் கேட்க நேர்ந்ததும் வந்த சுவடு அறியாமல் திரும்பிப் போனது தான் இன்று நிகழ்ந்தவை.

சொல்லி விட்டு அழுதாள்.

''நான் எதுவும் செய்யறேன்னா, 'வேணாம், நாங்க பார்த்துக்கறோம்னு சொல்றாங்க; சரின்னு விட்டுட்டா - ராங்கி.. அலட்டல்னு பேர் சூட்டறாங்க! நான் என்ன செய்யட்டும்?''

பேசாமல் யோசித்தான்.

''எங்க வீட்டுல.. இதைச் செய்யும் பாங்க.. இல்லே.. நாங்களே இது.. இது அவங்கவங்க வேலைன்னு நிர்ணயம் பண்ணிக்கிட்டுச் செய்வோம். சேர்ந்தும் அரட்டை அடிப்போம்; இல்லே... விருப் பப்படி அவங்கவங்க பொழுதுபோக்கை யும் கவனிப்போம். இந்த மாதிரி இன் னொருத்தர் பர்மிஷன் எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்க மாட்டோம்...'' என்று மேலும் புலம்பினாள்.

''சரி, இந்தப் பிரச்னையை இத்தோட விடு.. முகம் கழுவிக்கிட்டு வா, நாம கொஞ் சம் வெளியே போய் விட்டு வரலாம்.''

வேறு உடை மாற்றிக் கொண்டு வர, வெளியில் கிளம்பினர். சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு நடந்தனர்.

இரவு சாப்பிட அமர்ந்ததும், சரோஜி பரிமாறினாள்.

''ஆகா... சாம்பார் நல்லா இருக்கே! அண்ணி நீங்க வச்சதுதானே?'' என்றான்.

''ஆமா...'' என்றாள் சரோஜி முகத்தில் பெருமை துலங்க.

''வனஜாவை உங்ககிட்டே டிரெய்னிங் விடணும்... அம்மா மாதிரியே உங்களுக்கும் சமையல் நல்லா வருது...''

வனஜா அவனை முறைத்தாள். அவன் அதை லட்சியம் செய்யவில்லை.

''சந்திரா... நீ ஏதோ.. க்ரோஷாவோ.. திரோஷாவோ போட்டுக்கிட்டு இருந் தியே... முடிஞ்சிருச்சா?''

''அய்யோ... அது க்ரோஷாதான்.. என்ன.. சினிமா நடிகை பேர் எல்லாம் வருது எதிர்ல அண்ணியை வச்சுக்கிட்டு!''


''எங்கே, காட்டு.''

சந்திரா எடுத்து வந்தாள்.

''பத்திரிகை தர்மம் என்றால் என்னங்க?''

''காசு கொடுத்து வாங்குற நான் படிப்பதற்கு முன்னால், உமக்குப் படிக்கக் கொடுக்கிறேனே, அதுதான்!''

- நாஞ்சில். க. நாகராஜன்



''பர்ஸ்ட் க்ளாஸ்! ஏன் வனஜ் மத்தியானம் சும்மாதானே இருப்பே. சந்திராவை உன்னோட குருவா ஏத்துக்கிட்டு கத்துக் கோயேன்.''

வனஜாவின் பார்வையில் வோல்ட்ஸ் அதிகமாகியது.

தனிமையில் படுக்கையறையில் சந் தித்த போது.. கைகளைத் தட்டி விட்டாள்.

''என்ன வனஜ்?''

''நான் எதுக்கு? எனக்குத்தான் எது வுமே தெரியலையே...'' என்றாள் கோப மாய்.

''வனஜ்... மனிதர்கள் எவ்வளவுதான் படித்தாலும்... விவரம் தெரிந்தவர்களாக இருந்தாலும்.. 'பேசிக்காக..' உணர்ச்சிவசப் படுபவர்கள்தான்.. புகழ்ந்தால் ஒரு மாதிரி.. திட்டினால் வேற மாதிரிதான்.. நான் ஒண் ணும் அப்படி இல்லைன்னு நூத்துக்குத் தொண்ணூறு பேர் சொல்வாங்க. ஆனா நேருக்கு நேரா சந்தர்ப்பம் வரும் போது உணர்ச்சிப்படி நடக்கிறவங்கதான் அதிகம். இப்ப பாரேன்.. அவங்களைப் புகழ்ந்ததும்.. எப்படி வாங்கிக்கிறாங்க.. அனாவசியமா இல்லே.. அவங்களோட நிஜமான திறமை யைத்தான் புகழ்ந்தேன். இனிமே உன் கிட்டே இயல்பா இருப்பாங்க. நீயும் இதே போல முயற்சி பண்ணு. உன்னை ஏன் அப்புறம் வித்தியாசமா நினைக்கிறாங்க. அப்புறம் நீங்க நாலு பேரும் சேர்ந்துக்கிட்டு, ஊர்ல இருக்கிற அத்தனையைப் பத்தி விமர்சனம் பண்ணுவீங்க...'' என்று சிரித்தான்.

அவன் சொல்வதில் உள்ள அர்த்தம் புரிந்தாலும் கோபம் குறையவில்லை வனஜாவுக்கு.

''இது என்ன வனஜ்? புது டிசைனா?'' என்றான் அருகில் வந்து காதுத் தோடைத் தொட்டு.

''ஹைதராபாத் போனப்ப வாங்கி னது..''

''இப்பத்தானே போடறே.. முதல் தடவையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.. மாப் பிள்ளை அழைப்பும்போதே போட்டிருந் தேன்...''

''அப்ப எங்கே உன் முகத்தைப் பார்த் தேன்... சுத்தி நண்பர்கள் கேலிதான். உனக்கு இது ரொம்ப நல்லா இருக்கு செல்லம்...'' என்றான்.

''போங்க!''

''எங்கே போகறது?'' என்றான் இன் னும் நெருங்கி.

''இப்ப கோபம் போயிருச்சா?''

''......''

''புகழ்வதின் வலிமை... இப்ப புரி யுதா?'' என்றான் புன்னகையுடன்.

''புரியுதுங்க...'' என்றாள் அவளும்.

உடலைப் போல் நான்கு மடங்கு உயரம்: குடல்!

!! மனித உடல், சைவ உணவுப் பழக் கத்துக்கு இசைவாகத்தான் இயற்கையி லேயே அமைந் துள்ளது :

!! மாமிசத்தைக் கிழித்துண்ணும் உயிரினங்களுக்கு உள்ளது போல நீண்ட வளைந்த நகங்கள் நமக்கில்லை.

!! மனிதர்களின் பற்கள் அமைப்பும் மாமிசப் பட்சிணிகளுடையது போல் கூர் மையாய் வளைந்து இல்லை.

!! மாமிசம் உண்ணாத விலங்கு களைப் போல், மனிதனின் வாயும் மேலி ருந்து கீழாகவும் பக்கவாட்டிலும் அசை



யும். ஆனால், மாமிசப் பட்சிணிகளின் வாய் பக்கவாட்டில் அசையாது.

!! சைவ உணவில் அதிகமாகக் காணப்படும் கார்போஹைட்ரேட் சத்தை ஜீரணிப்பதற்கு ஏதுவாக, மனிதர்களின் உமிழ்நீர் (கண்ணாம்பு) ஆல்கலி தன்மை உடையதாகக் காணப்படுகிறது. அசைவ உணவு உண்ணும் விலங்குகளின் உமிழ் நீரோ அதனை ஜீரணிக்க ஏதுவாக, அமிலத் தன்மை அதிகம் கொண்டதாக இருக்கிறது.

!! நமது சிறுகுடலும் பெருங்குட லும் இணைந்த நீளம் நமது உடல் உயரத்தைப் போல் நான்கு மடங்கு! மாமி சம் உண்ணும் விலங்குகளின் குடல் நீளமோ அவற்றின் உடல் உயரத்துக்கே



இருக்கும். மாமிசத்தைக் காட்டிலும் காய் கறிகள் ஜீரணமாகக் கூடுதல் நேரம் ஆகும் என்பதால் இயற்கையில் இவ்வாறு அமைந் திருக்கிறது.

!! மாமிசம் உண்ணும் விலங்குகளின் கல்லீரல் நம்முடையதைக் காட்டிலும் பெரி தாக அமைந்து அதிக பித்தநீர் சுரந்து மாமி சத்தை ஜீரணிக்க உதவும்.

!! நம் வயிற்றுப் பகுதியிலுள்ள செல்கள் மிக விரைவில் அழிந்து விடு கின்றன. இரண்டு நாட்களுக் கொரு முறை அந்த செல்கள் அழிந்து, புதிய செல்கள் உற்பத்தியாகின்றன. உடலின் புறத்தோலில் உள்ள செல்களின் ஆயுளோ ஒரு மாதம்; சிவப்பு ரத்த அணுக்களின் ஆயுள் 120 நாட் கள்.

!! நம் உடலில் 60 ட்ரில்லியன் (ஒரு ட்ரில்லியன் என்பது ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்பது பூஜ்யங்கள்) செல்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும், நமது அண்ட வெளியிலுள்ள (Milkyway) நட்சத்திரங் களைப் போன்று பத்தாயிரம் மடங்கு மாலிக்யூல்கள் உள்ளன.

!! ஒல்லி மனிதனை விட குண்டு மனிதன் அதிக நேரம் தண்ணீரில் மிதக்க முடியும். காரணம் : உடல் கொழுப்பில் சிறு சிறு காற்றுப் பைகள் அடங்கியிருப்பது தான்.

தொகுப்பு : உதயலால்

உங்கள் கனவு இல்லத்திற்கு மூன்று படிகள்.



இப்பொழுது சிறப்பானதொரு வீட்டுத்திட்டம் அளிப்போர் யூனிட் ட்ரஸ்ட்.

நீங்கள் யூனிட் ட்ரஸ்டின் திட்டத்தில் செய்யும் முதலீடு ஹெச்டிஎஃப்ஸியிடம் இருந்து நீங்கள் வீட்டிற்காக கடன் பெற தகுதியுடையவராக்குகிறது. மேலும் 10 ஆண்டு காலத்தில் உங்கள் மேற்கண்ட கடன் மற்றும் அதன் மீதான வட்டியை யூனிட் ட்ரஸ்ட் கட்டுகிறது.

திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

யூனிட் ட்ரஸ்ட், ஹெச்டிஎஃப்ஸியுடன் இத்திட்டத்திற்காக இணைந்துள்ளது. ஹெச்டிஎஃப்ஸி உங்கள் முதலீட்டின் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று மடங்கும் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நான்கு மடங்கும் கடனாகக் கொடுக்கும். உங்கள் முதலீட்டில் சேகரித்த தொகையை யூனிட் ட்ரஸ்ட் பல்வேறுபட்ட வகைகளில் முதலீடு செய்யும்.

- முதலீட்டு அபிவிருத்தியைக் கொண்டு உங்கள் கடன் மற்றும் வட்டியை திரும்பச் செலுத்துவதே யூனிட் ட்ரஸ்டின் இலட்சியம். ஆனால் அதில் குறைவு இருக்குமேயானால் முதலீட்டாளர் அதை ஈடு செய்ய வேண்டும். முதலீட்டு அபிவிருத்தி அதிகமாக இருந்தால் அந்தத் தொகை முதலீட்டாளருக்கு திரும்ப அளிக்கப்படும்.

ஹௌஸிங் யூனிட் ஸ்கீம்

திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- எல்லா தனி நபர் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் (NRI) இதில் சேரலாம்.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 2,000/- (ரூ. 100 முக விலையில் 20 யூனிட்கள்). அதன் பிறகு ரூ. 1000த்தின் மடங்கில், உச்ச வரம்பு கிடையாது.
- யூனிட்டுகளின் விற்கும் மற்றும் திரும்ப வாங்கும் விலை, முதலீட்டின் நிகர சொத்து மதிப்பின் (நெட் அசட் வேல்யூ) மேல் சார்ந்திருக்கும்.

- விசேஷ சூழ்நிலைகளைத் தவிர ஐந்து வருடங்களுக்கு யூனிட்டுகளை திரும்ப விற்க முடியாது.
- வீட்டுக் கடனுக்கு உச்ச வரம்பு 5 லட்சம். கடனுக்கான காலம் 10 வருடங்கள்.
- டிவிடெண்ட் அறிவிக்கப்பட மாட்டாது. வருமானம் மீண்டும் முதலீடு செய்யப்பட்டு மூலதன வளர்ச்சியை அதிகரித்து கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்த பயன் படுத்தப்படும்.

இலவச புத்தகத்திற்கு ஏதேனும் யூனிட் ட்ரஸ்ட் அலுவலகம், முக்கியப் பிரதிநிதி, ஏஜெண்ட் அல்லது ஹெச்டிஎஃப்ஸி அலுவலகத்தை அணுகவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

யூனிட் ட்ரஸ்ட் மற்றும் ஹெச்-டி-எஃப்-ஸி இணைந்து வழங்கும் திட்டம்

Branch Offices: • Madras Ph: 517101, 517178 • Coimbatore Ph: 210399 • Madurai Ph: 34597 • Trichy Ph: 27774

Sista's UTI 1969 92 TM B

சிவகாமியின் சபதம்

இருபத்தொன்பதாம் அத்தியாயம்
தேசத் துரோகி

நதிக்கரைப் பாறையில் புலிகேசிக்கும் புத்த பிக்ஷுவுக்கும் நடந்த சம்பாஷணை மேலும் மேலும் குரோதம் நிறைந்ததாகிக் கொண்டு வந்தது.

சிவகாமியின் விஷயத்தில் நாகநந்திக்கு ஏற்பட்டிருந்த மதிமயக்கத்தைப் போக்கப் புலிகேசிச் சக்கரவர்த்தி முயன்றார். ஆனால் இது சம்பந்தமாகச் சக்கரவர்த்தி சொன்னதெல்லாம் நாகநந்தியின் குரோதத்தை இன்னும் அதிகமாக்கி வந்தது.

சிவகாமியைப் பற்றிப் புலிகேசி குறைவுபடுத்திப் பேசப் பேசப் புத்தபிக்ஷு ஆவேசத்துடன் அவளை உயர்த்திப் பேசலானார்.

சகோதரர்களுக்கிடையில் மேற்படி விவாதம் ரொம்பவும் காரமடைந்து அவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளுவதற்கும் ஆயத்தமாகி விட்ட சமயத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் நடந்த ஒரு கோரமான சம்பவம் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது.

கேட்பவர்களின் இருதயம் நின்று போகும்படியான பயங்கரக் குரலில் ''ஐயோ! ஐயோ!'' என்று அலறிக் கொண்டு ஒரு மனிதன் ஓடி வந்து வாதோரா நதியின் செங்குத்தான கரையின் மீது ஒருகண நேரம் நின்றான். மறுபடியும் ''ஐயோ!'' என்று அலறி விட்டு விரைந்தோடிய நதிப் பிரவாகத்தில் குதித்தான். குதித்தவுடனே தண்ணீரில் மூழ்கினான். சில வினாடி நேரத்துக்கெல்லாம் அவன் குதித்த இடத்துக்குச் சற்றுத் தூரம் கிழக்கே அவனுடைய தலை மட்டும் மேலே எழுந்தது. பாறையே பிளந்து போகும்படியான ஒரு பயங்கரக் கூச்சல் கேட்டது. மறுபடியும் தண்ணீரில் முழுகியவன் அடியோடு முழுகியவன் தான். அவன் முழுகியதற்கு அடையாளம் கூட அங்கே காணப்படவில்லை.

மலை வீழ் நதியான வாதோரா சலசல சப்தத்துடன் விரைந்து பாய்ந்து கொண்டிருந்தது.

சில வினாடி நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்ட மேற்படி சம்பவத்தைப் புலிகேசிச் சக்கரவர்த்தி கண்கொட்டாத பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். நதிப்

அமரர் கல்கி

பிரவாகத்தில் விழுந்த மனிதன் மேலே எழும்பி அலறி விட்டு மறுபடியும் நீரில் மூழ்கிய போது புலிகேசியின் இருதயத்தை யாரோ இரும்புக் கிடுக்கியினால் இறுக்கிப் பிடித்தாற்போலிருந்தது.

சற்று நேரம் அந்த மனிதன் மூழ்கிய இடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் புலிகேசி திரும்பி நாகநந்தியைப் பார்த்தார். பிக்ஷுவின் முகத்தில் அப்போது தோன்றிய புன்னகை புலிகேசியின் உடம்பைச் சிலிர்க்கச் செய்தது.

''அண்ணா! அந்தச் சைத்திரிகனை நீ என்ன செய்து விட்டாய்?'' என்று புலிகேசி கேட்டதும், புத்த பிக்ஷு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்து விட்டுச் சொன்னார் :

'அவனையா? நானா? வேறொன்றும் செய்யவில்லை! அப்பேர்ப்பட்ட அற்புதமான சித்திரத்தை வரைந்தவனுக்கு ஆசி கூறினேன். என்னுடைய ஆசியைப் பெறுவதற்காக அவன் தலையைக் குனிந்த போது அவனுடைய பின் கழுத்தில் இந்தச் சுண்டு விரல் நகத்தினால் ஒரு கீறல் கீறினேன். இந்த நகத்திலுள்ள விஷம் அவனுடைய உடம்பின் இரத்தத்தில் கலந்ததும் அவனுக்கு எரிச்சல் எடுத்திருக்கும். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் உடம்பு முழுவதும் அக்கினியால் தகிக்கப்படுவது போல் இருந்திருக்கும். அவனுடைய மூளையும் கொதிப்பெடுத்திருக்கும். உடம்பையும் மூளையையும் குளிரச் செய்வதற்காகவே அப்படி விரைந்து ஓடி வந்து நதியில் குதித்தான். அவனுடைய உடம்பும் மூளையும் குளிர்ந்ததோடு உயிரும் குளிர்ந்து போய் விட்டது!....''

''ஐயோ! அண்ணா! நீ எப்போது இத்தகைய கொடூர ராட்சஸன் ஆனாய்? கருணையே வடிவமான புத்த பகவானுடைய சங்கத்தில் சேர்ந்து காவி வஸ்திரம் அணிந்து கொண்டு இப்படிப்பட்ட கோர கிருத்தியங்களைச் செய்ய எப்படி உன் மனம் துணிகிறது?'' என்று புலிகேசி கேட்டார்.

நாகநந்தி புலிகேசியை உற்றுநோக்கிச் சீறலுடன் கூறினார் :- ''ஓஹோ! நான் கருணையற்ற ராட்சஸன் என்பது இப்போது தான் தெரிகிறதோ? உனக்காகவும் உன் இராஜ்யத்துக்காகவும் இதை விட ஆயிரம் மடங்கு கோர கிருத்தியங்களை நான் செய்ய வில்லையா? அப்போதெல்லாம் நீ ஏன் எனக்குத் தர்மோபதேசம் செய்ய முன்வர வில்லை? காஞ்சி நகரத்துக் குடிதண்ணீரில் விஷத்தைக் கலந்து அந்நகர மக்களையெல்லாம் கொன்று விடுவதாக நான் சொன்ன போது நீ சந்தோஷத்துடன் சம்மதித்ததை மறந்து விட்டாயா?...

''ஆம், ஆம்! அதையெல்லாம் நான் மறக்கவில்லை. ஆனால், அது ஒரு காலம்!'' என்று கூறிப் புலிகேசிச் சக்கரவர்த்தி பெருமூச்சு விட்டார். சற்று நேரம் நதியின் பிரவாகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நாகநந்தியின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

''அண்ணா! நீ எனக்குச் செய்த உதவிகளையெல்லாம் நான் மறந்து விடவில்லை. இந்த உயிர் உன்னுடையது. ராஜ்யம் உன்னுடையது. நீ எனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கெல்லாம் இத்தனை காலமும் நான் பிரதியொன்றும் செய்யவில்லை. இப்போது செய்ய உத்தேசித்திருக்கிறேன். வாதாபி சிம்மாசனத்தில் வீற்றிருந்து சாம்ராஜ்யம் ஆளும் சுகத்தை முப்பத்தைந்து வருஷ காலம் நான் அனுபவித்து விட்டேன். எனக்குப் போதும் போதும் என்று ஆகி விட்டது. சாம்ராஜ்யத்தின் பொறுப்பையும் சிம்மாசனத்தின் சுகத்தையும் இனிமேல் நீ ஏற்றுக் கொள். இத்தனை காலமும் நீ அணிந்திருந்த காவி வஸ்திரத்தை நான் அணிந்து கொண்டு இந்த அஜந்தா சங்கிராமத்திலேயே மீதியுள்ள என் வாழ்நாளைக் கழித்து விடுகிறேன். பிரகிருதிதேவியும் கலைத்தேவியும் பூரண சௌந்தரியத்துடன் கொலு வீற்றிருக்கும் இந்த அஜந்தா மலையில் நீ உன்னுடைய இளம்பிராயத்தைக் கழித்தாய். நான் என்னுடைய முதுமைப் பிராயத்தை இவ்விடத்தில் கழிக்கிறேன். சாம்ராஜ்ய பாரத்தை, இனிமேல் நீ ஏற்றுக் கொண்டு நடத்து....''

இவ்விதம் புலிகேசிச் சக்கரவர்த்தி சொல்லி வந்த போது, அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் உண்மையான உள்ளத்திலிருந்து வருவது என்பதைப் புத்த பிக்ஷு தெரிந்து கொண்டார். இத்தனை நேரமும் குரோதம் கொதித்துக் கொண்டிருந்த அவருடைய முகம் இப்போது மலர்ந்தது. புலிகேசி பேச்சை இடையில் நிறுத்தி மௌனமாயிருந்த சிறிது நேரத்தில் பிக்ஷுவின் உள்ளம் வருங்காலத்தைப் பற்றிய எத்தனையோ இன்பக் கனவுகளைக் கண்டது. அந்தக் கனவுகளின் அறிகுறி ஒருவாறு அவருடைய முகத்திலே காணப் பட்டது.

''அண்ணா! என்ன சொல்லுகிறாய்? உனக்குச் சம்மதந்தானே?'' என்று புலிகேசி கேட்ட போது, அவருடைய வார்த்தையில் புத்த பிக்ஷுவுக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருந்தபோதிலும் இன்னும் நன்றாக உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, ''தம்பி! இப்போது நீ சொன்ன வார்த்தையெல்லாம் உண்மையா? அல்லது காவி வஸ்திரம் தரித்த பிக்ஷுதானே என்று என்னைப் பரிகாசம் செய்கிறாயா?'' என்று கேட்டார்.

''அண்ணா! நமது பாட்டனார் சத்யாச்ரயப் புலிகேசியின் திருநாமத்தின் மீது ஆணை வைத்துச் சொல்லுகிறேன். நான் கூறியதெல்லாம் உண்மை. இதோ இந்தக் கணமே அதை மெய்ப்பிக்கச் சித்தமாயிருக்கிறேன். இன்றைக்கே நான் பிக்ஷு விரதம் மேற்கொள்கிறேன். ஆசாரிய பிக்ஷுவிடம் சொல்லி உனக்கும் விரதத்திலிருந்து விடுதலை வாங்கித் தருகிறேன். ஆனால், இதற்கெல்லாம் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் இருக்கிறது. அந்தக் காஞ்சி நகரத்து நாட்டியப் பெண்ணை நீ தியாகம் செய்து விட வேண்டும்.''

பெண் புலியின் மீது வேலை எறிந்து கொன்ற வேடனை ஆண் புலி எப்படிப் பார்க்குமோ, அப்படி நாகநந்தி புலிகேசியைப் பார்த்தார்!

'நடனப் பெண்ணின் சரணாகதி' சித்திரத்தை எழுதிய கலைஞனுக்கு என்ன கதி நேர்ந்ததோ அதே கதி ஒருவேளை புலிகேசிக்கும் நேர்ந்திருக்கக்கூடும். ஆனால், அச் சமயம் வாதோரா நதியின் மறுகரை வழியாக ஏழெட்டுப் பேர் விரைவாய் வந்து கொண்டிருந்தது தெரிந்தது; அந்த ஏழெட்டுப் பேரும் சாமான்ய மனிதர்கள் அல்ல; மந்திரிகள், தளபதிகள் முதலியோர். ஏதோ முக்கியமான, அவசரமான விஷயத்தைச், சக்கரவர்த்தியிடம் தெரிவிப்பதற்காக அவரைத் தேடி வருவதாகவும் தோன்றியது.

இதைக் கவனித்த பிக்ஷு தம் உள்ளத்தில் பொங்கிவந்த குரோதத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, ''ஆ! உன்னுடைய சாம்ராஜ்ய தானத்தில் ஏதோ ஒரு இழிவான சூழ்ச்சி இருக்கிறது என்று சந்தேகித்தேன். அது உண்மையாயிற்று!'' என்றார்.

''அண்ணா! நன்றாக யோசித்துச் சொல்லு! சத்யாச்ரயப் புலிகேசி வீற்றிருந்த சளுக்க குலத்துச் சிம்மாசனத்தில் ஒரு சிற்பியின் மகள் ஏறலாமா? அதற்கு ஒரு நாளும் நான் சம்மதிக்க முடியாது. உனக்கும் எனக்கும் மன வேற்றுமை உண்டுபண்ணிய அந்த மோகினிப் பிசாசைத் துரத்தி விட்டு, வாதாபி சிம்மாசனத்தில் ஏறி ஆயுள் உள்ள வரையில் இராஜ்யபாரத்தை நடத்து!''



என்று புலிகேசி உருக்கமான குரலில் கூறினார்.

நாகநந்தியோ பழையபடி நாக ஸர்ப்பத்தைப் போல் சீறிக் கொண்டு, "சண்டாளா! பாதகா! நீ நாசமடைவாய்! உன் தலைநகரம் எரிந்து சாம்பலாகும்! உன் சாம்ராஜ்யம் சின்னா பின்னமாகி அழியும்! தேவேந்திரனுடைய பதவி கிடைப்பதாயிருந்தாலும் சிவகாமியை என்னால் தியாகம் செய்ய முடியாது. கேவலம் இந்தச் சளுக்க ராஜ்யத்துக்காகவா அவளைத் தியாகம் செய்யச் சொல்கிறாய்? ஒருநாளும் இல்லை! இப்படி நன்றிகெட்ட வஞ்சகத்துடன் என்னிடம் நடந்து கொண்டதற்குக் கூடிய சீக்கிரம் நீ பலன் அனுபவிக்கப் போகிறாய்! உனக்கும் எனக்கும் இந்த விநாடியோடு எல்லாவித பந்தமும் அற்றுவிட்டது. இனி உன் முகத்திலேயே நான் விழிப்பதில்லை. இதோ நான் போகிறேன். போய்ச் சிவகாமியையும் அழைத்துக் கொண்டு உன் இராஜ்யத்தை விட்டே போய் விடுகிறேன். அதோ வருகிறார்கள் பார்! அவர்கள் உன்னுடைய விநாசச் செய்தியைக் கொண்டு வருகிறார்கள்!" என்று கூறினார்.

இப்படி நெருப்பைக் கக்கும் வார்த்தைகளை நாகநந்தி கூறிக் கொண்டிருக்கும் போது நதியின் மறு கரையோடு விரைந்து வந்தவர்கள் மேற்கே சற்றுத் தூரத்திலிருந்த மூங்கில் மரப்பாலத்தின் வழியாக நதியைக் கடந்து சக்கரவர்த்தியும் பிக்ஷுவும் இருந்த பாறையை அணுகினார்கள்.

நாகநந்தி தமது சொல்லைக் காரியத்தில் நடத்திவைக்கும் பொருட்டு இரண்டு அடி எடுத்து வைத்தவர், புனராலோசனை செய்து தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டவர் போலத் தயங்கி நின்றார். வருகிறவர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்கள் என நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர் அவ்விதம் நின்றார் போலும்.

வந்தவர்கள் எல்லாருடைய முகத்திலும் கவலையும் பீதியும் குடிகொண்டிருப்பதைப் பார்த்த சக்கரவர்த்தி மிக்க வியப்படைந்து "எல்லோரும் கும்பலாக வந்திருக்கிறீர்களே? என்ன விசேஷம்? ஏதாவது முக்கியமான செய்தி உண்டா?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! மிகவும் முக்கியமான செய்திதான். ஆனால் நம்பவே முடியாத செய்தி. சொல்லுவதற்கும் தயக்கமாயிருக்கிறது!" என்று சளுக்க சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி கூறினார்.

"அதென்ன அவ்வளவு முக்கியமான செய்தி? எங்கிருந்து யார் கொண்டு வந்தார்கள்! ஏன் எல்லோரும் இப்படிப் பயந்து சாகிறீர்கள்? யாராவது பகைவர்கள் சளுக்க சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறார்களா? சீக்கிரம் சொல்லுங்கள்!"

"மகாப் பிரபு! தாங்களே சொல்லி விட்டீர்கள்!"

"இது என்ன பிதற்றல்? நான் என்ன சொன்னேன்!"

"பகைவர்கள் சளுக்க ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருவதாகச் சொன்னீர்களே."

"அதுவா உண்மை?"

"ஆம், சக்கரவர்த்தி!"

"அதிசயமான செய்திதான். யார் அந்தச் சத்துரு? வடக்கே ஹர்ஷராயிருக்க முடியாது; அவரிடமிருந்து சமீபத்திலே சிநேகம் நிறைந்த அழைப்புக் கடிதம் வந்திருக்கிறது. மற்றபடி மேற்கேயும் கிழக்கேயும் சத்துருக்கள் இல்லை. வந்தால் தெற்கேயிருந்துதான் வர வேண்டும். யார், காஞ்சி மாமல்லன் படையெடுத்து வருகிறானா?"

"அப்படித்தான் தகவல், பிரபு!"

"ஒருநாளும் நான் நம்ப மாட்டேன். அப்படியேயிருந்தாலும் எதற்காக நீங்கள் இப்படிக் கலக்கமடைந்திருக்கிறீர்கள்? என்ன முழுகிப் போய் விட்டது?"

"பெருமானே! நம்முடைய சைனியத்தில் பெரும் பகுதி நர்மதைக் கரையில் இருக்கிறது. இன்னொரு பெரும் பகுதி வேங்கியில் இருக்கிறது..." என்று பிரதம மந்திரி தயக்கத்துடன் கூறினார்.

"அதனால் என்ன? மாமல்லன் காஞ்சியிலிருந்து வருவதற்குள் நம்முடைய சைனியங்களை வாதாபிக்குக் கொண்டு வர முடியாதா?"

"மாமல்லன் காஞ்சியில் இல்லை பிரபு! பல்லவ சைனியம் வடபெண்ணையைக் கடந்து ஒரு வாரம் ஆகிறது. இப்போது துங்கபத்திரையை நெருங்கியிருக்க வேண்டும்!"

"இது என்ன விந்தை? செய்தி யார் கொண்டு வந்தது?"

"இதோ இவர்கள் வாதாபியிலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். இரவு பகல் எங்கும் தங்காமல் விரைந்து வந்திருக்கிறார்கள்!" என்று பிரதம மந்திரி சொல்லி இரு தூதர்களை முன்னால் நிறுத்தினார்.

"உங்களை யார் அனுப்பினார்கள்? ஓலை ஏதாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று புலிகேசி திகைப்புடன் கேட்டார்.

"இல்லை, பெருமானே! ஓலை எழுதுவதற்குக் கூட நேரமில்லை. வாதாபிக் கோட்டைத் தலைவர் வாய்மொழியாகச் செய்தி சொல்லி அனுப்பினார். நாங்கள் ஆறு பேர் ஐந்து நாளைக்கு முன்பு கிளம்பினோம். வழியில் நாலு பேர் விழுந்து

அருள்வாக்கு



விநோபா 'ச்ரம்தான்' (ச்ரம தானம்) என்று சொல்லி வந்தாரே, இதைத்தான் பூர்த்த தர்மம் என்று நம் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. வாரத்தில் ஒருநாளாவது இந்த சரீர கைங்கர்யத்தை ஸகல ஜனங்களும் பண்ண வேண்டும் என்பது என் ஆசை. யாராயிருந்தாலும் வாரத்துக்கு ஒருநாள் 'ஹாலிடே' இருக்கிறதல்லவா? அன்றைக்கு லோகோபகாரமாக சரீரத்தால் ஒரு பொதுப் பணி செய்ய வேண்டும். மனப் பூர்த்தியுடன், அல்லது மனப் பூர்த்திக்காக, பூர்த்த தர்மம் பண்ண வேண்டும்.

பாதை போடுவது ஒரு தர்மம். வ்ருக்ஷம் வைப்பது இன்னொரு தர்மம். புதிதாக வைப்பதோடு, இருக்கும் வ்ருக்ஷங்களை வெட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புதிதாக வைக்கிற செடிக்கு தினம் ஜலம் விட்டு, அது விருக்ஷமாக வளரப் பண்ண வேண்டும்.

ஒருத்தன் ஏதோ ஒரு ஒற்றையடிப் பாதையில் உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால், அதுவே மற்றவர்களுக்கு வழியைச் சுத்தி பண்ணுவதோடு இவனுக்கும் சித்த சுத்தியைக் கொடுத்து விடும்.

அவரவருக்கும் எத்தனையோ குடும்பக் காரியங்கள் இருக்கும் என்பது வாஸ்தவம்தான். இந்தக் கார்யங்களை லீவு நாளில் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் வைத்திருப்பார்கள். ஆனாலும் இதோடு கூட பார்வதீ - பரமேச்வரரின் பெரிய லோக குடும்பத்துக்கும் தன்னாலானதை ஒரு 'ட்யூட்டி' (கடமை) யாகச் செய்யத்தான் வேண்டும். இதற்காக அதையும் விடக் கூடாது, அதற்காக இதையும் விடக் கூடாது. கொஞ்ச நேரமாவது பரோபகாரப் பணி புரிய வேண்டும்.

சரீர கைங்கர்யம் உடம்புக்கே ஒரு நல்ல exercise (அப்யாஸம்). அதோடு பரோபகாரமாகப் பண்ணுகிற போது மனஸுக்கும் அலாதியான உத்ஸாஹம் இருக்கும். முடிவில் சித்த சுத்தியைத் தரும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

விட்டார்கள். இரண்டு பேர்தான் மிஞ்சி வந்து சேர்ந்தோம்.''

''மந்திரி! இவர்கள் பேச்சு உண்மையாயிருக்க முடியுமா? மாமல்லன் இலங்கைப் படையெடுப்புக்காகக் கப்பல்கள் கட்டிக் கொண்டிருப்பதாகவல்லவா நாம் கேள்விப் பட்டோம்?''

''ஆம், பிரபு! நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆயினும் இவர்கள் வாதாபிக் கோட்டைத் தலைவரின் இலச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பின்னால் விவரமான ஓலையோடு வேறு தூதர்களும் வருகிறார்களாம். இவர்கள் சொல்லுவது உண்மையாயிருந்தால், பல்லவ சைனியம் இப்போது துங்கபத்திரையைக் கடந்திருக்க வேண்டும். துங்கபத்திரைக் கரையிலிருந்த சைனியத்தை அந்தப் பிரதேசத்தில் பஞ்சம் என்று கொஞ்ச நாளைக்கு முன்புதான் வேங்கிக்கு அனுப்பினோம்.''

புலிகேசி சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றார். சட்டென்று அவர் மனத்தில் ஏதோ ஒரு உண்மை உதயமாகியிருக்க வேண்டும். சற்றுத் தூரத்தில் நின்று மேற்படி சம்பாஷணையையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நாகநந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

மறுபடியும் பிரதம மந்திரியை நோக்கி, ''மந்திரி! நமது ஒற்றர் படை என்ன செய்து கொண்டிருந்தது? மாமல்லன் படையெடுப்பைக் குறித்த செய்தி நமக்கு ஏன் முன்னாலேயே வரவில்லை? காஞ்சியிலிருந்து பல்லவ சைனியம் புறப்பட்ட செய்தி கூட நமக்கு ஏன் வாதாபியிலிருக்கும்போதே கிடைக்கவில்லை!'' என்றார்.

பிரதம மந்திரி வணக்கத்துடன், ''பிரபு! ஒரு வருஷத்துக்கு முன்னால் நம் ஒற்றர் படைத் தலைவர் வேலையிலிருந்து நீக்கப் பட்டார். அவர் வகித்த பொறுப்பை, நமது பிக்ஷு ஏற்றுக் கொண்டார். அடிகளைத்தான் கேட்க வேண்டும்!'' என்றார்.

சக்கரவர்த்தி உள்பட அங்கிருந்த அனைவருடைய கண்களும் அப்போது பிக்ஷுவை நோக்கின.

புலிகேசி, "அடிகளே! மாமல்லனுடைய படையெடுப்புச் செய்தி தங்களுக்கு முன்னாலே தெரியுமா? வேண்டுமென்றே என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தீர்களா? என்று கேட்டார்.

"தம்பி! உன் கேள்விக்கு இவர்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நான் மறுமொழி சொல்ல வேண்டுமா?" என்றார் பிக்ஷு.

"அடிகளே! சற்று முன்னால் சொன்னதை மறந்து விட்டீர்களா! தங்களுக்கும் எனக்கும் இனி யாதொரு உறவும் இல்லையென்று சொல்லவில்லையா? இப்போது என்னத்திற்காக உறவு கொண்டாட வேண்டும்? உண்மையை உடனே சொல்லுங்கள்!"

"அப்படியானால் சொல்லுகிறேன். மாமல்லன் படையெடுப்புச் செய்தி எனக்கு முன்னமே தெரியும். நன்றியில்லாத பாதகனாகிய உனக்குத் தண்டனை கிடைக்கும் பொருட்டே உன்னிடம் சொல்லவில்லை!" என்று நாகநந்தி கர்ஜித்தார்.

"இந்தத் தேசத் துரோகியைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டதும், அங்கு நின்ற எட்டுப் பேரும் பிக்ஷுவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"பிக்ஷு மடியில் செருகியிருந்த வளைந்த சிறு கத்தியைப் பளிச்சென்று எடுத்துக் கொண்டு, "ஜாக்கிரதை! அருகில் நெருங்கியவன் உடனே யமலோகம் போவான்!" என்றார்.

எட்டுப் பேரும் தம்தம் உடைவாள்களை உறையிலிருந்து விரைவாக எடுத்துக் கொண்டார்கள்.

"அப்படிச் செய்யுங்கள்! சூர சிகாமணிகள் எட்டுப் பேர் சேர்ந்து ஒரு பிக்ஷுவைக் கத்தியால் வெட்டிக் கொல்லுங்கள். புலிகேசிச் சக்கரவர்த்தியின் பெருமை உலகமெல்லாம் பரவும். மாமல்லன் கூடப் பிரமித்துத் திரும்பிப் போய் விடுவான்!" என்று பிக்ஷு பரிகாசக் குரலில் கூறினார்.

அதைக் கேட்ட புலிகேசி, "நில்லுங்கள்! அந்த நீசத் துரோகியைக் கொன்று உங்கள் கத்தியை மாசுபடுத்திக் கொள்ள வேண்டாம். விலகுங்கள்!" என்று கூவினார்.

அவ்விதமே எட்டுப் பேரும் விலகிக் கொண்டார்கள். எனினும் சக்கரவர்த்தியின் பேரில் பிக்ஷு பாய்ந்து விடக்கூடும் என்று எண்ணி ஜாக்கிரதையாகவே நின்றார்கள்.

பிக்ஷுவைப் பார்த்துப் புலிகேசிச் சக்கரவர்த்தி கூறினார் : "அடிகளே! உம்முடைய உயிரை வாங்குவது தவறு. உம்மை நம்பிய சகோதரனுக்கும் உமது நாட்டுக்கும் நீர் செய்த மகா துரோகத்துக்கு அது தக்க தண்டனையாகாது. நீண்ட காலம் நீர் உயிர் வாழ்ந்து உம்முடைய பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்; உம்முடைய துரோகத்தை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட வேண்டும்; மனித உருக்கொண்ட துஷ்டப் பைசாசே! போ! வாதாபிக்குச் சென்று உன்னுடைய மோகினியையும் அழைத்துக் கொண்டு போ! உன் வாக்கை இந்த விஷயத்திலாவது நிறைவேற்று! இனி என் உயிர் உள்ளவரையில் என் முகத்தில் விழிக்க வேண்டாம்! ஒரு பெண்ணின் மோகத்துக்காக ஒரு ராஜ்யத்தையே விற்கத் துணிந்த நீசனே! போ! நெடுங்காலம் உயிரோடிருந்து உன்னுடைய துரோகத்தை நினைத்து அழுது கொண்டிரு."

ஆத்திரம் ததும்பிய குரலில் விம்மலோடு கலந்து புலிகேசி கூறிய மேற்படி கடுமொழிகளைக் கேட்டுக் கொண்டு நாகநந்தி கற்சிலையைப் போல் நின்றார். புலிகேசி நிறுத்தியதும் ஒரு வார்த்தையும் மறுமொழி கூறாமல் நதிக்கரையோடு கிழக்கு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

பிக்ஷு போகும் திசையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த புலிகேசி, அவர் மறைந்ததும் சட்டென்று திரும்பித் தம் கண்களில் ததும்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். பிறகு, அங்கு நின்றவர்களைப் பார்த்து, "மந்திரி! சேனாபதி! இந்தத் தூதர்கள் கொண்டு வந்த செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இதில் சந்தேகம் வேண்டாம். புத்த பிக்ஷுவின் விஷயத்தில் நீங்கள் எல்லோரும் செய்த எச்சரிக்கையை நான் அலட்சியம் செய்து விட்டேன். அதன் பலனை நானும் நீங்களும் அனுபவிக்கப் போகிறோம். என்றாலும், மோசம் ஒன்றும் போய் விடவில்லை. புலியின் வாய்க்குள்ளே வேண்டுமென்று தலையை விடுவது விளையாட்டான காரியம் அல்ல என்பதை மாமல்லனுக்குக் கற்பிப்போம். துங்கபத்திரையைக் கடந்து வந்த பல்லவவீரன் ஒருவனாவது திரும்பிப் போகாமல் ஹதாஹதம் செய்வோம். என்னுடைய தென்னாட்டுப் படையெடுப்பு பூரண வெற்றியடையவில்லை என்ற குறை என் மனத்தில் இத்தனை நாளும் இருந்து வந்தது. அந்த மனக்குறை இப்போது தீர்ந்து விடப் போகிறது. பல்லவ நாடு சளுக்க சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து ஒன்றாகி விடப் போகிறது" என்றார்.

(தொடரும்)



போதை அரக்கனை எதிர்த்து ஒரு போராட்டம்!

சீதா நித்தியானந்த் கோவையின் ஒரு பிரபல பெண்மணி. இவர் தன் பெயருக்கு முன் இருக்கும் 'பிரபல' - என்கிற வார்த்தையை எப்படி பெற்றார்? என்ன செய்தார்?

அவன் நல்ல மாணவன். ஆனால் சமீப காலமாகவே அவன் முகத்தில், பேச்சில் தினசரி நடவடிக்கைகளில் - மாற்றம் தெரிகிறது. ஏன்? என்ன நடக்கிறது?

அவள் நல்ல சிநேகிதி. படிப்பில் கட்டி தான். என்றாலும் தேர்வுகளில் அக்கறை குறைந்து... ஏன்? ஏன்?

நிறைய ஏன்கள். விடை சீக்கிரமே கிடைத்தது : போதை மருந்து பழக்கம்!

மாணவியான சீதாவுக்கு இப்படிச் சுற்றுப்புற அநியாய மாற்றம் வருத்தம் தருகிறது. வேதனை தருகிறது. கவலையில் நெஞ்சு கனக்கிறது. இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். மீட்க வேண்டும். முடியுமா? எப்படி?

திருவேங்கடசாமி சாலையின் சவ்ஸ் டிரெஸ் டிசைனர்ஸில் சீதாவைச் சந்தித்தோம் : ''இருபது வருடங்களாயிற்று நாங்கள் கோவை வந்து. அப்பா புகைப்பட அப்பாவாகி விட்டார். அம்மா குடும்பத்தைத் தாங்க வெளிநாட்டு வேலையை ஒப்புக் கொண்டாயிற்று. அதனால் என் படிப்பு முழுக்க கோவையில் தனி மனுஷியாக.

''முதலில் ரத்ததானம் வழங்குதலில் நாட்டம் ஏற்பட்டது. நான் வழங்கினேன். மற்றவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். பங்குபெற வந்தவர்களில் நிறைய மாணவர்கள் தங்கள் கல்லூரிகளில் போதை மருந்து பழக்கம் எந்த அளவு இருக்கிறது என்று விவரம் தந்தார்கள். ஏற்கெனவே இருந்த என் கவலையை அதிகப்படுத்தி, அவர்களை மீட்க வேண்டும் என்ற விருப்பத்துக்கு வேகம் கூடியது. மறுபடி யோசித்தேன். தகவல் சொன்னவர்கள் உடன்வர பயந்து நழுவினார்கள். என்ன செய்வது...? துணிந்து முடிவெடுத்து, காலை முன் வைத்தேன். ஐ வில் மீட் த சேலஞ்!''

புன்னகையுடன் பெருமூச்சு வெளிப்படுத்துகிறார்.

''முதலில் இது எங்கெங்கே விற்கப்படுகிறது? யாரால்? பின்னணி? அவர்களின் பலம்? இன்னபிற விவரங்களைச் சேகரித்துக் கொண்டேன். வெறுமனே கிடைத்த விவரங்களில்லை இவை. முயன்று, முகம் மாறி, துப்பறிந்து பெற்ற விவரங்கள். சரி, எப்படி ஈடுபடுவது? எதிர்கொள்வது? ஒரு திட்டம் தயாரித்தேன். இதில் பல பகுதிகள் இருந்தன - விற்பவன், வாங்குபவன், தூண்டுபவன், பெற்றவர், மற்றவர்கள்! முதலில் கள்ளிக் கட்டைப் பிரித்து விட வேண்டும். அதுதான் முறிப்பதற்குச் சுலபம் என்று புரிந்தது.

பெற்றவர்களை, அவர்கள் தொடர்பான லயன்ஸ், ரோட்டரி போன்ற பல் வேறு அமைப்புகளில் சந்தித்துப் பேசினேன்; வேண்டிக் கொண்டேன். ஒத்துழைக்கத் தயாரானார்கள். மாணவர்களுக்குப் பணக்கட்டுப்பாடு ஏற்படுத்துவது முதல் தாக்குதல்.

''ஒப்புக் கொண்டார்கள்...''

தொடர்கிறார்.

''எனக்கு உதவ உள்ளுக்குள் ஆர்வம்,

வெளியில் பயம் என்கிற ஒரு பகுதியை ரகசிய தகவல் திரட்டித் தரப் பயன்படுத்திக் கொண்டேன். காவல் துறையை, அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன்.''

''இனி அடிமைப்பட்டவன்.'' நீதா நம்மை ஏறிட்டுப் பார்க்கிறார்.

''நிறைய இளைஞர்கள் - எதிர்கால இந்தியாவின் சொத்து. இப்படி வீணாவதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். தெரிந்தோ, தெரியாமலோ இது நேர்ந்து விட்டது. மீண்டு வந்தால் சமூகத்தை எதிர்நோக்க வேண்டுமே என்கிற கூச்சமே அவர்களை மேலும் மேலும் இதில் தூண்டுகிறது எனப் புரிந்தது. நட்புடன் அவர்களை அணுகினேன். குடும்பம், கடமைகள் என நினைவூட்டி, காரணம் கேட்டறிந்து, தீர்க்க உதவினேன். லேசுப்பட்ட வேலையில்லை. கேலிகள், அவமானங்கள். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்களை மூடியிருந்த ஐஸ் பாறை உடையும் என்று புரிந்தது. பொங்கிய நன்றி, பெற்ற அவமானங்களை சடுகட்டியது. ஆத்மபலம் தந்தது.''

நிறுத்துகிறார்.

''போதை மருந்து விற்கிற பெண்களையும் சந்தித்துப் பேசினேன். அவர்கள் பங்கு எத்தனை மோசமாகச் சமூகத்தைப் பாதிக்கிறது என்று விளக்கினேன். பதில் : 'என்னம்மா நீ? வயித்துக்கு வழியில்லைன்னு உடல் வியாபாரம் செய்யப் போனா போலீஸ் இடைஞ்சல்! இப்ப இதுக்கும் தடைசெய்ய வந்துட்டீங்களா?' அங்கலாய்த்தார்கள் : 'இதுக்கு முதலீடு பண்ணப் பணம் தேவையில்லை. வித்துட்டு காசு தந்தாப் போதும். விக்கறதும் சுலபம். தப்புன்னு புரியுது. ஆனா எங்களுக்கு வயிறு தான் வாழ்க்கை. விடுங்கம்மா' - விலகினார்கள். வேதனை வந்தது. தடுக்க சாம, தான, பேத, தண்டம் என வழிகள் யோசித்தேன்.

தாக்குதலைத் துவக்கத் தருணம் வந்ததாய் உணர்ந்தேன். எதிராளிகள் இப்போது தான் விழித்துக் கொள்ள ஆரம்பித்தனர். ஆவேசம் ஒருசேர என்னை நோக்கித் திரும்பினர்.

''மிரட்டல்கள் - எனக்குத் தொலைபேசியில்! என் ஊழியர்களிடம். பின் தொடர்தல்; துரத்தல்... உள்ளுக்குள் பயம் இருந்தாலும், இளம்பெண்ணின் துணிச்சலும், என் முரட்டுச் சுபாவமும் தனிமை தந்த தைரியமும் ஒருசேர எதிர்கொண்டேன். தேள் கொடியதுதான். ஆனால் என் 'ஷூ' அணிந்த கால்கள் அதை நசுக்கின. இன்னும் புதிய தேள்கள். அதை எதிர்க்க, எனக்கு உதவ இப்போது புதிய தோள்கள். ஆமாம்! தனி மனுஷி என்பதை விட, ஒரு இயக்கம், அமைப்பு என்று இருந்தால் மேலும் திடமாய் எதிர்கொள்ளலாமே எனத் தீர்மானித்ததில் 'சுடர்' என்ற இந்த அமைப்பு உருவாயிற்று.''

முடிக்கிறார்.

''எனக்குத் தேவை. நிஜமாய் உழைக்க உள்ளங்கள். மக்களின் தொடர்ந்த ஆதரவு. பெற்றோரின் ஒத்துழைப்பு. அரசாங்கத்தின் உதவி. கோவை - மாணவர்களில் சுமார் இருபது சதவீதம் இன்று போதை மருந்து எடுத்துக் கொள்வதாகச் செய்தி! இயக்கமாய் முயன்றால் இதைத் தடுக்கலாம். திசை திருப்பி, அவர்கள் வாழ்க்கையை மட்டுமின்றி எதிர்கால இந்தியாவையும் வளப்படுத்தலாம்! யார், யார் தயார்?''


தினசரி இரு கண்கள்!

சமுதாய உணர்வு மிக்க தொழிலதிபர்கள். சமூக உணர்வு மிகுந்த மருத்துவர்கள். இரண்டு வகை மனித நேயமும் கைகுலுக்கிக் கொண்டால் அதன் பலன் சாதாரணமாக இருக்காது என்பதற்குச் சான்று : ஸ்ரீ காஞ்சி காமகோடி மெடிகல் டிரஸ்டின் நடராஜ் மருத்துவ மனை. மில் அதிபர் நடராஜ் நிலம் வழங்க, தொழிலதிபர்கள் எஸ்.வி. பாலசுப்ரமணியமும், ஜி.வி. ஈசுவரும் தாராளமாக நிதியுதவ, உருவானது தான் இந்த அதிநவீன மருத்துவமனை. ஓர் ஐந்து நட்சத்திர மருத்துவமனையின் வசதிகளும், முதல் தர மருத்துவர்களின் ஆத்மார்த்தமான சேவையும், இங்கே வரும் பல்லாயிரக் கணக்கான ஏழை-எளிய மக்களுக்குக் கிடைக்க இன்னும் சில தொழிலதிபர்களும் காரணம். பார்த்தது ரோடரி இன்டர்நேஷனல்; ஹெல்த்-ஹங்கர்-ஹியுமானிடி திட்டத்தில் நிறைய நிதி உதவியது.




* எஸ்.வி. பாலசுப்ரமணியம்

முக்கியமாகக் கண் தானத்தை ஒரு குறிக்கோளாகவே கொண்டு செயல்படும் இந்த மருத்துவமனைக்கு, தினசரி சராசரியாக இரண்டு விழிகள் கிடைத்து வருகின்றன!



* நடராஜ் மருத்துவமனை



உகந்த சூழ்நிலையில் ஓகோ என்று தொழில் வளர்ச்சி!

மற்ற நகரங்களில் எப்படியோ, கோவையில் ''மாவட்டத் தொழில்கள் மையம்'' எனப்படும் டி. ஐ. சி. (D.I.C.) பரபரப்பாக இயங்குகிறது. காரணம், நூற்பாலைகள் சார்ந்த சிறு தொழில்களும், விவசாய பம்பு செட்டுகள் தொடர்பான சார்புத் தொழில்களும் இங்கே ஏராளம்.

''எங்கள் முக்கிய வேலையே தொழில்கள் தொடங்க ஊக்க முகாம்கள் நடத்துவதுதான்!'' என்கிறார் ஜெனரல் மானேஜர் சீனிவாசன். ''எங்கெங்கே என்ன என்ன தொழில் தொடங்க வாய்ப்பு இருக்கிறது என்று எடுத்துச் சொல்லுகிறோம். சிறு தொழில்கள் எப்படி ஆரம்பிப்பது, விண்ணப்பங்களையும், படிவங்களையும் எப்படிப் பூர்த்தி செய்து, எந்தெந்த அதிகாரிக்கு அனுப்புவது என்று விளக்குகிறோம். நாங்களே இவற்றை வாங்கி, அனுமதியும் பெற்றுக் கொடுத்து விடுகிறோம். இதைச் செய்ய ஒருமுனைத் தீர்வுக் குழு உதவுகிறது. கலெக்டர்தான் இதன் தலைவர். மின் இணைப்புக் கிடைக்கவில்லை என்றால், குழுவில் சொல்லி, ஏற்பாடு செய்து கொடுத்து விடுகிறோம்!'' என்கிறார் சீனிவாசன்.



மோகனன் நம்பியார்



ராஜகோபால்



சீனிவாசன்

யார் யார் நிதி அளிக்கிறார்கள், எங்கெங்கே மெஷின் வாங்குவது என்பதோடு, தொடங்கும் தொழில் சீராக இயங்க வாய்ப்பு இருக்கிறதா, மார்க்கெட் நிலை எப்படி, என்று அறிக்கை வேறு தயார் செய்து உதவுகிறார்கள். பிராஜக்ட் ரிப்போர்ட்டும் தயாரித்துக் கொடுத்து விடுகிறார்கள்! இவை எல்லாமே புதிதாகத் தொழில் தொடங்க நினைக்கும் ஆர்வம் உள்ளவர்களுக்கு வெகுவாக உதவுகிறது. வசதி மிகுந்த குடும்பத்துப் பெண்கள் பலர் இப் போது கோவையில் தொழில்கள் தொடங்க இவர்கள் உதவியை நாடியிருக்கிறார் களாம்.

கல்லூரி அளவில், கடைசி வருட மாணவர்க்கு வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழில்கள் தொடங்கும் வாய்ப்புகள் பற்றி ஆலோசனை வகுப்புகள் நடத்துகிறது டி.ஐ.சி. ''வேலை தேடுவதை விட புதுத் தொழில் முயற்சியில் ஈடுபட ஊக்கம் தருகிறோம். தொழில் முனைவோர் பயிற்சி வகுப்பிலும் 40 பேருக்கு வகுப்புகள் நடத்துகிறோம்!'' என்கிறார் சீனிவாசன்.

வழி வகைகள் தெரிந்து விட்டால் அடுத்த தேவை நிதி வசதி. கோவையைப் பொறுத்தவரை, Lead Bank எனப்படுவது கனரா வங்கிதான். கோட்ட மேலாளர் ராஜகோபாலைச் சந்தித்தோம் :


''நாங்கள் அரசாங்கத் திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, அரசுக்கும் பிற மையங்களுக்கும் இடையே ஒரு பாலம் மாதிரியும் செயல்படுகிறோம்!'' என்றார் ராஜகோபால். பெரியநாயக்கன்பாளையத்தில் அம்பேத்கார் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி மையம் ஒன்றை, இவர்கள் நடத்துகிறார்கள். இதில் கிராமப்புற இளைஞர்கள் பயன் அடைந்தாலும், ஷெட்யூல்ட் வகுப்பு இளைஞர்களின் மேம்பாடுதான் குறிக்கோள். காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு தவிர, மின் கருவிகள் பழுது



''இந்த விடுகதைக்கு விடை சொல்லு பாட்டி! அதிரடியாய் ஆரம் பித்து புஸ்ஸென்று போய்விடும்... அது என்ன?''

''இது தெரியாதாக்கும்! விசா ரணைக் கமிஷன்...!''

– உ. ராஜாஜி.



''நம்ம கட்சில பயங்கர ஏமாற்று வேலை நடக்குது!''

''என்ன விசயம் தலைவரே?''

''கட் அவுட்டுக்கு வெள்ளையடிக்க ஆயிரம் ரூபா செலவுன்னு கணக்கு எழுதிருக்காங்க!''

– அம்பை தேவா.

பார்த்தல், பம்புசெட் பழுதுபார்த்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கிறார்கள்.

''பொதுவாக இங்கு ஒரு தொழில் நசிவு அடைவது அபூர்வம்தான்!'' என் கிறார் ராஜகோபால். ''உதாரணம் ஒன்று சொல்லுகிறேன் : கோவைக்கு அருகில் உள்ள ஓர் ஊரில், ரூபாய் ஐந்து லட்சத்தை எங்கள் வங்கி 'ஒர்க்கிங் காபிடல்' வகை யில் ஒரு தொழிலுக்குக் கடனாகக் கொடுத் தது. கடன் கணக்குச் சரியாகச் செயல் படவே இல்லை. வட்டியும் ஏறிக் கொண்டே இருந்தது. தீவிர நடவடிக்கை எடுத்தால், வங்கிக்கும் சரி, கடன் வாங்கிய வருக்கும் சரி, நஷ்டத்தில்தான் முடியும். எனவே உரிமையாளரை அழைத்து, நில வரத்தை அலசி ஒரு செயல் திட்டத்தையும் வகுத்தோம். சிறிது அவகாசமும் அளித் தோம். எலக்ட்ரோட் சம்பந்தப்பட்ட மார்க் கெட் விற்பனை சூடு பிடித்தவுடன், திட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாயைக் கட்டி விட்டார்கள். போகப் போக நிலைமை சீராகி விடும் என்ற நம்பிக்கையும் தோன்றி விட்டது!''

பாங்க் ஆஃப் இந்தியாவின் முது நிலை மேலாளர் ஒருவர் இன்னொரு விஷயத்தைச் சொன்னார் : ''தொழில் ஒன்று நொடித்து நோயில் விழும் நிலை ஏற்பட்டால், வேறு நிறுவனம் ஒன்று அதை ஏற்றுக் கொண்டு விடும் வாய்ப்புகள் இங்கே அதிகம்!''

பல பெரிய நிறுவனங்கள், எல்ஜி, டெக்ஸ்டூல் போன்றவை இருப்பதால், அவற்றைச் சார்ந்து சிறு தொழில்கள் பெருகி இங்கே வளர்ந்து கொண்டே இருக் கின்றன. ஒரு சிறு தொழிலதிபரின் வெற்றி, இன்னும் பலரை உருவாக்குகிறது.

''கடன் வழங்குவது இருக்கட்டும். வசூல் எப்படி?''

''புள்ளி விவரக் குறிப்புகள்படி, மொத்தமாகக் கோவை மாவட்டத்தில் எழுபது சதவிகிதத்துக்கு மேற்பட்டவர்கள் கடன் தவணைகளை ஒழுங்காகச் செலுத்தி விடுகிறார்கள்.

''**இ**து எல்லாம் போதாது; வங்கிகள் இன்னும் பெரிய அளவில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்குத் தம் கடமை யைச் செய்ய வேண்டும்!'' என்கிறார் மோகன் நம்பியார். (நடிகர் எம். என். நம்பி யாரின் மகன்.)

மோகன் நம்பியார், தென்னிந்திய இஞ்சினியரிங் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர்.

''வட்டி விகிதத்தைக் குறைக்க வங்கி கள் ஏதேனும் செய்தாக வேண்டும். அரசு இந்த விஷயத்தில் தீவிரமாகச் செயல்பட் டால் நல்லது!'' என்கிறார் மோகன் நம்பியார்.

டெக்ஸ்டைல் மெஷினரி பொருட்கள், பம்புகள், எலக்ட்ரிக் மோட்டார்கள் என்று இந்தச் சங்க உறுப்பினர்களின் தயாரிப்புக் கள் ஏராளம். ''இந்தியாவில் தயாராகும் விவசாய பம்பு செட்டுகளில், ஐம்பது சதவிகிதம் கோவையில்தான் தயாரா கின்றன! விவசாய விளைநிலமும் இங்கே அதிகம். பருத்தி உற்பத்தி கணிசமாக இங்கே உள்ளது!'' என்கிறார் மோகன்.

மற்ற மாவட்டங்களை ஒப்பிடும் போது, கோவையில் சிறு தொழில்கள் - சுயதொழில்கள் வளர்ச்சி அபரிமிதமாகக் காணப்படுகிறது என்றால் மக்களின் மனோ பாவமும், அவற்றுக்கு ஏற்பச் செயல்படும் அமைப்புகளும், வாட்டி வதைக்காத நிதி யுதவி வங்கிகளுமே காரணம்.

– **வாதூலன், எஸ்.வி.என்**

தெய்வ வாக்கு

ஏதோவொரு தெய்வீக சக்தி தன்னுள் இருப்பதாகக் கற்பிக்கப்பட்டு, தான் கூறும் சொற்கள் தெய்வவாக்காக நம்பப்பட்டு, தன்னை ஒரு அம்மனாகவே மக்கள் கருதத் தொடங்க, அதன் பலனாகத் தனிமை வாசத்துக்கு உட்படுத்தப்படும் ரேவதி -

தானும் ஒரு சராசரிப் பெண்தான், தனக்குள்ளும் ஆசாபாசங்கள் இருக்கும், தனக்கென்று துணை தேடி ஒரு மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து அதற்காக விழைவு கொள்ளும் ரேவதி -

முதல் முறையாக, தன் அண்ணன் அல்லாத ஒரு வித்தியாசமான ஆண் மகனைச் சந்தித்து, அவனுடைய ஒவ்வொரு செயலையுமே ஒரு புதுமையாக உணர்ந்து, படிப்படியாக அவன்பால் தன் மனத்தைப் பறிகொடுக்கும் ரேவதி -

அவனை அடைவதற்குக் குறுக்கே எது நின்றாலும், சுயநலம் கருதித் தன்னைச் சுற்றிலும் அமைந்த அரணாக விளங்கும் தன் அண்ணனே குறுக்கிட்டாலும் (அவன் அண்ணன் இல்லை என்பது பின்னர் உடைபடும் சிறு பிள்ளைத்தனமான சஸ்பென்ஸ்) அதை உடைத்து வெளியேறும் மனஉறுதியைப் படிப்படியாகப் பெறும் ரேவதி -

இப்படிப் பல முகமும் வியாபித்து நிற்கிறார்.


மற்றவர்களைக் குறை சொல்வதில் நியாயமில்லை. அவர்கள் உழைப்பு விழலுக் கிறைத்த நீர் ஆகிறது என்றால் அது அவர்களுடைய திறமைக் குறைவினால் அல்ல. பழகிப் போன, பார்த்து அலுத்துப் போன பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் என்பது தான் கோளாறு.

கார்த்திக் ஆகட்டும், விஜயகுமார் ஆகட்டும், ஸ்ரீவித்யாவாகட்டும், ராதா ரவி ஆகட்டும்... ஒரே மாதிரியான குணச்சித்திரங்களே அளிக்கப்படும் போது, என்னதான் திறமை வாய்ந்தவர்களானாலும், வேறு பாட்டையும் சுடுபாட்டையும் எப்படித்தான் கொண்டு வர முடியும்?

திரும்பத் திரும்ப இம் மாதிரியான பாத்திரங்களை ஏற்றுச் செய்வதில் அவர்களுக்கு ஏற்படுகிறதோ இல்லையோ, நமக்கு ஏற்படுவது - அலுப்பு.

– சி. ஆர். கே.





வாழ்வின் பிரச்னைகளை இவள் இன்முகத்துடன் ஏற்றுச் சமாளிக்கிறாள். அலுவலகப் பிரச்னைகள் ஆயிரம். அத்துடன் அன்புச் செல்வங்களின் தேவைகள். இரண்டையும் மலர்ந்த முகத்துடன் ஏற்கும் மன உறுதி இவளுக்கு உண்டு. இத்தகைய பெண்களுக்காகவே ஓவாளின் ஸன்மார் வழங்குகிறது — **ஸ்திரீ சக்தி.**

இது இவளுடைய விசேஷத் தேவைகளையும் எண்ணங்களையும் நிறைவேற்ற உதவும் திட்டம்.

INTRODUCING
STREE
SHAKTHI
MORE POWER TO WOMEN.

இவள் பாடுபட்டுச் சேர்க்கும் பணம் விரைவில் பெருக வளர்வதற்கென்றே வடிவமைக்கப்பட்டது.

ஸ்திரீ சக்தி — அளிப்பது ஓவாளின் ஸன்மார். ரூ.1000 கோடி ஸன்மார் குரூப்பின் பக்கபலத்தைக் கொண்ட ஒரு நிதி நிறுவனம். 24,000-க்கு மேற்பட்ட டெபாசிட்தாரர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நிறுவனம்.

ஸ்திரீ சக்தி — சிறந்ததையே விரும்பும் பெண்மணிகளுக்கு.

இப்பொழுது மாதந்தோறும் வட்டி பெறுங்கள் — 15%

ஸ்திரீ சக்தி — ரொக்க சர்ட்டிபிகேட்

திட்டம்	காலம் மாதங்களில்	தொடக்க டெபாசிட்*	முதிர்வடையும்போது வழங்கப்படக்கூடிய தொகை	விளைவான வருடாந்திர வருமானம்*
1	60	Rs. 950	Rs.2000	22.11%
2	48	Rs.1102	Rs.2000	20.37%
3	36	Rs.1280	Rs.2000	18.75%
4	25	Rs.1466	Rs.2000	17.48%

*தொடக்க டெபாசிட்டுகள் மேற்கண்டவாறு இருக்கும். அதிகப்படி டெபாசிட்டுகள் 60, 48, 36 மற்றும் 25 மாதங்களுக்கு முறையே ரூ.475/-, ரூ.551/-, ரூ.640/- மற்றும் ரூ.733/- ஆகிய தொகைகளின் மடங்குகளில் இருக்கும்.

பிக்சட் டெபாசிட்

காலம் மாதங்களில்	மாதாந்தர வட்டி*
25, 36, 48, 60	15%

*காலாண்டு அளவாண்டுகளில் வட்டி பெற விரும்பும் டெபாசிட்தாரர்களுக்கு, RBI கட்டளைகளின்படி மாதாந்திரக் கால அளவுகளில் ஆண்டு ஒன்றுக்கு 15% வீதத்தில் கணக்கிடப்பட்டு வட்டி வழங்கப்படும்.

குமுலேட்டிவ் டெபாசிட்

காலம் மாதங்களில்	டெபாசிட் தொகை	முதிர்வடையும்போது வழங்கப்படுவது*	ஒவ்வொரு கூடுதல் ரூ.1,000/- தொகைக்கு	விளைவான வருடாந்தர வருமானம்*
25	Rs.2000	Rs.2728	Rs.1364	17.47%
36	Rs.2000	Rs.3128	Rs.1564	18.80%
48	Rs.2000	Rs.3631	Rs.1815	20.39%
60	Rs.2000	Rs.4214	Rs.2107	22.14%

*மாதாந்தரக்கால அளவில் 15% வீதத்தில் வட்டி கணக்கிடப்பட்டு வழங்கப்படுதல் வரிப் பிடித்தத்திற்கு உட்பட்டு. வட்டியானது முதிர்வடையும்போது சேர்க்கப்பட்டு மொத்தமாக வழங்கப்படும். டெபாசிட் வைக்கப்பட்டிருக்கும் காலத்தில் வட்டி வழங்கப்படமாட்டாது.

FAA—

கிரைஸில் மூலம் உயர்ந்த பாதுகாப்பு
இந்த மதிப்பீடு, வட்டி மற்றும் அசல் தொகையைக் குறித்த காலத்தில் வழங்குவது பற்றிய பாதுகாப்பின் அளவு, உறுதியாக இருப்பதைக் குறிக்கிறது.

[illegible] 15% [illegible] 2. [illegible] ரூ.2000 - [illegible] 3. [illegible] 1000 - [illegible] ரூ.1000-[illegible] 4. [illegible] 5. [illegible] 15% [illegible] 6. [illegible] 7. [illegible] 8. [illegible] 9. [illegible]

[illegible]

டெபாசிட் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆனால் 12 மாதங்களுக்கு முன்பாக, டெபாசிட்டினைத் திரும்பப் பெறுவதற்கு:
அளிக்கப்படக்கூடிய வட்டி "ஒன்றும் இல்லை".

டெபாசிட் தேதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு, ஆனால் 24 மாதங்களுக்கு முன்பாக டெபாசிட்டினைத் திரும்பப் பெறுவதற்கு:
அளிக்கப்படக்கூடிய வட்டி ஆண்டு ஒன்றுக்கு 11%

டெபாசிட் தேதியிலிருந்து 24 மாதங்களுக்குப் பிறகு, ஆனால் முதிர்வடையும் முன்னரே டெபாசிட்டினை திரும்பப் பெறுவதற்கு:
அளிக்கப்படக்கூடிய வட்டி, [illegible] 1% [illegible]

[illegible] 2% [illegible] 75% [illegible]

[illegible]

[illegible] 1977 [illegible]

[illegible]

[illegible] : 29 [illegible] 1949

[illegible] 1. [illegible] 2. [illegible] 3. [illegible] 4. [illegible] 5. [illegible]

[illegible]

[illegible]

1. திரு. என். சங்கர், [illegible] 292, [illegible] சென்னை 600 018, [illegible] ● 2. திரு. [illegible] 30 [illegible] சென்னை 600 028, [illegible] ● 3. திரு. [illegible] சென்னை 600 034, [illegible] ● 4. திரு. [illegible] சென்னை 600 018, [illegible] ● 5. திரு. [illegible] சென்னை 600 004, [illegible] ● 6. திரு. [illegible] ● 7. திரு. [illegible] 264 [illegible] சென்னை 600 018, [illegible] ● 8. திரு. [illegible] 24 [illegible] சென்னை 600 034, [illegible] ● 9. திரு. [illegible] 114 [illegible] சென்னை 600 035, [illegible] ● 10. திரு. [illegible] IOB [illegible] 762, [illegible] சென்னை 600 002, [illegible] ● 11. திரு. [illegible] HDFC Ltd. [illegible] 169, [illegible] 400 020, [illegible] ● 12. திரு. [illegible] SRF Ltd. [illegible] 9/10, [illegible] புது டெல்லி 110 002, [illegible]

[illegible]	[illegible] ரூ.	[illegible] ரூ.	[illegible]	[illegible] ரூ.	
மார்ச் 31, 1989	1,17,73,262	1,23,93,262	மார்ச் 31, 1989	20,00,000	(20%)
மார்ச் 31, 1990	2,20,48,241	1,84,76,241	மார்ச் 31, 1990	49,00,000	(20%)
மார்ச் 31, 1991	1,55,99,309	1,33,99,309	மார்ச் 31, 1991	49,00,000	(20%)

[illegible]

பொறுப்புகள்	31.03.91 அன்று உள்ளபடி	31.03.90 அன்று உள்ளபடி	சொத்துக்கள்	31.03.91 அன்று உள்ளபடி	31.03.90 அன்று உள்ளபடி
பங்கு மூலதனம்	2,45,00,000	2,45,00,000	நிலையான சொத்துக்கள்	21,38,52,322	22,21,95,208
[illegible]	5,68,61,030	4,70,80,347	முதலீடுகள்	7,97,750	2,98,750
[illegible] கடன்கள்	22,47,26,214	13,54,06,910	நடப்பு சொத்துக்கள் கடன்கள் மற்றும் அட்வான்ஸ்கள்	51,28,58,209	29,38,97,370
[illegible] கடன்கள்	27,49,43,000	22,23,64,000			
[illegible]	23,81,603	1,32,63,743			
[illegible] பொறுப்புகள் மற்றும் [illegible]	14,66,96,432	4,43,76,328			
	72,95,08,281	51,73,91,328		72,95,08,281	51,73,91,328

[illegible]

அ) [illegible] – ரூ.426.00 லட்சம் (1990: ரூ.473.48 லட்சம்)

ஆ) [illegible] – ரூ.35.11 லட்சம் (1990: எதுவும் இல்லை)

இ) [illegible] ரூ.16,62,701 (1990: 1,27,53,289).

[illegible] ரூ.8136.10 லட்சம்.

ஆ) 31.03.1991 [illegible] ரூ.5014.53 லட்சம் [illegible]

[illegible]

[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]

[illegible] 1992 ஜூலை 13 [illegible]

[illegible]

இடம்: சென்னை
தேதி: ஜூலை 13, 1992.

SANMAR FINANCIAL

ஓவர்சீஸ் சன்மார்
ஃபைனான்ஷியல் லிமிடெட்

75, [illegible] சென்னை 600 086. [illegible]

[illegible] 75, [illegible] சென்னை 600 086. [illegible] 476754, 863548. [illegible] 93 [illegible] 400 021. [illegible] 2873283, 241057. [illegible] 560 052. [illegible] 208884. [illegible] 636 004. [illegible] 17130. [illegible] 200 [illegible] 625 001. [illegible] 37251.

மேட்டுக் குடியினரின் ஆட்டம்; ஓட்டுக் கூரையினருக்கும் கொண்டாட்டம்!

● அருணா

சுமார் நூறு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள கோவை கோல்ஃப் கிளப்பில் 250 உறுப்பினர்களில், 80 பேரே சுறுசுறுப்பாக விளையாடும் அங்கத்தினர்கள்.

இதில் மூன்று பேர் பெண்கள் :

அருணா குழந்தைவேலு; சித்ரா குட்டப்பா; ராஜேசுவரி.

''இந்த கிரவுண்டு தயாராவதற்கு முன் நாங்கள் ஊட்டிக்குத்தான் போய் விளையாடிக் கொண்டிருந்தோம்!'' என்றார் அருணா.

அருணா சென்னைக்காரர்தான். கல்யாணத்துக்குப் பிறகு கோவை வாசியாகி விட்டாலும், சென்னையில் கற்றுக் கொண்ட கோல்ஃப் ஆட்டத்தை விட்டு விடவில்லை. மாநில அளவில் பல டூர்ன மென்டுகளில் கலந்து கொண்டு, பரிசுகளும் பெற்றவர் அருணா.

ஞாயிறுகளில் காலை ஆறு மணிக்கே





● கலகலப்பான 'காடி' பையன்கள்

வந்து விடுகிறார் விளையாட. பிற்பகல் 12, 1 வரை ஆடுகிறார். இதமான குளிர்காற்றிலும், வியர்த்து விறுவிறுக்கச் செய்கிற ஆட்டம். சில வேளைகளில் காற்று ஆக்ரோஷமாக வீசும் போது ஆடுவது கஷ்டம்தான்.

கோவை கோல்ஃப் கிளப்பில் விளையாடுகிறவர்களுடன் கூடவே வண்டி தள்ளி, சாதனங்கள் எடுத்துத் தந்து உதவும் பையன்கள் 'Caddy boys'. சிலரைச் ச ந் தி த் த போது...

''சுமார் முப்பது பேர் இங்கே வேலைல இருக்கோம். எல்லோரும் பக்கத்து செட்டி பாளையம் பள்ளியில் படிக்கிறவங்க. மாசம் இருநூறு ரூபா சம்பளம் தர்றாங்க. தவிர நோட்டுப் புத்தகம், போட்டுக்க சொக்கா எல்லாம் தருவாங்க. ரொம்ப உதவியா இருக்குதுங்க சார்.''

''இந்த விளையாட்டு உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

''இப்ப பிடிக்கப் போச்சுங்க. லீவு நாள்ல இங்க வேலையில்லாதப்ப நாங்களே தயார் பண்ண கால்ஃப் ஸ்டிக் வச்சு, வெளியில கிரவுண்ட்ல விளையாடுவோம்.''

''விளையாடத் தெரியுமா?''


''நல்லாத் தெரியுங்க சார்.''

தெரிவித்து விட்டு, நைன் ஹோல்ஸ், எய்ட்டீன் ஹோல்ஸ், பேடிங், ஓவர், டி, லாஸ் அயன் எனச் சர்வ சாதாரணமாக விளக்குகிறார்கள். மேட்டுக்குடி மக்களின் விளையாட்டு, குக்கிராமத்துப் பையன்கள் கற்று வைத்திருக்கிற சமத்துவம் புன்னகை தருவிக்கிறது.

கிளப் கமிட்டியினருக்கு ஒரு வேண்டுகோள் : வருடம் ஒரு போட்டியாவது மாறுதலுக்கு, இந்தச் சிறியவர்களுக்கு இடையே நடத்தி, திறமை இருந்தால் வெளிக் கொணரலாமே?

புள்ளிகள் செய்திகள்!

நுகர்வோருக்குப் பாதுகாப்பு!



✱ கதிர் மதியோன்

வங்கிகள் அலட்சியமாகச் செயல்பட்டு வாடிக்கையாளர் பாதிக்கப்பட்டாரா? கதிர்மதியோனே கதி. தபால் துறை தாமதம் காரணமாக, இழப்பு ஏற்பட்டதா? பார்த்துக் கொள்ளுவார் இந்தச் சிரித்தமுக மனிதர். டெலிபோன் டைரக்டரி போது வாடகையில் கட்டணத்தைக் குறைக்க முறையிட்டு வென்றவர் கதிர்மதியோன். மேட்டுப்பாளையம் நுகர்வோர் பாது காப்புக் குழுவுக்கு இவர் செயலராக இருந்தாலும், கோவை சம்பந்தப்பட்ட நுகர்வோர் பிரச்னைகளையும் தயங்காது எடுத்துக் கொண்டு விடுகிறார்!

சுகாதாரச் சீர்கேடு, சமையல் எரிவாயு விநியோகத்தில் குழப்பம், தாமதம் - இருக்கவே இருக்கிறார் கதிர்மதியோன். பஸ் கட்டணத்தை உயர்த்தும் போது, 4.51 பைசாவை 4.75 என்று கொண்டு வந்தது போக்குவரத்துத் துறை. பார்த்தார் கதிர்மதியோன். பிடித்தார் ஒரு பிடி. 4.60 ஆகி விட்டது!

''உங்களை மக்கள் வந்து பாராட்டியதுண்டா?'' என்று கதிர்மதியோனைக் கேட்டோம்.

''நன்றி தெரிவிப்பார்கள். ஜேஸீஸ் அமைப்பு ஒரு விருது கொடுத்தது!'' என்றார் அடக்கமாக.

பேசப்பட்ட புத்தகம்

சவுத் இந்தியா விஸ்கோஸ் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜி. எஸ். கேஷவமூர்த்தி எழுதிய 'சீஃப் எக்ஸிக்யூடிவ் கான்சப்டஸ் ஃபர் சக்ஸஸ்' நிர்வாகத்துறை வட்டாரத்தில் பேசப்பட்ட புத்தகம். கலிபோர்னியாவிலுள்ள நியூபோர்ட் பல்கலைக் கழகம், 1992 ஆம் ஆண்டின் சிறந்த நிர்வாகி என்று இவரைக் கௌரவித்திருக்கிறது. கேஷவமூர்த்தி வேறு பல நிறுவனங்களில் இயக்குனராகவும் இருந்து வருகிறார்.



✱ டாக்டர் ஜி.எஸ். கேஷவமூர்த்தி

காட்சி - 16

(இடம் : முதியோர் கல்வி வகுப்பு) வீணா அங்கே வருகிறாள்.

பெரிய : நீயா?.... நீ... நீ எங்கே வந்தே?

வீணா : காப்பி டம்ளர் இருக்கற எடத்துக்குத்தான் ஈ வரும்! கொசு இருக்கற எடத்தைத் தேடித்தான் மலேரியா வரும்!..

பெரிய : அம்மா மலேரியா ஊசி போடறவங்க.

வீணா : புரியும்படியாவே சொல்றேன். இவருக்கு ஜுரம் வந்தா எனக்குத் தர்மா மீட்டர் வைப்பாங்க!

பெரிய : யாரந்த முட்டாள் டாக்டர்?

வீணா : ஷட் அப்! (மற்றவர்களைப் பார்த்து) இன்னுமா புரியலை! இவருக்கு நான் பொண்டாட்டி.

பெரிய : அடிப்பாவி! கல்வி கழியாத வாலிபன் மேல பழிசுமத்துறியே! நம்பாதீங்க! பொய் சொல்றா!

வீணா : ஆல்ரைட்... இங்க யாருங்க பெரிய மனுஷன்?

பண்ணை : நான்தான்!

வீணா : நல்ல பாழுங்கிணறா எங்க இருக்குன்னு சொல்லுங்க.

பண்ணை : கோயிலாண்ட ஒரு கிணறு இருக்கு... பக்கத்துல வயக்காட்ல ஒரு கிணறு இருக்கு...

பெரிய : ஏங்க, அவுங்க என்ன தூர் எடுக்கறதுக்காகவா கேக்கறாங்க?

பண்ணை : பின்னே?

பெரிய : சும்மா தொப்புன்னு குதிக்கறதுக்கு விசாரிக்குது!

எல்லைச்சாமி : ஊர் எல்லை இனை றுன்னு ஒண்ணு இந்த மாதிரி விஷயங்களுக்குன்னே நோண்டி வச்சிருக்குதே!

பெரிய : என்ன கட்டணமோ அதைப் பஞ்சாயத்ல கட்டிட்டு உள்ள குதிக்கலாமாம்! போங்க!

வீணா : போயிடுவேன்! ஆனா எனக்கு நீச்சல் தெரியாதேன்னு பாக்கறேன்!

பண்ணை : ஏம்மா சாவறதுக்கு ஒனக்கு வேற ஊரே கெடக்கலியோ?

சி. பண்ணை : தாயே நீ மொதல்ல ஊரக் காலி பண்ணு!

* "ஆ. ஆ! ஞாபகம் வந்திடுச்சு..."



வீணா (கருப்பாயியிடம்) : அம்மா நீங்களும் பொண்ணு நானும் பொண்ணு... ஒரு பொண்ணோட கஷ்டம் இன்னொரு பொண்ணுக்குத்தான் புரியும்னு சொல்வாங்க...

பெரிய : யாரு சொன்னாங்க? யாரும் சொல்லலை. நீங்களா நினைச்சுக்க வேண்டியது... நாங்க எப்பவாவது சொல்றமா? ஆம்பளைங்க கஷ்டம் ஆம்பளைக்குத்தான் தெரியும்னு...?

வீணா : இந்தத் தாலிய நீங்க கட்டலை?

பெரிய : ஒன்னைப் பாத்ததே இல்லம்மா! எப்படி கட்டி இருக்க முடியும்?

வீணா : 12, ரங்கனாதன் தெரு, மாம்பலம் - இங்க குடும்பம் நடத்தலை?

பெரிய : நீ சொல்ற அட்ரஸ் சரவணா ஸ்டோர்ஸ்! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும்!...

வீணா : என் வயித்துல வளர்றதுக்கு நீங்க பொறுப்பு இல்ல?

பெரிய தம்பி

பெரிய : ஒன் வயத்துல கட்டி கூட வளரும்... அதுக்கெல்லாமா நான் பொறுப்பு எடுத்துக்க முடியும்?

வீணா : வயத்துல வளர்றது கட்டி இல்ல சார்! குட்டி! மாஸ்டர் பூவரக!

பெரிய : நோ. நான் இதை நம்ப மாட்டேன்.

பண்ணை : எதுக்கு வீண் சச்சரவு? கற்பூரம் கொண்டா!

தெருப்புழுதி : இந்தாங்க!

பண்ணை : இதைக் கைல ஏந்தி வச்சுக்கிட்டு சத்தியம் பண்ணுங்க! நீங்க சொல்றது நிசம்னா கை சுடாது. பொய்யின்னா கை கட்டு ஒட்டையாயிரும்.

பெரிய : நான் தயார்! கொண்டாங்க, கொளுத்துங்க! *(கொளுத்த அது எரிகிறது)*

பண்ணை : நியாயம் அந்தப் பக்கம் இருக்கு தாயி! ஆத்தாவே சொல்லிட்டா! வாங்கடா! *(எல்லோரும் வெளியேற...)*

வீணா : எதுக்கும் ஒரு நாணயம் வேணும் மிஸ்டர் பெரியதம்பி!

பெரிய : அதான் இந்த நாணயத்து மேல கற்பூரத்த ஏத்திவேன் வீணா குட்டி!

காட்சி - 17

(பண்ணை வீடு)

கருப்பாயி : நீதான் அவரைப் புருசன்றே அவரு இல்லன்னு கற்பூரத்த ஏத்திச் சத்தியம் செய்றாரே!

வீணா : வெறும் கைல கற்பூரத்த ஏத்தினா உள்ளங்கை ஓட்டையாயிடும்னு தெரியாதா? கற்பூரத்த ஒத்த ரூபா காசுக்கு மேல வச்சு சத்யம் செஞ்சிருக்காரு!.. பாருங்க!

(கறுத்துப் போன காசைக் காட்டுகிறாள்)

பண்ணை : என்ன இத்தனை கறுப்பா யிடுச்சு! கறுப்புப் பணமா?...

வீணா : நல்லா கேட்டுக்குங்க... என் புருசனுக்கு அம்னீசியா!

பண்ணை : எங்க பாட்டி பாட்டனுங்கள்ளாம் மலேசியா!

வீணா : அம்னீசியா ஒரு வியாதி!...

பண்ணை : வியாதியா?

வீணா : இந்த வியாதி இருந்தா பழசு பூரா மறந்து போயிடும்!

பண்ணை : அப்ப சின்ன பண்ணைக்குக் கூட அம்னீசியா!

வீணா : நிஜமாவா?

பண்ணை : அட ஆமாங்கேன்... ஒரு வாட்டி கைமாத்தா ஆயிரம் ரூபா வாங்கி இருந்தான்... மறந்துட்டான்.

வீணா : இது அப்படி இல்ல.. ஒரு வாட்டி என் புருசன் பெயிண்ட் அடிக்கும்



✽ கற்பூரம் கொளுத்தி, சத்தியம் செய்கிறான் பெரியதம்பி.

போது மாடில இருந்து கீழே விழுந்துட்டாரு! பின் மண்டையில செம அடி!... அந்த வினாடியில இருந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது குடும்பம் நடத்தினது எல்லாம் மறந்து போச்சு!...

கருப்பாயி : நல்லவேளை! பின் மண்டையில அடிபட்டுச்சு... முன் பக்கம் அடி பட்டிருந்தா எதிர்காலமும் இல்ல மறந்து போயிருக்கும்.

பண்ணை : ஏதோ முன்வினை பாக்யம்... தப்பிச்சிட்டாரு! இதுக்கு மருந்து?...

வீணா : மருந்தாவது மாயமாவது?... மறுபடியும் தலைல அடிபடணும்... அந்த அதிர்ச்சில பழைய ஞாபகம் திரும்பலாம்!...

பண்ணை : இவ்வளோதானே! விடு! பண்ணை ஆளுங்கிட்ட சொன்னா கபாலத்தையே கலக்கிட மாட்டாங்க!

வீணா : லேசா தட்டிட்டு விட்டுறப் போறாங்க... ஞாபகம் வந்து எல்லாத்தையும் ஏத்துக்கற வரைக்கும் தட்டச் சொல்லுங்க.

காட்சி - 18

(மேடையின் ஒரு பக்கமாக மட்டும் வெளிச்சம். பெரியதம்பி நடந்து வர, அவனைத் தாக்க ஆட்கள் கம்புடன் பின் வருதல்.)

பெரிய : என்னப்பா என்ன விஷயம்?

எல்லைச்சாமி : ஒங்களுக்கு மெக்னீசியாவா?

எஸ்.வி.சேகர்
வசனம்: வெங்கட்

பெரிய : மெக்னீசியாவா?...

எல்லைச்சாமி : அதாங்க பழசெல்லாம் மறந்து போற வியாதி. அமரிபத்துல கூட சிவாஜிக்கு வந்திச்சே?...

பெரிய : அம்னீசியாவா!... எனக்கு அதுன்னு யாருப்பா சொன்னாங்க?

எல்லைச்சாமி : ஒங்க சம்சாரம்தான்! ஒங்களைப் பின் கபாலத்துல தட்னா அந்த அதிர்ச்சில ப ழ ை ய சம்பவமெல்லாம் ஞாபகம் வருமாமே! திரும்புங்க.

பெரிய : டேய்! சொன்னாக் கேளு. எனக்கு அம்னீசியா இல்ல...

ஆள் : அப்ப ஏன் கட்ன சம்சாரத்த மறந்தே?

பெரிய : எவளையா நான் கட்னேன்?

ஆள் : நீ மறந்துட்ட. இப்ப நீயே ஒன் வாயால கடகடன்னு சொல்லுவ பார்!

(அடிப்பதற்காகக் கம்பை ஓங்க....)

பெரிய : ஆ! ஆ! வந்திடிச்சு!

ஆள் : என்ன?

பெரிய : பழைய ஞாபகம்!

ஆள் : இன்னும் தட்டவே இல்லியே!

பெரிய : அடிக்கிற மாதிரி கம்பைத் தூக்கினீங்களா... அந்த அதிர்ச்சி மூளை யைத் தாக்கிடிச்சு.. பழசெல்லாம் ஞாபகம் வந்திடுச்சு. நான்தான் வெல்லக் கவுண்டர்.


ஆள் : வெல்லக் கவுண்டரா?

பெரிய : ம்... சக்கரைக் கவுண்டருக்குத் தாய்மாமன் வெல்லக் கவுண்டர்! எங்க, என் மகன் வெல்லப் பாகு கவுண்டர்?...

எல்லைச்சாமி : அட! கட்டி வெல்லக் கவுண்டர் மகன் அச்சு வெல்லக் கவுண்டரா நீ! இந்தக் கிராமத்துல வாழ்ந்து, ராணுவத் துல செத்தது நீயா?...

(தொடரும்)

படங்கள் : யோகா


இனி ஒரு சதி
கதை:
௭
பத்மா ரவிசங்கர்
படம்:
மாலை. யுவராஜை வழக்கமாகச் சந்திக்கும் பார்க்கில் அர்ச்சனா...
ஏன் இன்னும் யுவராஜ் வரலை?.. எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது?
..சந்திரசேகர் படுக்கையில் விழுந்ததிலிருந்தே யுவராஜ் சரியா யில்லை... சரி, மணி ஏழாச்சு, கிளம்பலாம்...
அப்போது யுவராஜ் ஓடி வந்து மூச்சிரைக்க...
நல்ல வேளை உன்னைப் பிடிச்சுட்டேன்..
என்ன ஆச்சு டார்லிங்?
சொல்றேன்..
சந்திரசேகர் வீட்டில் கார்த்திகேயன்..
கோல்ட் பிளடட் மர்டர். நெற்றியிலே சுட்டிருக்கு... துப்பாக்கி யாருது?
மாமாவுடையது தான்!
மறுபக்கம் ஆராவமுது!...
துப்பாக்கியை டெஸ்ட் பண்ணிட்டேன், ஸார். கைரேகை ஒண்ணும் கிடைக்கலே.
கிளவுஸ் போட்டிருப்பானோ?


இதுக்குக் கைரேகை எதுக்கு? நான்தான் சொல்றேனே, துப்பாக்கி வெடிக்கிற ஓசை கேட்டுது; ஓடிப்போய்ப் பார்த்தேன்; பால்கனி வழியா ஒரு உருவம் தப்பிச்சு ஓடித்து; யுவராஜ் மாதிரிதான் இருந்துச்சு!
என்ன கலர் சட்டை...?
சிவப்பு டி ஷர்ட்.
அந்தக் கலர் டி ஷர்ட் யுவராஜ் கிட்ட இருக்கு. ஃபேவரிட். அடிக்கடி போடுவாரு.
அது சரி, உங்க தலைல என்ன கட்டு...?
டேபிள் முனை இடிச்சு ரத்த காயமாயிட்டுது. தெருக்கோடி டாக்டர் கிட்ட தையல் போட்டுக்கிட்டு திரும்பி வரப்பதான் மாடியிலே டுமீல் சத்தம்!
ராஸ்கல், நான் வெளியே போற நேரத்துக்காகக் காத்திருந்து வேலையை முடிச்சிருக்கான். நான் உள்ளே வரவும் ஓடிட்டான்!
அப்போ மணி?
ஆறரை இருக்கும்!
அவன் கிட்ட துப்பாக்கி எப்படி கிடைச்சுது?
மாமாவோட டிராயர்ல தான் பூட்டி வைச்சிருந்தது. அவன் கிட்ட தான் சாவி. பெர்சனல் செக்ரட்டரியாச்சே!
ஆள் அரவம் கேட்கவும் பதட்டத்துல துப்பாக்கியைப் போட்டுட்டு ஓடிட்டான்!
தொடரும்

அடுத்த முதல்வர் திருநாவுக்கரசாமே?

● பா. சிவகுமார், குஞ்சரம்.

? செய்த தியாகத்தைப் பாராட்டி தியாகிகளைப் பெருமைப்படுத்துவதிலும் வறுமையில் உழலும் தியாகிகளுக்கு உதவ பண முடிப்பு அளிப்பதிலும் என்ன தவறு? அது எப்படி கூலியாகும்?

! தியாகிகளுக்குப் பரிசு அளிப்பது என்பது இப்போது ஒன்றும் புதிய விஷயமில்லை. தேசம் சுதந்திரம் பெற்ற சிறிது காலத்துக்குள்ளாகவே ஆரம்பித்து விட்டார்கள். 'தியாகி நிலம்' என்று தியாகிகளுக்குத் தமிழக அரசு நிலம் ஒதுக்கியது. அப்போது ராஜாஜி மேற்குவங்க ஆளுனராக இருந்தார். ''தமிழக அரசின் காரியங்களில் நான் நேரடியாகக் குறுக்கிட முடியாது; என்றாலும் நல்லெண்ணத்துடன் ஆலோசனை வழங்குகிறேன். இந்தச் செயல் தவறானது. தியாகத்துக்குப் பிரதிபலன் எதிர்பார்த்தால் அதன் பெயர் தியாகமே அல்ல. எந்தவிதமான பிரதிபலனும் கருதாமல்தான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அதுதான் சாத்வீகம்'' என்றார். உடனே எல்லாரும் (''கல்கி'' கிருஷ்ணமூர்த்தி உள்பட) தவறை உணர்ந்து நிலத்தைத் திருப்பித் தந்தார்கள். அரசும் அந்த யோசனையைக் கைவிட்டது. இதையேதான் இன்றைக்கும் நான் சொல்கிறேன். தியாகிகள் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அது அவர்கள் விரும்பி, வலிய ஏற்றுக் கொண்ட ஒன்று. 'நான் தியாகம் செய்தேனே, எனக்கு உதவுங்கள்' என்பது தியாகமாகாது. தியாகிகளை அவர்களது குடும்பத்தினர் பரிவோடு கவனித்து வருவதுதான் சரி.

● த. ரெங்கராஜுலு, சிதம்பரம். ❑

? வெள்ளையர் ஆட்சியில் பட்டங்கள் விருதுகள் பெறுவதை நாம் விரும்பவில்லை. இப்போது நாம் நமக்கே விருதுகள் வழங்கிக் கொள்கிறோம். வித்தியாசம் என்ன?

! வெள்ளையர் ஆட்சியில் அவர்களுடன் ஒத்துழைத்தே சுயாட்சி பெற விரும்பியவர்கள் ஒரு பக்கம்; போராடி பூரண சுதந்திரத்தைப் பெற விரும்பியவர்கள் மறுபக்கம். முன்னவர்கள் பெற்ற பட்டங்களை பின்னவர் இகழ்ந்தார்கள். ஆனாலும் அந்தப் பட்டங்களுக்கு அந்தக் காலத்தில் ஒரு மதிப்பு இருந்தது. இன்று மானாவாரியாக அள்ளிக் கொடுக்கப்படும் பட்டங்களுக்கு மதிப்பு பூஜ்யம்.

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? பெட்ரோல் விலை மறுபடி உயர்ந்து விட்டதே! ஜெ. ஆயிரம் கார் பவனி மறுபடி புறப்படுவாரா?

! பெட்ரோல் விலை உயர்வு பற்றி அவருக்கு என்ன கவலை? எப்படி அவரை பாதிக்கப் போகிறது? ஆயிரம் கார் பவனி என்று அறிவிக்காவிட்டாலும் ஐந்நூறு காராவது திருச்சிக்குச் செல்லாதா என்ன? மேலும் கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கட்டும் என்றுதான் வாழை மரப் பந்தலும் பழவகை அலங்காரங்களும் ஏற்பாடாகியுள்ளன!

● எஸ். நாரம்புநாதன், அரக்கோணம்.

? ''கட்சியில் பூசல் இருக்கிறது; பிளவு இல்லை'' என்கிறாரே வாழப்பாடியார்; விளக்கம் என்ன?

! இடக்கரடக்கல்!

● முகவை முத்துசாமி, தொண்டி.

? அடுத்த முதல்வர் திருநாவுக்கரசாமே?

! அடுத்த பிரதமர் சிந்தியாவாமே! 'பெல்' சங்கர் சொல்லிட்டாரே!

● சி. சரவணன், சேலம்.


? சினிமா கட்டணம் உயர்வு பற்றி?

! 'சினிமா கட்டணம் உயர்ந்தால் என்ன? வீடியோ டெக் வாங்கி வீட்டிலேயே சினிமா பார்க்கலாமே' என்று (பிரெஞ்சு அரசி போல) கட்டண உயர்வை அனுமதித்த நம்மவர் கூறக்கூடும்.


● என். சுரேஷ், சேலம்.

? ''டெல்லி செங்கோட்டையில் ஜெயலலிதா கொடியேற்றும் சூழ்நிலை ஏற்படும்'' என்று அ.தி.மு.க. எம்.பி. ஒருவர் கூறியுள்ளதைப் பார்த்தீரா?

! அ.தி.மு.க.வில் இந்த அளவுக்குக் கிண்டலடிக்கும் துணிவை ஒருவர் பெற்றிருக்கிறார் என்றால் ஆச்சர்யம்தான்!



* அடுத்த முதல்வர்?



* அடுத்த பிரதமர்?

● அ. அப்துல்காதர், அரியநாயகிபுரம்.

? "எழுத்தாளர்களிடம் ஒற்றுமை எதிர்பார்ப்பது அபத்தம்" என்கிறாரே, சுஜாதா?

! எழுத்தில் ஒற்றுமை இருக்கக் கூடாது தான். அதற்காக எழுத்தாளர் சங்கம் அமைத்துச் சில நற்பணிகள் செய்வதில் கூட ஒற்றுமை இல்லையென்றால் இவர்கள் எப்படி ஒருமைப்பாடு பற்றி எழுதிப் பிறருக்கு வழி காட்ட முடியும்!

● ஆர். நீலகண்டன், வேப்பத்தூர்.

? டைரக்டர் ப. நீலகண்டன் பற்றி...?

! எம்.ஜி.ஆரை வைத்துப் பதினேழு படங்கள். எல்லாம் வெற்றி. கதர் தவிர வேறு எதுவும் அணியாத காங்கிரஸ்காரர். எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் என்று தொடங்கி, "முள்ளில் ரோஜா" டி. கே. எஸ். சகோதரர்கள் அரங்கேற்ற, நாடக ஆசிரியராகப் பரிணமித்தவர். பிறகு, "நாம் இருவர்"; "வாழ்க்கை". அண்ணாவின் "ஓர் இரவு" எடுக்கப்பட்ட போது டைரக்டராகி, பெரிய வெற்றி. அப்புறம்தான் எம்.ஜி. ஆர். காங்கிரஸும் தி.மு.க.வும் திரைப்படத்துக்காக இணைந்தது ஆச்சர்யம். நீலகண்டன் சினிமா உலகில் கண்டது ஒரு சகாப்தம்.

● மா. பழனிசாமி, கோவை.

? இவ்வளவு வசதி, செல்வாக்கு இருந்தும் பிரியங்கா பி.ஏ. தேர்வில் தோல்வி அடைந்துள்ளாரே?

! வசதிக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லை என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணம். செல்வாக்குக்கு அவரது ஆசிரியர்கள் அடிமைப்படவில்லை என்பது நிதர்சனம்.

● மஞ்சுதேவன், கல்கத்தா.

? பங்காரப்பா?

! உடலில் பூசியிருப்பது விளக்கெண்ணெய்ப்பா!

● தா. சிந்துகுமார், திருவட்டார்.

? உங்களைச் சமீபத்தில் சந்தோஷப்படுத்திய சம்பவம்?

! ஒன்றல்ல, இரண்டு. 'நாட்டின் அன்னியச் செலாவணி நிலை இத்தனை மோசமாக இருக்கும் போது, என்னடா இது, நம்ம முதல்வர் இரண்டரை கோடி ரூபாய் செலவழித்துக் கொண்டு அயல்நாடுகளுக்குப் போகிறேன் என்கிறாரே; மற்ற முதல்வர்களுக்கு அனுமதிக்கப்படுவதை விட ஆறு




● மறைவு பற்றி?



● விளக்கெண்ணெய்!



● தேர்வில் தோல்வி?



● ஒற்றுமையாவது ஒன்றாவது!

மடங்கு அதிகம் கேட்கிறாரே; அதையும் நம் பிரதமர் பதினோரு அ.தி.மு.க. எம்.பிக்களின் ஆதரவு கருதி அனுமதிக்கிறாரே; முதல்வருடன் சசிகலா தவிர பத்து அரசு அதிகாரிகளும் மூன்று போலீஸ் அதிகாரிகளும் போகத்தான் வேண்டுமா? இதைத் தலையங்கம் எழுதி வன்மையாகக் கண்டிக்க வேண்டும் போலிருக்கே' என்று எண்ணியிருந்த சமயத்தில், தமது ஐம்பது நாள் பயணத் திட்டத்தை அந்நியச் செலாவணி நிலை கருதி முதல்வர் ரத்து செய்து விட்டார் என்ற செய்தி வந்து மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. இரண்டாவது, மாணவர்கள், பெற்றோர்களின் கருத்தை ஏற்று, தனியார் மருத்துவக் கல்லூரி விஷயத்தில் தமது கொள்கையை முதல்வர் மாற்றிக் கொண்டது. இரண்டுமே பல்டிகள்தான் என்றாலும் பாராட்டுக்குரிய பல்டிகளே!

● ச. ஆ. கேசவன், இனாம்மணியாச்சி.


? இந்தியாவின் நாலாந்தரக் குடிமகன் யார்?

! தீப் பெட்டித் தொழிலகங்களிலும் பட்டாசுத் தொழிலகங்களிலும் போதிய பாதுகாப்பு இன்றி, நாள் கூலிக்கு வேலை செய்யும் ஆண், பெண், குழந்தைகள். இவ்வாண்டு தீபாவளி கொண்டாடி மத்தாப்பு கொளுத்தும் போது, உங்கள் வீட்டு வாசலில் ஒளி சிந்த, தங்கள் குடும்பங்களில் இருள் கவித்துக் கொண்டவர்களைச் சற்றே எண்ணிப் பாருங்கள். இறந்து விட்ட 12 பேருக்காகவும் ஆபத்தான நிலையில் உயிருடன் போராடிக் கொண்டிருக்கிற 10 பேருக்காகவும் படுகாயமடைந்து பரிதவிக்கும் 17 பேருக்காகவும் ஒரு நிமிடம் மௌன அனுதாபமாவது செலுத்துங்கள்.

☐ ரூ 25 பரிசு பெறுபவர் :
த. ரெங்கராஜுலு.
20, பொன்னம்பல நகர்.
சிதம்பரம் - 608 001.



செப்டம்பர் 27 - அக்டோபர் 6, 1992





உங்கள் பாதுகாப்பான வருங்காலத்துக்குப் பாதை அமையுங்கள்.

முன்னெப்போதையும் விட, இப்போது ஸ்ரீராம் சீட்டு மிகவும் அவசியமாகிறது. பணவீக்கம், விலைவாசி உயர்வு, பெருகும் தேவைகள் என்றுள்ள இன்றைய சூழ்நிலையில், அன்றாடம் சமாளிப்பதே சிரமமான காரியம். அப்படியிருக்கும்போது வரும் காலத்தைப் பற்றித் திட்டமிடுவதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். 5,00,000 பேருக்கு மேல் ஸ்ரீராமைப் பயன்படுத்தி இன்று மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துவதோடு வருங்காலப் பாதுகாப்புக்கும் பாதை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் உடனே செயல்படுங்கள். ஸ்ரீராம் சிட்ஸில் சேர்ந்து உங்கள் வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாகவும் பாதுகாப்புள்ளதாகவும் அமையுங்கள்.

ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத் துறை அல்லது தனியார் துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

வேலையிலிருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவரின் கணவருடைய உத்தரவாதமே போதும்.

சந்தாதாரர் பரிசுகள்

	சீட்டின் மதிப்பு ரூ.		சந்தாதாரருக்குக் கிடைக்கும் பரிசு
1.	200 x 40 =	8,000	– மூடியுடன் கூடிய சைடு பௌல்
2.	250 x 40 =	10,000	– 4 கிராம் வெள்ளிக் காசு
3.	500 x 30 =	15,000	– மூடியுடன் கூடிய [illegible] ஃப்ரூட் பௌல்
4.	625 x 40 =	25,000	– அலுமினியம் முலாமிட்ட [illegible] பான்
5.	500 x 60 =	30,000	– ஸ்டீலேர் நான்-ஸ்டிக் ஃப்ரை பான்
6.	1,000 x 50 = 1,250 x 60 =	50,000 75,000	– மூடியுடன் கூடிய காளி காப்பர் பாட்டம் குக்பான்
7.	1,000 x 100 = 2,500 x 40 =	1,00,000 1,00,000	– மூடியுடன் கூடிய காளி காப்பர் பாட்டம் சாஸ்பான்
8.	4,000 x 50 =	2,00,000	– 25 கிராம் வெள்ளிக்காசு இரண்டு
9.	5,000 x 60 =	3,00,000	– 2 கிராம் தங்கப் பதக்கம்
10.	10,000 x 50 =	5,00,000	– 4 கிராம் தங்கப் பதக்கம்
11.	20,000 x 50 =	10,00,000	– 8 கிராம் தங்கப் பதக்கம்

* நுழைவுக்கட்டணம் தனி.

ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE TILL 31.10.'92

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி.லிமிடெ
நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 00
போன்: 474451 | 475536 | 470400 | 473932



மறைந்து காத்திருக்கும் மர்மம் என்ன?
5
7
8
9
10
11
ரூ.
20
முதல் முறையாக
லட்சம்
பரிசளிக்க
மோகம்!
அறிமுகப்படுத்துவோர் ஒவ்வொருவருக்குமே
மறைந்து காத்திருக்கிறது ஒரு பரிசு!
அறிமுகப்படுத்துவோர்
ஒவ்வொருவருமே முதல் முறையாக
ஆச்சரியப்படப் போகிறார்கள்.
அதுதான் மறைந்து காத்திருக்கும் பரிசு.
அறிமுகப்படுத்துவோர் கூப்பன்
ஒவ்வொன்றிலுமே மறைந்து காத்திருக்
கும் பரிசின் பெயர் வெளித்தெரியாமல்
மறைக்கப்பட்டிருக்கும். அந்தப் பரிசைப்
பெற நீங்கள் செய்ய வேண்டியது
எல்லாம் இதுதான் — ஒரு புதிய
சந்தாதாரரை அறிமுகப்படுத்தி, பரிசுக்
கூப்பனில் உள்ள வெள்ளிப் பூச்சைத்
தேய்த்து அழிக்க வேண்டியதுதான்.
அதோ! உங்களுடைய பரிசின் பெயர்
தெரிந்துவிட்டது.
மறந்து விடாதீர்கள். ஸ்ரீராம் கிளை
அலுவலர் முன்னிலையில் மட்டுமே
அந்த வெள்ளிப்பூச்சை அழிக்க
வேண்டும். எத்தனை புதிய சந்தாதாரர்
களை வேண்டுமானாலும் அறிமுகப்
படுத்துங்கள். மறைந்து காத்திருக்கும்
பரிசைப் பெற்றிடுங்கள்.
பரிசு!
பரிசு!
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரம் முதல்
தங்கப் பதக்கம்
வரை!
அறிமுகப்படுத்துவோர் பரிசு
சந்தாதாரர்களுக்கு மட்டுமே.
ஸ்ரீராம் சிட்ஸ் — பலருக்கும் பலவகையிலும் பலன்.

பெருந்தன்மைக்கு ஒரு எம்.ஜி.ஆர்!

"உடனே புறப்பட்டு வாங்க" என்று டெலிஃபோனில் செய்தி வந்தால் கவலையும் குழப்பமும் அடைவது இயல்புதானே? நானும் கோபுவும் ராஜேந்திர கிருஷ்ணன் வீட்டை அடைந்து, பதற்றத்துடன் உள்ளே நுழைந்தோம். வரவேற்பு அறையில் அந்தக் கவிஞர் - வசனகர்த்தா அமர்ந்து இருப்பதைப் பார்த்ததும்தான் சற்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டோம்.

"என்ன, காலையில் கொடுத்த ஐயாயிரத்தையும் குதிரை மேல் கட்டி வேட்டு விட்டாகி விட்டதல்லவா?" என்று கேட்டபடியே அவர் அருகே சோபாவில் அமர்ந்தேன்.

"மொத்த ஜாக்பாட்டையும் ஒருத்தன் அடித்துக் கொண்டு போய் விட்டான்" என்றார் அவர்.

"யார் அந்த சண்டாளன்?" - ராஜேந்திர கிருஷ்ணன் ஆறுதல் அடைய வென்றவனை நான் வைதேன்!

ஒரே வார்த்தையில் பதில் வந்தது : "நான்தான்!"

எனக்கு ஆச்சர்யம், படு அதிர்ச்சி, திகைப்பு...

திறந்த வாய் மூடாமலிருந்த என்னைப் பார்த்து ராஜேந்திர கிருஷ்ணன், "ஜாக்பாட் எவ்வளவு தெரியுமா?" என்று கேட்டார்.

"ஒரு லட்சமா?.... ரெண்டா?.... ஐந்து?"

"மயக்கம் போட்டு விடாதீங்க! நாற்பத்தி எட்டு லட்சத்து, எழுபத்தி ஐயாயிரம் ரூபாய்!"

ராஜேந்திர கிருஷ்ணன் எச்சரித்திருக்கவில்லையானால் நான் நிஜமாகவே மயங்கித்தான் விழுந்திருப்பேன்! "எவ்வளவு!" என்று அதிர்ந்தார் கோபு.

'பட்ட நஷ்டம் போதும்; ரேஸ் மோகத்திலிருந்து விடுபட வேண்டும்' என்று சென்னைக்கு ஓடி வந்து விட்டவரை, என் சுயநலத்துக்காகத் திரும்ப பம்பாய்க்கே அழைத்து வந்து, ரேஸ் ஆடப் பணமும் கொடுத்து அனுப்பப் போக, அவருக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா!

இந்திய குதிரை ரேஸ் சரித்திரத்திலேயே இதற்கு முன்பும் சரி, பின்னரும் சரி, இப்படி ஒரு ஜாக்பாட் யாரும் அடித்ததில்லை. இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் மத்திய அரசு கூட விழித்துக் கொண்டு ரேஸில் ஜெயிக்கும் பணத்துக்கும் வரி விதிக்க ஆரம்பித்தது என்று நினைக்கிறேன்!

இந்தி நடிகர் ராஜேந்திர குமார் என் நெருங்கிய நண்பர் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சென்னைக்கு வந்தால் என் வீட்டில் ஒரு வேளையாவது உணவருந்தி, சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் போவார். இம்முறை சென்னை வந்திருந்த போது என் பிரச்னைகளை நன்கு அறிந்த அவர், சித்ராலயாவின் நிலைமை பற்றி விசாரித்தார்.

"பொருளாதார நெருக்கடியை ஓரளவு சமாளிக்க, ஹிந்தி ஹீரோ - 72 பெற்ற வெற்றி உதவியது என்றாலும் முழுவதுமாகத் தீரவில்லை" என்றேன்.

"தமிழிலே ஹீரோ-72 என்ன ஆயிற்று?"

"சிவாஜியும், தம்பி ஷண்முகமும் எவ்வளவோ முயன்றும் எனக்குக் கால்ஷீட் அட்ஜஸ்ட் பண்ணிக் கொடுக்க முடியவில்லை. படம் தொங்கலில்தான் இருக்கிறது."

சிரத்தையுடன் கேட்டுக் கொண்ட ராஜேந்திர குமார், சற்று நேரம் மௌனமாக யோசித்து விட்டுத் திடீரென்று, "ஏன் ஸ்ரீதர், நீங்க ஏன் எம்.ஜி.ஆரை வைத்து ஒரு



படம் எடுக்கக் கூடாது?" என்று கேட்டார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் நான் தயங்கி, தடுமாற, அவரே தொடர்ந்து, "எனக்கென்னமோ உங்க பிரச்னை தீர அது தான் வழி என்று தோன்றுகிறது" என்றார்.

நான் நிதானமாக, "உங்களுக்கு என் மேல் உள்ள அக்கறை எனக்குப் புரிகிறது. ஆனால் உங்கள் ஆலோசனையைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை" என்றேன்.

"ஏன், எம்.ஜி.ஆர். உங்களுக்குக் கால்ஷீட் தரமாட்டாரா?"

''அப்படியில்லை. ஏற்கெனவே எம்.ஜி.ஆரை வைத்து ஒரு படத்தை ஆரம்பித்து, சில காட்சிகள் மட்டுமே எடுக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து எம்.ஜி.ஆரின் ஒத்துழைப்பு கிடைக்காததால் படத்தை அப்படியே நிறுத்த வேண்டியதாகி விட்டது. பிறகு நானே அதே கதையில் சில மாற்றங்கள் செய்து, சிவாஜியை வைத்துப் படமெடுத்ததும் எம்.ஜி.ஆருக்குத் தெரியும். அப்படியிருக்க....''

''ஸ்ரீதர்! இப்போ அந்தப் பழைய கதையை நினைத்துக் கொண்டு எம்.ஜி.ஆர். ஒத்துழைப்புத் தர மறுப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை.''

''நீங்கள் சொல்வது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் அதிலும் ஒரு தர்மசங்கடம். இப்போ எம்.ஜி.ஆர். கால்ஷீட் தருவதாக வைத்துக் கொண்டால் சிவாஜி என்ன நினைப்பார்? 'ஓஹோ! நம்ம படம் பாதியிலேயே நிற்க, எம்.ஜி.ஆரை வைத்துப் படமெடுக்கப் போய் விட்டாரா, ஸ்ரீதர்!' என்று சிவாஜி தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடும். அல்லது எம்.ஜி.ஆரே, 'முதலில் சிவாஜி படத்தை எடுத்து முடித்து விட்டு வா; அப்புறம் பார்க்கலாம்' என்று கூறலாம்....''

ராஜேந்திர குமார் என் சமாதானங்களை ஏற்கவில்லை. ''ஸ்ரீதர், யோசித்து யோசித்துத் தயங்காதீர்கள். எதற்கும் எம்.ஜி.ஆரை அணுகுங்கள். அவர் ஒப்புக் கொள்வார் என்றே எனக்குத் தோன்றுகிறது. உங்க பிரச்னைகளெல்லாம் தீர அது தான் வழி.''

''பெரிய ரிஸ்க் இல்லையா?''

''ரிஸ்க்தான்; துணிந்து ரிஸ்க் எடுங்க.''

ராஜேந்திர குமார் உறுதியாகக் கூற, நானும் அவர் யோசனையை ஏற்பது என்று தீர்மானித்தேன். இதற்கு முன்பு ஓரிரு சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆரை நான் சந்திக்க நேர்ந்த போது அவர், ''நாம் இருவரும் சேர்ந்து ஒரு படம் பண்ண வேண்டும்; முன்பு ஒருமுறை ஆரம்பித்த படம் கூட நின்று போய் விட்டதே'' என்று கூறியது எனக்கு நினைவு இருந்தது. அதை ஒரு வேளை உபசாரமாகக் கூறியிருப்பாரோ? 'யார் என்ன விமர்சனம் செய்தாலும் சரி, எம்.ஜி. ஆரை அணுகுவது' என்று தீர்மானத்துக்கு வந்தேன். ஆனாலும் உள்ளூர ஒரு தயக்கம்... எப்படி எடுத்துக் கொள்வாரோ? என்ன பதில் கூறுவாரோ...? எனவே நான் நேரில் எம்.ஜி.ஆரைப் பார்த்துப் பேசாமல், கன்னையா என்ற நண்பரிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

'சின்னதம்பி' போன்ற படங்களை டைரக்ட் செய்தாரே பி.வாசு, அவருடைய அப்பா பீதாம்பரம், எம்.ஜி.ஆரிடம் மேக்-அப் மேனாக இருந்தார். அவரிடம் என் விருப்பத்தைக் கன்னையா தெரிவிக்க, பீதாம்பரம், எம்.ஜி.ஆரிடம் விஷயத்தைச் சொல்ல, எம்.ஜி.ஆரின் பதில் திரும்பவும் கன்னையா மூலமாக எனக்கு வந்து சேர்ந்தது. அதிலே எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டது. பதில் இதுதான் :

''ஸ்ரீதர் படத்தில் நடிக்கச் சம்மதம். ஆனால் மேலே இதுகுறித்துப் பேச வேண்டும். நாங்கள் சந்திப்பது ஸ்ரீதர் வீட்டிலும் வேண்டாம்; என் வீட்டிலும் வேண்டாம். ஒரு பொது நண்பரின் வீடாக இருக்கலாம். நம்பியார் வீடாக இருந்தால் சௌகரியம்!''

நான் நெகிழ்ந்து உணர்ச்சிவசப்பட்டுப் போனேன். எம்.ஜி.ஆர் என் வீடு தேடி வந்தால் நன்றாயிராது. அதே சமயம் அவர் வீட்டுக்கு நான் போனால் மற்றவர்கள் என்னை கேவலமாக - 'அவர் வீடு தேடி அவர் காலில் விழப்போனேன்' என்று பேசுவார்கள். அந்த அவமானம் எனக்கு நேரக் கூடாது என்று அவர் நினைத்தார். அதனால் 'பொது நண்பர் வீட்டில் சந்திக்கலாம்' என்று தகவல் அனுப்பியிருக்கிறார்!

நான் கன்னையாவிடம் சொன்னேன் : ''எம்.ஜி.ஆரை நான் சென்று சந்திப்பது தான் முறை. எனக்கு இதில் தயக்கமோ சங்கடமோ கிடையாது. அவர் உள்ளம் எனக்குப் புரிந்து விட்டது. 'தோட்டத்தில் வந்து சந்திக்கிறேன்' என்று கூறி விடுங்கள்.''

மறுநாள் காலை தோட்டத்தில் சிற்றுண்டிக்கு வரும்படி எம்.ஜி.ஆரிடமிருந்து தகவல் கிடைத்தது. ராமாவரத்தில் தடபுடலான ''சிற்றுண்டி''! ''உங்களை வைத்துப் படமெடுக்க வாய்ப்புக் கிடைத்ததில் பெருமைப்படுகிறேன்'' என்று நான் கூற, எம்.ஜி.ஆர்., ''உங்களுடன் இணைந்து ஒரு படத்தில் பணியாற்றுவதில் எனக்கும் சந்தோஷம்'' என்றார்.


''மனம் விட்டுச் சில விஷயங்கள் பேச வேண்டும்'' என்றேன்.

''சொல்லுங்க'' என்றார் வசீகரப் புன்னகையுடன்.

''சிவாஜியை வைத்து நான் ஒரு படம் எடுத்துக் கொண்டிருப்பதும், அது பாதியில் நிற்பதும் உங்களுக்குத் தெரியும். நான் எவ்வளவோ முயன்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதமாகிறது. அதை என்றாவது ஒருநாள் முடித்து ரிலீஸ் பண்ணத்தான் போகிறேன். ஆனால் ஒரே படத்தை நம்பிக் கொண்டு, அது ரிலீஸ் ஆகிற வரை காத்திருக்க சித்ராலயாவின் நிதி நிலைமை அனுமதிக்கவில்லை. உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தால் என் நிலைமையைச் சீர்படுத்திக் கொண்டு விட முடியும் என்ற நம்பிக்கையில் வந்திருக்கேன்....''

''புரிகிறது. இன்னும் ஏதாவது...?''

''இருக்கிறது!'' என்றேன்.



● துரைசாமி



● பக்தவத்சலம்



● ராஜம்மாள் தேவதாஸ்

பிரபலங்களுள் பலர் மாதிரிக்குச் சிலர்

சமுதாயம் சார்ந்த கல்விப் பணி

சமுதாயத்தில் அவலமுற்றவர்களை, சும்மா கருணையுடன் பார்த்துக் கொண்டேயிருந்தால் போதுமா? அவர்களுக்குத் தனிக் கல்வி வசதி தர வேண்டாமா? மறுவாழ்வை அடிப்படையாகக் கொண்ட, 'இன்டக்ரேட் ஸ்பெஷல் எஜு கேஷன்' என்று பி.எஸ்ஸி., டிகிரி கோர்ஸ் உருவாக்கியிருக்கிறார், பல்கலைக்கழக அந் தஸ்து பெற்ற அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரித் துணைவேந்தர் ராஜம்மாள் தேவதாஸ். இப்போதே 40 பேர் சேர்ந்து விட்டனராம்!

சுற்றுச்சூழல் பற்றி இப்போது பரபரப்பாகப் பேசப்படுகிறதே? கல்விக்கூட அளவில் எந்த அளவுக்கு அது மாணவிகளுக்குக் கற்பிக்கப்படு கிறது? எனவே, பாட்டனியையும் ஜுவாலஜி யையும் அத்துடன் இணைத்து வாழ்க்கை அறிவி யல் (M.Sc., Life Science) பாடம் தொடங்கியிருக் கிறார்.

அதே போல் ஆங்கில இலக்கியமும், தமிழ் இலக்கியமும் இணைந்து, அத்துடன் இதழியல், மொழிபெயர்ப்பு, ரிப்போர்ட்டிங், எல்லாம் சேர்ந்து, M.A., In Language Development & Literature வகுப்பு!

இங்கே சும்மா சாம்பிளுக்குச் சிலவற்றை மட்டுமே சொல்லியிருக்கிறோம். கல்லூரியின் விளக்கப் புத்தகத்தைப் படித்தால்தான் தெரி கிறது, வேறு எங்கும் இல்லாத எத்தனை எத்தனை பாடத் திட்டங்களை இவர் பார்த்துப் பார்த்து அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்று!

சாமானியருக்கும் உதவும்

மருத்துவப் பணி

ஓர் அரசுப் பொது மருத்துவமனையின் கூட்டம்; ஆனால் ஒரு தனியார் மருத்துவ மனையின் ஒழுங்கு இரண்டையும் ஒருங்கே பார்க்க வேண்டுமானால் கோவை கே.ஜி. ஆஸ்பிடல் தான் பொருத்தமான இடம்.

''1975ல் என் தகப்பனார் கே. கோவிந்தசாமி நாயுடு 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை யாக இதை ஆரம்பித்து வைத்தார். இன்று 250 படுக்கைகள் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, மிக நவீன மருத்துவ வசதிகளும் இங்கே கிடைக் கின்றன!'' என்கிறார் டாக்டர் பக்தவத்சலம்.

திண்டுக்கல்லிலிருந்து சமீபத்தில் நான்கு பேர் 70 சதவிகித தீப்புண் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர். தீவிர சிகிச்சையின் காரணமாக அவர்கள் குணமடைய முடிந்ததாம். ''ஆக்ஸிடென்ட் மேனேஜ்மென்ட் விஷயத்தில் நாங்கள் உடனடியாகச் செயல்படுகிறோம். போலீஸ் கேஸாக இருந்தாலும் நாங்கள் முதலில் பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்றும் நடவடிக்கை களில் இறங்கி விடுவோம். போலீஸ் உபத்திரவம் அநாவசியமாக இருப்பதே இல்லை!''

தொழிலதிபர்களின் நிதியுதவியுடன் அறக் கட்டளை அமைப்பால் 24 மணி நேர மருத்துவ மனையாக நடந்து வருகிறது. கையில் காசு எதுவும் இல்லாமல் திக்கற்ற நிலையில் வந்தும் கூட, இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் நான்கு மாதங்களுக்கு மேலாகச் சிகிச்சை பெற்று வரும் இரு பெண்மணிகளைப் பார்க்க முடிந்தது.

இது வரை நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை இங்கே செய்திருக் கிறார்கள். மிகக் குறைந்த செலவு - முப்பதாயிரம் ரூபாய்க்குள் முடிந்து விடுகிறது!

'டில்டிங் கிரைண்டர்'!

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஆர். துரைசாமி, கோவையின் தொழில் உற்பத்திச் சூழலில் காலடி எடுத்து வைத்த போது பதினாறே வயதுதான். நாலு வருடங்கள் மோட்டார், பம்பு செட்டுகள் தயாரிப்பாளர் களிடம் கடுமையான பயிற்சி. அப்புறம் கண்டு பிடித்ததுதான் 'சாந்தா வெட் கிரைண்டர்'. அரைத்த மாவை வழித்தெடுக்காமல், அப்படியே கவிழ்த்து எடுத்துக் கொள்ளும் வசதி உள்ள 'டில்ட்டிங் டைப்'. அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து, தென் கிழக்கு ஆசிய நாடுகள் தவிர, துபாய், மஸ்கட்டுக்கும் சாந்தா வெட் கிரைண் டரை ஏற்றுமதி செய்து வருகிறார்.

கல்கியின் மாதம் ஒரு நகரம் திட்டத்தின் கீழ் அடுத்ததாக வரு வது உங்கள் தென் சென்னை தான்.

கூவத்துக்கு நிகரான கொசு உற்பத்தி நிலையம் ஆகிவரு கிறது அடையாறு நதி.

அழகான பங்களாக்கள், ஆனால் தெருவில் குப்பை.

இதனை எதிர்த்துப் போராடும் எக்ஸ்னோரா போன்ற சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கை கள்.....

மாதம் ஒரு நகரம்

தென் சென்னை வாசகர்களே தயாராகுங்கள்!

ஊருக்கு நடுவேதான் சிறைச்சாலை இருக்கணுமா?



– சட்டமன்ற உறுப்பினர்

வி. கே. லட்சுமணன் பேட்டி

கோவை - கிழக்கு தொகுதி எம். எல். ஏ., வி. கே. லட்சுமணன், இ. காங்கிரஸைச் சேர்ந்தவர். (பளிச்சென்று சிரிக்கும் மூப்பனார் படம் சுவரில் இருப்பதைப்பார்த்தபிறகு, 'நீங்கள் எந்த கோஷ்டி?' என்ற கேள்வியைத் தவிர்த்தோம்!)

''உங்கள் தொகுதியில் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற, அரசு அதிகாரிகளின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கிறதா?''

''உள்ளூர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருக்கிறது. ஆனால் நிதிவசதிதான் போதாது! சிவானந்தா சாலை முதல் ராமநாதபுரம் வரையிலான இரண்டாவது பாதாள சாக்கடைத் திட்டம் 87ல் முடிந்திருக்க வேண்டும். அப்போது எட்டுக் கோடி ரூபாய்த் திட்டம். இப்போது இருபது கோடி ரூபாய்! ஆனால் பலமுறை இப்படி பிரேரயில் பண்ணி விட்டார்கள். இது முடிந்தால் பெரிய சுகாதாரப் பிரச்னை தீர்ந்த மாதிரி'' என்று கூறிய லட்சுமணனின் வேறு சில யோசனைகள் :

● முப்பது வருடங்களாக உபயோகிக்காமல் உணவு கார்ப்பரேஷன் வசம் 4.18 ஏக்கர் நிலம் இருக்கிறது. சேலத்தில் அவர்களுக்கு அதற்கு ஈடான நிலம் கொடுத்து விட்டால், இதை எடுத்துக் கொள்ளலாம்.

● மத்திய சிறைச்சாலை ஊருக்கு மத்தியில் தான் இருக்க வேண்டுமா? 150 ஏக்கர் நிலப்பரப்பு அது. இங்கே ஒரு ஏக்கர் 1½ கோடி ரூபாய். சிறைச்சாலையை வேறு இடத்துக்கு மாற்றினால் என்ன? இங்கே ஒரு சயின்ஸ் பார்க், பிளானடேரியம், அல்லது இண்டஸ்ட்ரியல் டெக்னாலஜிகல் எக்ஸிபிஷன் வைக்கலாமே? எதுவானாலும் மாணவர்களுக்கும், டூரிஸம் வளர்ச்சிக்கும் உதவுமே?

● வனக் கல்லூரி என்று பெயரே தவிர, அங்கே பெரிதாக எதுவுமில்லை. ''ஊருக்குள்ளே வனக் கல்லூரி வைத்துக் கொண்டால், வனமா இருக்கிறது அங்கே? ஆழியாறு போன்ற பகுதியில் ஏன் வனக் கல்லூரியை வைத்துக் கொள்ளக் கூடாது?

● வாலாங்குளத்துக்குக் குறுக்கே, ஆர்ட்ஸ் காலேஜ் ரோடை இணைக்கும் பைபாஸ் சாலையோடு சாலை அமைத்தால், போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதைச் சொன்னதால், முதலமைச்சரின் திட்டத்தில் அதைச் சேர்த்திருக்கிறார்களாம்.

● புலியகுளத்தில் போலீஸ் பாய்ஸ் கிளப் இருக்கிறது. ஒரு திருமண மண்டபம் கட்டினால் எல்லாருக்கும் பலன் கிடைக்கும். ஆனால் போலீஸ் பாய்ஸ் கிளப்பினர் அவர்களுக்கே முழு இடமும் வேண்டும் என்கிறார்கள். உண்மையில் அங்கே கிளப்பும் இருக்கலாம்; திருமண மண்டபமும் கட்டலாம். அதற்கான நிலம் இருக்கிறது!''

இப்படி எம்.எல்.ஏ. லட்சுமணன், வாமனர் மாதிரி நிலம் கேட்டு நீண்ட பட்டியல் வைத்திருக்கிறார் என்பதோடு, ஒவ்வொன்றையும் தொடர்ந்து விசாரித்துக் கொண்டேதான் இருக்கிறார்.

வாரி வழங்கப்பட்டுப் பின்னர் மறந்து போன வாக்குறுதிகள்....

இளைஞர் சங்கங்களின் ஏற்ற மிகு செயல்பாடுகள்...

... என நல்லதும் கெட்டதும் நிறைய இருக்கிறது எழுத.

உங்கள் கடிதங்களின் அடிப்படையில் சில இடங்களுக்கு நேரில் வந்து பார்த்து சாதனைகளை விவரித்து பிரச்னை களைச் சுட்டிக்காட்டி எழுதுகிறோம்.

தென் சென்னைவாசிகளின் கடிதங்கள் வந்து சேர வேண் டிய கடைசித் தேதி : அக்டோபர் 3உ.

உடனடியாக எழுதுங்கள். உறையின் மேல் 'மாதம் ஒரு நகரம்' என மறவாமல் குறிப்பிடுங்கள்.



– ஆசிரியர்



ரௌடித்தனங்கள் மனித உரிமை கேட்கலாமா?

– கோவை போலீஸ் கமிஷனர் பேட்டி

வழிப்பறி, பிக்பாக்கெட், ரௌடித்தனம், கொலைகள் - இவை எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவதை, கோவையில் பலரும் சுட்டிக் காட்டியதை, நகர போலீஸ் கமிஷனர் கணேசவிடம் எடுத்துச் சொன்ன போது பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார்.

''கொலை என்று நீங்கள் குறிப்பிட்டதில், கோவை டிரஷரியில் இரண்டு பெண்கள் குத்திக் கொல்லப்பட்டது ஒன்று தான் வெளி ஆட்கள் செய்தது. இது கவலைக்குரியது; விசாரணையில் இருக்கிறது. ஆனால் பிற கொலைகள் எல்லாம் சொந்த விவகாரங்கள் முற்றிப் போய் மரணத்தில் முடிந்தவை. இவற்றில் எல்லாம் போலீஸ் விரைந்து செயலாற்றியிருக்கிறது.

''ரௌடித்தனம் கோவையில் மட்டுமின்றி, எல்லா நகரங்களிலும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்காக நான் அதை நியாயப்படுத்த விரும்பவில்லை. கடுமையாக நடவடிக்கை எடுத்தால் இன்னொரு பகுதி மக்களே மனித உரிமைகள் நசுக்கப்படுவதாகக் குரல் எழுப்புகிறார்கள்! கம்பி மீது நடப்பது போலச் செயல்பட வேண்டியிருக்கிறது.


பிக்பாக்கெட்டுகளைக் குறைக்க, மாதத்தின் முதல் வாரம் முழுக்க சர்ப்ரைஸ் செக் நடத்துவதையும், பண்டிகை, திருமண சீஸனில் கூடுதலான ரோந்துகள் போவதையும், சமூக விரோத நபர் என்று கருதப்படும் சுமார் முப்பது பேருக்கு மேல் உள்ளே தள்ளப்பட்டிருப்பதையும் குறிப்பிட்ட கமிஷனர், ''பஸ்ஸில் ஒருவரிடம் பிக்பாக்கெட் செய்யும் போது, அதைக் கவனித்து விடும் மக்கள், ஒன்று சேர்ந்து அவனைப் பிடித்துக் காவல் துறையிடம் ஒப்படைப்பது முடியாத காரியமா?'' என்றும் கேட்கிறார்.

''பணப் புழக்கம் அதிகம் உள்ள தொழில் - வியாபார நகரம் கோவை. அதனால் வழிப்பறி விவகாரங்களில் சிலர் ஈடுபடுகிறார்கள். இவர்களைப் பிடித்து உள்ளே தள்ளினால், நாலு நாளில் 'பெய்லில்' வந்து விடுகிறார்கள்! எனவே குண்டர்கள் சட்டத்தில் ஒரு நபரை உள்ளே வைத்திருக்கலாம் என்றால், அது சம்பந்தமாகக் குற்றம் பதிவு செய்யும் இன்ஸ்பெக்டர், குறைந்தது எட்டு முறையாவது சென்னை வந்து போக வேண்டியிருக்கிறது!

''இவ்வளவு கஷ்டங்களுக்கிடையிலும் கடமையாற்றி வரும் நாங்கள் சமுதாயத்தின் ஒரு அங்கம்தான். எங்கள் கடமையை நாங்கள் திருத்தமாகச் செய்தாலும், சமுதாயத்தின் இதர அங்கங்களின் ஒத்துழைப்பும் கிடைத்தால்தான் நாங்கள் கடமையாற்றுவதன் பலன் எல்லோருக்கும் கிடைக்கும்.''

''அந்த ஓட்டல்ல மட்டும் ஏன் அத்தனைக் கூட்டம்?''

''அங்க மட்டும்



வீட்டுக்கு எடுத்துப்போய் மாவாட்டிக் கொண்டு வந்து கொடுக்கலாமாம்!''

- வலங்கை ஜி. ராஜசேகர்

— கலெக்டர் சங்கர் பேட்டி

மழைத் தண்ணீரை இனி மக்களே சேமிப்பார்கள்

கோவை மாவட்ட ஆட்சியாளராகப் பதவி ஏற்றுக் கொண்ட ஒரு வாரத்திலேயே பேட்டி காணுகிறோமே என்ற நமது தயக்கத்தை அறவே நீக்கி விட்டு, நம்மைச் சந்திக்க மகிழ்ச்சியுடன் நேரம் ஒதுக்கியிருந்தார் கலெக்டர் சி. வி. சங்கர்.

எடுத்த உடனே, பல வாசகர்கள் குறிப்பிட்டு எழுதியிருந்த (நாம் அனுபவ பூர்வமாக அவதிப்பட்ட!) கோவை நகர ஆட்டோ ரிக்‌ஷாக்காரர்களின் அநியாய வாடகை விகிதத்தை எடுத்துச் சொன்னோம்.

''பஸ் வசதி காரணமாக, பெரும்பாலோர் ஆட்டோக்களைப் பயன்படுத்துவதில்லை. அதனால் யார் பயன்படுத்துகிறார்களோ அவர்களிடம் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வசூலிக்கிறார்கள் போலிருக்கிறது. சரி குறைந்தபட்ச வாடகையாக, மீட்டரில் 5 ரூபாய் அல்லது 6 ரூபாய் என்று இங்கே நிர்ணயித்தால், சென்னையிலேயே குறைந்தபட்சம் ரூ. 4.40 தானே என்று முட்டுக்கட்டை போட்டு விடக் கூடும்....''

''போடுவதென்ன? கன்ஸ்யூமர் இயக்கம் கதிர்மதியோன், ஆர். டி. ஓ.வும், கலெக்டரும் ஸ்டே வாங்கி விட்டதாகச் சொன்னாரே?''

''ஆமாம். இதை அரசுப் போக்குவரத்துத் துறை அனுமதிக்கிற போதுதான் அமல்படுத்த முடியும். ஆனால் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு இத்தனை கட்டணம் என்று இப்போதைக்கு அறிவிக்கிற திட்டத்தைப் பரிசீலனை செய்கிறோம்!'' (இதையே போலீஸ் கமிஷனர் கணேசனும் கவனிப்பதாகச் சொன்னார்.)


''காந்திபுரத்திலும், ஒப்பணைக்காரத் தெருவிலும் ஜனநெரிசல், போக்குவரத்து நெரிசல் காரணமாக ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கடப்பது கஷ்டமாக இருப்பதாகவும், இந்த இரண்டு இடங்களிலும் சப்வே கட்டும்படியும் யோசனை சொல்லுகிறார் ஒரு வாசகர்.''

''ஒப்பணைக்காரத் தெரு வெகு குறுகலான தெரு. இங்கே சப்வே சாத்தியமாகாது என்றே தோன்றுகிறது. காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் அருகே, ஏற்கெனவே தமிழ்நாடு அர்பன் டெவலப்மென்ட் திட்டத்தின் கீழ், ஒரு சப்வே கட்டுகிற பரிந்துரை பரிசீலனையில் இருக்கிறது!''

''நியாய விலைக் கடைகளில் திடீர் பரிசோதனை செய்கிற திட்டம் ஏதாவது உண்டா?'' (சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறோம்)

''வட ஆற்காடு மாவட்டத்தில் கோவாபரேடிவ் சப்ரிஜிஸ்திரார் பொறுப்பேற்றுச் சோதனையிடுவதாகக் கேள்விப்பட்டேன். இங்கேயும் பறக்கும் படை அவ்வப்போது சோதனைகள் செய்கிறது. இன்டென்சிவ் ஆக செக் பண்ண, இப்போதும் கூட திருப்பூர் வட்டாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சிவில் சப்ளைஸ் பிரிவு

★ அவிநாசி சாலையில் இருந்த அண்ணா சிலை எங்கே?





தவிர, ரெவின்யூ, உணவுப் பிரிவு போலீஸ், கூட்டுறவுத் துறை எல்லாரையும் இணைத்துக் கொண்டு தொடர்ந்து இன்ஸ்பெக்ஷன் போகிறோம். தீபாவளியின் போது, 'குடும்பப் பொட்டலம்' என்று நியாயமான விலையில் சில அவசியமான பொருட்களை விநியோகிக்கும் திட்டமும் இருக்கிறது. இவை தவிர விஜிலன்ஸ் குழுவும் செயல்படுகிறது. கோடவுனிலிருந்து லாரிகளில் சரக்கு வரும் போது, ஒரு ஜூனியர் இன்ஸ்பெக்டர் லாரியிலேயே கூடப் போகிறார். இதனால் தில்லுமுல்லுகள் தவிர்க்கப்படுகின்றன.''

''ரேஷன் கார்டு வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகச் சில கடிதங்கள்....''

''அச்சிட்ட ஃபாரங்கள் இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்றன. நியாயமான, உண்மையான கேஸ்களில் தாமதம் எதுவுமின்றி - வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலும் வேறு மாநிலங்களிலிருந்து, மாவட்டங்களிலிருந்து மாற்றலாகி வரும் நபர்கள் விஷயத்தில் உடனே கொடுத்து விடுகிறோம். எப்படியும் ஜனவரி 31க்குள் எல்லாருக்குமே புதிய கார்டுகள் கொடுத்தாக வேண்டுமே?''

''இரவு நேரப் பேருந்துகள் இன்னும் கூடுதலாக விட வேண்டும் என்கிறார்களே?''

பி. ஆர். ஓ. மோகனிடமிருந்து, தற்போது விடப்படும் பஸ்கள் போதாது என்று கேட்டறிந்த கலெக்டர், ''இது பற்றி நான் CTC யின் நிர்வாக இயக்குனருடன் அவசியம் பேசுகிறேன். தேவைப்பட்டால் நிச்சயம் இரவு நேர பஸ்களைக் கூடுதலாக விட வேண்டியதுதான்,'' என்று குறிப்பிட்டார்.

''திருப்பூர் பெருகி வரும் வியாபார கேந்திரமாகி விட்டது. கோவைக்கும் திருப்பூருக்கும் இடையே மின்சார ரயில் விடும்படி ஒரு யோசனை சொல்லியிருக்கிறார் ஒரு வாசகர்.''

''குட் ஐடியா! செயல்படுத்தப்பட்டால் நல்ல திட்டமாக இருக்கும். அவசியம் சம்பந்தப்பட்டவர்களிடம் பேசுகிறேன்.''

''மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி வந்த குளம் குட்டைகள் அடைபட்டு, பிளாட்டுகளாக வந்து விட்ட நிலையில், நிலத்தடி நீர் குறைந்து கொண்டே போவதுடன், தண்ணீர்த் தட்டுப்பாடும் வரக் காரணமாகிறது. இதற்கு என்ன செய்யவிருக்கிறீர்கள்?''

''இப்போது முதலமைச்சர் இங்கே வந்திருந்த போது கூட இது பற்றிப் பேசி, இது சம்பந்தமான டெக்னிகல் ஒபினியன் பெற வேண்டும் என்றார். இப்போதிருக்கிற குளங்களின், ஏரிகளின் கரைகளை வலுவாக்கி நீரைத் தேக்க உதவுவோம். இங்கே எல்லாம் பிளாட்டுகள் உருவாகக் கூடாது என்பதே எங்கள் அறிக்கையும் கூட. தவிர மக்களும் இப்போது இதன் அவசியத்தை அவர்களாகவே உணரத் தொடங்கி விட்டார்கள். குனூர், இருகூர் பகுதிகளில் அவர்களாகவே முன்வந்து மழைநீரை வீணாக்காமல் காப்பதற்குக் கற்றுக் கொண்டு விட்டார்கள்.''

கோவை நகரம் தொடர்பான
செய்திகள் கட்டுரைகள் எழுதியோர்:

சாருகேசி,
சாருப்ரபாசுந்தர்

மேலட்டை வண்ணப்படமும்
கோவை தொடர்பான அனைத்துப்
படங்களும் :
யோகா

வட்டமேஜை

முடிவில்லா நன்மை

◆ ''நூதனப் போராட்டங்கள்!'' பற்றிய ஜூலியின் கற்பனையும் அரஸின் ஓவியங்களும் எங்களைச் சளைக்காமல் சிரிக்க வைத்து விட்டன!

சிதம்பரம், ந. கு. பா. பட்டுதுரை.

◆ சோனியா காந்தி எழுதிய 'ராஜீவ்' புத்தகத்திலிருந்து சில பகுதிகளைத் தமிழாக்கத்தில் படித்த போது 'ராஜீவ்' என்னும் அரசியல் தலைவராக அவர் எங்கள் கண்ணுக்குப் படவில்லை. சோனியாவின் கணவராக, ராகுல், பிரியங்காவின் தந்தையாக எங்கள் கண் முன்னே ராஜீவ் வர, நெஞ்சில் வேதனை அடைந்தது.

ஈரோடு - 3, என். ரஜினிதேவராஜ்.

◆ ''மனித ஆசைகளின் முப்பரிமாணங்களை மூன்று சிறுகதைகளும் (தடங்கல், இன்று புதிதாய் மணந்தோம், ராசாத்திக்கு நன்றி) வெளிப்படுத்தின என்றால் நான்காவதாய் 'அஞ்சலி' பரிசுத்த மனத்தினைக் காட்டியது.

குடந்தை, ஆர். ராகவன்.

◆ இந்தா ஜில்லு! கொஞ்சம் நில்லு! நீயும் ஜானுவும் சேர்ந்து அடிக்கிற லூட்டி ஜில் ஜில்லுன்னு இருக்கு!

நவமலை, பி. ஜெயப்பிரகாஷ்.

◆ ''ரோஜா'' - இடைவேளைக்குப் பிறகு ''ஒரு திறனாய்வு'' என்று தலைப்பு தந்திருக்கலாம். ஒட்டுமொத்தமாக, ''சினிமாவில் பயங்கரவாதம்'' என்ற சம்பந்தமில்லாத தலைப்பைக் கொடுத்து விட்டீர்கள். பாதகமில்லை. குறை தலைப்பில் மட்டுமே.

சென்னை - 88, கபில. வேங்கடேசன்.

◆ 'சினிமாவில் பயங்கரவாதம்' என்ற பேட்டிக் கட்டுரையைப் படித்த பிறகுதான் படம் பார்க்க ஓடினேன். மணிரத்தினத்தை நெஞ்சு மறக்காது!

மதுரை - 9, இரா. கல்யாணசுந்தரம்.

◆ மணிரத்தினத்தை மனம்திறந்து பாராட்டிய கே. பாலசந்தருக்கு நிகர் யாரும் இல்லை.

கும்பகோணம் - 1, எஸ். சுரேஷ்.

◆ 'அருள்வாக்'கில் 'மானார்க்கி' என்பது அடைப்புக் குறிக்குள் 'குடியரசு' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது 'முடியாட்சி' என்றிருக்க வேண்டும்.

சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

◆ ''கல்கி'' 13.9.92 தேதி இதழைக் கண்டேன். ஆச்சரியம் ஆனால் உண்மை. இதழில் எங்கெங்கு தேடினாலும் முதல்வரைப் பற்றிய விமர்சனம் இல்லையே என்று நினைக்கும் போது மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை - 4, கி. இராமன்.

◆ ''மருத்துவத்தில் மேல்நாடுகள்தான் சிறந்து விளங்குகின்றன என்று இன்னும் நம்மும் பலரது எண்ணத்தை முறியடிக்கும் வகையில், 'சித்த வைத்தியம் அமெரிக்கா செல்கிறது' கட்டுரை அமைந்திருந்தது.''

தூத்துக்குடி, எஸ். ஸ்வேதா.

◆ தராசு (6.9.92 கல்கி) சாந்தா ஆப்தே அட்டைப் படம் பற்றிக் குறிப்பிட்டதும் 50 ஆண்டுகளுக்கு முன் செய்தித் தொகுப்பில் அதே திரை நட்சத்திரத்தின் படமும் குறிப்பும் இடம்பெற்றதும் வியக்கவைத்த பொருத்தம்.

ஈரோடு, டி. சந்திரன்.

◆ கல்கி, 6.9.92 இதழில் ''சென்னையில் சாலை விபத்துக்கள்'' என்ற பேட்டிக் கட்டுரை படித்தேன். 'பல்லவன் ஓட்டுனர்கள் போக்குவரத்து விதிகளை மதிப்பதேயில்லை' என்பதாக உங்கள் நிருபர் ப்ரியன் ஒரு முடிவுக்கு வந்து, அந்த அடிப்படையில் கேள்வி தொடுத்திருப்பது மிகுந்த மனவருத்தமளிக்கிறது. ஒரு சில ஓட்டுனர்கள் தவறு செய்யலாம். அனைவரும் அல்ல.

சென்னை - 20, டி. பெருமாள்.

◆ ''சதாசிவம் - 90'' என்ற தலையங்கம் (செப். 13) படித்தேன். அன்னாருக்குத் தொண்ணூறு வயது என்பதைப் படித்த போது முதலில் வியப்படைந்தேன். அவரது தோற்றமும், உழைப்பும் அவரை அத்தனை வயதானவராகக் காட்டவில்லை. ஆனால் அவர் செய்துள்ள நற்பணிகளையும், அவரும் எம். எஸ்ஸும் அளித்துள்ள நன்கொடைகளையும் எண்ணிப் பார்க்கும் போது அவருக்கு இருநூறு வயது என்று கூட சொல்லலாம். மற்றவர்களுக்கு, அவர் செய்துள்ளவைகளைச் செய்ய இருநூறு ஆண்டுகள் வேண்டியிருந்திருக்கும். அதனால்தான் இருநூறு வயது என்கிறேன்.

சதாசிவம் தம்பதிகள், ஒரு கையால் கொடுத்தது மறு கைக்குத் தெரியாமல் கொடுத்தார்கள் என்று சொல்வது தவறாகும். இரண்டு கைகளையும் சேர்த்து அள்ளி அள்ளிக் கொடுத்துள்ள போது ஒரு கைக்கு மற்றொரு கை எப்படி தெரியாமல் போகும்?

''சதாசிவம்'' என்றால் முடிவிலா நன்மை'' என்று பொருளாம். திவான்பகதூர் பவானந்தம் அவர்களின் ''தற்காலத் தமிழ் சொல்லகராதி'' சொல்கிறது. நாட்டுக்கும் குறிப்பாகத் தமிழகத்துக்கும் முடிவில்லா நன்மைகளைச் செய்து வரும் சதாசிவம் அவர்களைத் தமிழ் மக்கள் சதா நினைவில் இருத்தி வாழ்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...



ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள 5 1/4 லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

குஜராத் கோ ஆபரேடிவ் மில்க் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001.   ASP-SSMP-109/92 TAM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

திடீரென்று உங்களை உடம்புவலி தாக்கினால்... குடும்பப் பொறுப்பு,
சிரித்துப் பேசி மகிழ்வது, வேலை, எதுவுமே பாரமாகத் தோன்றும்.

உடம்பு வலியைப் போக்குங்கள் ஜண்டு பாம் தடவுங்கள்.

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



உடம்புவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் – நடையிலே தளர்ச்சி,நிற்பதிலும் உட்காருவதிலும் சிரமம், போன்றவை. இதில் கவலைப்பட ஏதுமில்லை.

வலியை நீங்கும் ஜண்டு பாமிலே ஆழமாக ஊடுருவி செயல்புரியும் விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன இவை உடம்புவலி மற்றும் இதர உபாதைகளையும் இழுத்து வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.
இது ஜலதோஷம் மற்றும் தலைவலி போன்ற
உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.

ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

30, 10 மற்றும் 5 கிராம் பேக்கிலே



பாம் ஒன்று
செயல்
மூன்று

1. ஜலதோஷம்
2. தலைவலி
3. உடம்பு வலி

AD PALACE/ZPW/144-92/TAM